
தமிழரசு
அக்டோபர் 2003
மெரினா கடற்கரை
திட்டம்
தமிழக முதலமைச்சர்
புரட்சித்
CMDA



| | | |
|---|---|---|
| *முதல் பக்க அட்டை* | : | சென்னை மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் திட்டம் |
| *இரண்டாம் பக்க அட்டை* | : | மகாத்மா காந்தியடிகள் |
| *நான்காம் பக்க அட்டை* | : | காவலர் சிறார் மன்றங்கள் திறப்பு விழா |


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2003
மலர் : 35 இதழ் : 4
விலை ரூ.10


## இந்த இதழில்...


- சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை — 2
- திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை — 12
- மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் திட்டம் — 22
- பதக்கங்கள் வென்ற 19 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை — 24
- தடகளப் போட்டிகளில் வென்ற வீராங்கனைக்கு ஊக்கத் தொகை — 26
- உலக தடகளப் போட்டியில் வென்ற வீராங்கனைக்குப் பரிசு — 27
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கல்வி பயன்பாட்டுக் குறுந்தகடுகள் — 28
- தமிழ்நாடு அரசின் புதிய தொழில் கொள்கை — 29
- புழலில் நவீன மத்திய சிறைச்சாலை வளாகம் — 31
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் பிரிட்டிஷ் ஹை கமிஷனர் சந்திப்பு — 33
- ஒருங்கிணைந்த நகரியம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் — 34
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்த மகளிருக்கான சிறப்பு வங்கிக் கிளை — 36
- சிறார்களை நல்வழிப்படுத்த காவலர் சிறுவர் மன்றங்கள் — 37
- தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள் விழா — 42
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் மையஅரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறையினர் சந்திப்பு — 45
- "அனைவருக்கும் கல்வி" திட்டம் – தமிழ்நாடு முதலிடம் — 46
- கூடலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி — 47
- குடவரைக் கோயில்கள் — 48
- இந்தியாவிலேயே முதன்முதலாக வளர் இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசித் திட்டம் — 51
- புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்த கண்காணிப்புக் குழுக்கூட்டம் — 52
- இந்தியாவில் முதன்முறையாக ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகம் — 53
- கரூர் மாவட்டத்தில் முன்னோடியாகத் திகழும் தனிநபர் கழிப்பறைத் திட்டம் — 56
- வேலூர் மாவட்டத்தில் குப்பைகளை எருவாக்கும் திட்டம் — 58
- இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் — 59
- தருமபுரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் தார்ச்சாலைகள் — 62
- கடிதம் (சிறுகதை) — 65
- தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா — 71
- சர்க்கரை நோய் வருமுன் காக்க, வந்தபின் தப்பிக்க முடியுமா? — 73
- தேனி மாவட்டம் – திராட்சை சாகுபடியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் — 77
- குமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர அரசின் திட்டப்பணிகள் — 79



*ஆசிரியரும் வெளியிடுபவரும்* :

**வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# இந்திய வரைபடத்தில் தமிழகத்திற்கு ஒப்பற்ற இடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**



சிவகங்கை நகரிலே நடைபெறும் சிவகங்கை மாவட்ட அரசு விழாவிலே கலந்து கொண்டு என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைக் கண்டு உங்களுடன் ஒரு சில கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் மொத்தம் 207 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள – முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கும் இன்று வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகம் எங்கும் புகழ் பெற்ற கற்பக விநாயகர் கோயில் அமைந்துள்ள பிள்ளையார்பட்டி வரலாற்றுப் பெருமையும், ஆன்மிகச் சிறப்பும் மிக்க காளையார் கோயில், ''கண்டேன் தேவியை'' என்று அநுமான் இராமபிரானிடம் சொன்னதால் கண்டதேவி என்று அழைக்கப்படுகின்ற திருத்தலம், 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாக விளங்கும் திருக் கோஷ்டியூர், கத்தோலிக்க கட்டடக் கலையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட தேவாலயத்தைக் கொண்ட இடைக்காட்டூர், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடைய குன்றக் குடி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெருமக்களின் பாடல்களைப் பெற்ற தலமாகிய திருப்புத்தூர், கல்விச் சிறப்பு மிக்க காரைக்குடி ஆகிய சிறப்பு மிக்க ஊர்களால் புகழ் படைத்தது சிவகங்கை மாவட்டம்.

தமிழ்நாட்டில் செந்நெல் சிறப்பாக விளையும் இடங்கள் உண்டு. கனிகள் சிறப்பாக விளையும் இடங்கள் உண்டு. கலைகள் சிறப்பாக விளையும் இடங்கள் உண்டு. ஆனால் வீரம் சிறப்பாக விளையும் இடம் உண்டா ? உண்டு, அந்த இடத்துக்குப் பேர்தான் சிவகங்கைச் சீமை.

சங்க காலத்தில் இருந்தே வீரத்துக்குப் பேர் பெற்றது சிவகங்கை மண். இதைக்கூறுகின்ற போது புறநானூற்றுக் காட்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

**சிவகங்கையின் சிறப்பு**

ஒரு ஊரில் ஒரு வீரக் குடும்பம் இருந்தது. ஒரு மறக்குலப்பெண் தெருவில் விளையாடிக்

கொண்டிருந்த தன் மகனை அழைத்து வந்தாள். சின்னஞ்சிறு பாலகன் அவன். அவளது குடிக்கு ஒரே வாரிசு அவன். முதல் நாள் நிகழ்ந்த போரிலே கணவன் இறந்தான். அதற்கு முதல் நாள் நிகழ்ந்த போரிலே தந்தை ஓர் யானையைக் கொன்று தானும் இறந்தான். அந்த வீரக்குடிமகள் அன்றைக்கும் போர்ப் பறை கேட்டாள். உடனே விளையாடிக் கொண்டிருந்த மகனை அழைத்து அவனுக்கு வெள்ளாடை உடுத்தி வேல் ஒன்றைக் கையில் கொடுத்து போர்க்களம் நோக்கிப் "போய் வா மகனே!'' என்று அனுப்பி வைத்தாள்.

இந்த வீரக் காட்சியைப் புறநானூற்றின் 279–ஆவது பாடல் சித்தரிக்கிறது.

தமிழ் இலக்கியத்தின் ஒப்பற்ற பாடல் அது. அந்தப் பாடலை எழுதியவர் ஒரு பெண் புலவர். பெயர் மாசாத்தியார். அவர் பிறந்த ஊரின் பெயர் ஒக்கூர். அந்த ஒக்கூர் எங்கே உள்ளது? இதோ இந்தச் சிவகங்கை மண்ணிலே உள்ளது. ஒக்கூரில் பிறந்த அந்தப் புலவர் பெருமகள் ஒக்கூர் மாசாத்தியார் என அழைக்கப்பட்டார். இப்படி வீரம் விளைந்த மண்ணில் தானே வீர மங்கை வேலுநாச்சியார் தோன்ற முடியும்? மானம் காத்த மருதுபாண்டியர் தோன்ற முடியும்?

வீர மங்கை வேலு நாச்சியார் கோலோச்சிய பூமி இது.

மருது சகோதரர்கள் தங்கள் வீரத்தால் காத்த சீமை இது.

இந்த மண்ணிலே உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று உங்கள் முன் நின்று சிவகங்கையின் சிறப்பை நினைத்துப் பார்க்கிறேன்.

உலக மக்கள் யாவரும் ஒரே குலம் என்ற சிந்தனை இந்த 21–ஆம் நூற்றாண்டில் கூட செயல்படுத்தப்பட முடியாத சிந்தனையாக உள்ளது. நாட்டுக்கு நாடு ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ஒரே நாட்டுக்குள்ளும் ஓராயிரம் பேதங்கள் இன்றைக்கும் இருப்பதைப் பார்க்கிறோம்.

உலகம் மிகச் சிறிதாகி ஒரே ஒரு ஊர் அளவில் – Global Village – ஆகச் சுருங்கிப் போய் விட்டாலும் மனித மனம் உலகளாவிய அளவில் இன்னும் விரிவடையவில்லை. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே,

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்!'' – என்று சொன்னான் ஒரு தமிழ்க் கவிஞன்.

அந்தத் தமிழ்க் கவிஞனின் பெயர் கணியன் பூங்குன்றன்! அந்தக் கணியன் பூங்குன்றன் தோன்றிய மண் இந்தச் சிவகங்கை மண். ஆகவே 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே உலகளாவிய சிந்தனை உதித்த இடம் இந்த இடம்தான் என்பதை நினைத்துப் பார்க்கிற போது நம் உள்ளத்தில் பெருமிதம் தோன்றுகிறது.

ஒக்கூர் மாசாத்தியார் மற்றும் கணியன் பூங்குன்றன் மட்டுமல்லாமல் மாசாத்தனார் கபிலர் போன்ற பெருமக்கள் வாழ்ந்ததும் இந்த மண் தானே.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற புலவர் பெருமக்களும், கவியரசு கண்ணதாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்களும் பிறந்தது இங்கேதான்.

**புதிய தொழிற்சாலை உருவாக வழி**

சீரும் சிறப்புமிக்க இந்த விழாவிலே சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து மக்களும் பயன்பெறும் வண்ணம் மொத்தம் 109 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 5,945 பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். அந்தப் பணிகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி முகமை மூலமாக 42 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் தொகுப்பு வீடுகள், பல்நோக்கு மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகங்கள், சமுதாயக்கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், தார்ச்சாலைகள், சிமெண்ட் சாலைகள், சிறு பாலங்கள், கதிர் அடிக்கும் களங்கள் போன்ற 5,420 பணிகள் முடிக்கப்பட்டு இன்று அவற்றைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நெடுஞ்சாலைத்துறை மூலமாக 45 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பாலங்கள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளையும், பொதுப்பணித்துறையின் மூலமாக 1 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 30 படுக்கை அறை கொண்ட மருத்துவமனைக் கட்டடம், ஆரம்ப சுகாதார நிலையம், தீயணைப்பு நிலையம், பள்ளி வகுப்பறைகள் ஆகியவற்றையும் இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நகராட்சி மற்றும் பேரூராட்சி துறைகள் மூலமாக 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுகாதார வளாகங்கள், பேருந்து நிலையம், சமுதாயக் கூடங்கள் மற்றும் பல்வேறு கட்டுமானப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றை இன்று திறந்து வைத்ததில் நான் அக மிக மகிழ்கின்றேன்.




தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக 3 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பில் பொட்டப் பாளையம் கிராமத்தில் 33/11 கிலோ வோல்ட் மின் நிலையத்தை திறந்து வைத்ததிலும், நெல்முடிக் கரையில் 110/11 கிலோ வோல்ட் மின் நிலையத்தில் கூடுதலாக 110/33 கிலோ வோல்ட் மின்மாற்றி நிறுவப்பட்டு இன்று திறந்து வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இதனால் சுற்றுப்புற கிராமங்களுக்கு சீரான மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்க உறுதி செய்யப்பட்டுள்ளதோடு இப்பகுதியில் புதிய தொழிற்சாலைகள் உருவாவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## பெண்கள் தன்னம்பிக்கை பெற வேண்டும்

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டும். ஆண்களோடு பெண்கள் சரி நிகர் சமானமாக வாழ்க்கை நடத்த வேண்டும். இதற்கு நாம் வழிவகை காண வேண்டும் என்று பேசிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் இதை சாதிக்க வேண்டுமானால் அதற்கு முதல் தேவை என்ன? காலம் காலமாக நம் சமுதாயத்தில் பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். குழந்தையாக இருக்கும் போது தந்தையைச் சார்ந்து ஒரு பெண் வாழ்வது வழக்கம். பெரியவளான பிறகு, கணவனைச் சார்ந்து இருப்பது வழக்கம். முதியவளான பிறகு மகனைச் சார்ந்திருப்பது வழக்கம். இதுதான் காலம் காலமாக நம் நாட்டில், நம் சமுதாயத்தில் இருந்து வந்த பழக்கம். ஆகவே, ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக வாழ வேண்டுமானால், உயர வேண்டுமானால் அதற்கு முதல் தேவை பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்திருக்கக்கூடாது. சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். பொருளாதார ரீதியாக பெண்கள் வலிமை பெற வேண்டும். தன்னம்பிக்கை பெற வேண்டும். இந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் 1992ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினேன். ஆரம்பத்தில் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கியபோது, வங்கிகள் இந்த குழுக்களின் உறுப்பினர்களாக இருந்த பெண்களுக்கு கடன் வழங்க பெரிதும் தயக்கம் காட்டின. பெண்கள் அல்லவா? இவர்களால் தொழிலை ஒழுங்காக நடத்த முடியுமா? மீண்டும் கடனை அவர்களால் திருப்பிக் கட்ட முடியுமா? என்றெல்லாம் பெரிதும் தயக்கம் காட்டினார்கள். வங்கிகளை மிகவும் வற்புறுத்தி ஆரம்பத்தில் கடன் கொடுக்க வைத்தோம். ஆனால் அதன் பிறகு இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு, இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் இன்றைக்கு பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து இன்றைக்கு நிலைமையே தலைகீழாக மாறி விட்டது. இன்றைக்கு வங்கிகள் இந்த மகளிரை நாடி தாயே, அம்மா! தாயே, உங்களிடம் இருக்கின்ற அந்த சேமிப்பு நிதியை எங்கள் வங்கியில் வைப்புநிதியாகப் போட்டு வையுங்கள் என்று கோருவதற்காக இன்றைக்கு வங்கிகளே மகளிரைத் தேடிச் செல்லுகிறார்கள். இப்படிப்பட்ட உன்னத நிலையை இன்றைக்கு நாம் அடைந்து இருக்கிறோம். அதுமட்டுமல்ல இன்றைக்கு வேலை இல்லாமல் படித்து விட்டு இருக்கின்ற இளைஞர்களும் ஆண்களும் கூட

டிகளிருக்கு மட்டும் ஒரு வழி காட்டியிருக்கிறீர்களே நாங்களும் வேலையில்லாமல் இருக்கிறோம். எங்களுக்கும் சுயஉதவிக்குழுக்கள் அமைத்துத் தாருங்கள் என்று ஆண்கள் இன்றைக்கு கேட்கிறார்கள். ஆகவே மாவட்டந்தோறும் ஆண்கள் சுயஉதவிக்குழுக்களையும் இப்போது நாம் அமைக்க ஆரம்பித்திருக்கிறோம். இதுவரை நம்முடைய வரலாற்றிலேயே ஆண்களுக்கு செய்தது போலவே பெண்களுக்கும் செய்திருக்கிறோம் என்று சொல்லி பெருமைப்பட்டு கொள்வோம். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமையையும் மாற்றி பெண்களுக்கு செய்தது போலவே ஆண்களுக்கும் சுயஉதவிக் குழுக்கள் அமைத்துத் தந்து இருக்கிறோம் என்று சொல்லக்கூடிய மிகச் சிறப்பான ஒரு நிலை தமிழகத்தில் ஏற்பட்டு இருப்பதைப் பார்த்து நான் உண்மையிலேயே பெருமை அடைகிறேன். பூரிப்பு அடைகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில் தற்போது 1 இலட்சத்து 39 ஆயிரத்து 961 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 23 இலட்சத்து 82 ஆயிரத்து 286 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து தற்போது 335 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது.

இன்றைய தினம் மாபெரும் பொருளாதாரப் புரட்சியினை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செய்து வருகின்றன. அதற்கு முன் உதாரணமாக சிவகங்கை மாவட்டம் விளங்குவது கண்டு பெருமிதம் கொள்கின்றேன். சிவகங்கை மாவட்டத்தில் 3,532 பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், 60,254 உறுப்பினர் களுடன் 8 கோடியே 65 இலட்சம் ரூபாய் சேமிப்புத் தொகையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சத்திரப்பட்டி சுயஉதவிக் குழு பெண்கள் கல் குவாரியினைக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கூட்டுறவு வங்கியின் மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடன் உதவியுடன் மிகச் சிறப்பாக கல் குவாரித் தொழில் செய்து வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தில் முற்றிலும் மகளிரால் நடத்தப்படுகின்ற தினந்தோறும் கூரியர் தபால் சேவை இந்தியாவிலேயே ஒரு முதல் முயற்சியாகும். சுய உதவிக் குழுப் பெண்களின் இம்முயற்சி விரைவில் ஆலமரமாக வளர்ந்து தமிழகமெங்கும் மகளிர் கூரியர் சர்வீஸ் சாதனை புரியும் என்பது உறுதி.

இந்தியாவிலேயே எழுதப் படிக்கத் தெரியாத மக்களும் பயன்படுத்தும் வண்ணம் தங்கள் குறைகளைக் கணினியைப் பயன்படுத்தித் தெரிவிக்கும் ''வாய்ஸ்மெயில்'' திட்டத்தை சுய உதவிக் குழுக்களுடன் இணைந்து இம்மாவட்டத்தில் செயல்படுத்தியுள்ளது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வேளையில் இதுவரை மகளிர் சுய உதவிக் குழுக்களில் சேராத பெண்கள் அனைவரும் அவற்றில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்று இங்குள்ள மகளிரை மட்டுமல்லாமல் தமிழகம் எங்கும் உள்ள அனைத்து மகளிரையும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

## தன்னார்வப் பயிலும் வட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறங்களில் படித்து முடித்து விட்டு வேலை தேடுகின்ற இளைஞர்களும், மகளிரும், நகரங்களிலும், மாநகரங்களிலும் உள்ளவர்களுக்கு இணையாக Tamil Nadu Public Service Commission, Union Public Service Commission போன்ற அரசுப் பணியாளர் தேர்வு ஆணையங்களும், தனியார் நிறுவனங்களும் நடத்துகின்ற பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெறும் வகையில் அவர்களது அறிவுத் திறனை வளர்த்திட தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் – Study Circles அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வர எண்ணினேன். அதன் முதற்கட்டமாக 26.6.2002 அன்று 6 ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன. மீதமுள்ள 379 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்களை சிவகங்கையில் இன்று நடைபெறுகின்ற இந்த அரசு விழாவில் தொடங்கி வைத்ததில் நான் மிகவும் மன நிறைவு அடைகின்றேன்.

சிவகங்கை மாவட்டம் வாரி வழங்கும் வள்ளல்களாலும் புகழ் பெற்றது. கடை ஏழு வள்ளல்களில் ஒருவராகிய பாரியின் பரம்பு மலை இங்கு தானே இருக்கிறது. இதைக் குறிப்பிடும் போது 200 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

6,000 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து இந்திய நாட்டைத் தங்கள் வசப்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் தென் தமிழகத்திலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்த காலம் அது. காளையார் கோயிலைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர்கள் வீரத்தில் சிறந்த மருது சகோதரர்களை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்று வெறி கொண்டு அலைந்தார்கள். ஒரு நாள் ஆங்கிலேயப் படை பெரிய மருதுவைத் துரத்தி வந்தது. அவர்களுக்கு அகப்படாமல் பெரிய மருது குதிரையிலே மிக வேகமாகச் சென்றார்.

இரவு முழுவதும் இவ்வாறு குதிரைப் பயணம் செய்து களைத்துப் போன பெரிய மருது விடியும் வேளையில் ஒரு சிற்றூருக்கு வந்தார். அந்த ஊரில் ஒரு



சிறு குடிசை முன் அவருடைய குதிரை நின்றது. பசி, தூக்கம் இல்லாமை, தாகம், களைப்பு, இவற்றால் பாதிக்கப்பட்டிருந்த பெரிய மருது அந்த வீட்டுக் கதவை தட்டினார். அந்த வீட்டில் இருந்தவர் ஒரு ஏழைக் கிழவி. பெரிய மருது அந்தக் கிழவியிடத்திலே தனக்கு மிகவும் பசிப்பதாகவும் உண்பதற்கு ஏதாவது உணவு அளிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். "இரவு தண்ணீரிலே போட்ட சோறு இருக்கிறது. போடவா?'' என்று அந்த மூதாட்டி கேட்டார். "எதையாவது கொடுங்கள் அம்மா'' என்று பெரிய மருது சொன்னார். பழைய சோறும், பழங்கறியும் பரிமாறப்பட்டது. பசியாலும், களைப்பாலும், வாடிப் போயிருந்த பெரிய மருதுவுக்கு அந்த ஏழைக் கிழவி இட்ட உணவு தேவாம்ருதமாக இருந்தது. உண்டு முடிந்ததும் குதிரையை வீட்டின் பின்புறத்திலே கட்டிவிட்டு பெரிய மருது அந்தக் குடிசையில் படுத்துத் தூங்கினார்.

நீண்ட நேரம் தூங்கி எழுந்த பிறகு புதுத் தெம்பும், புது வலிமையும் அவருக்கு ஏற்பட்டு இருந்தன. புறப்படத் தயாராய் இருந்த பெரிய மருது எழுதுவதற்கு ஓலையும் எழுதுகோலும் இருக்குமா என்று கேட்டார். கல்வி அறிவற்ற அந்த ஏழைக் கிழவியிடம் ஏது ஓலையும், எழுதுகோலும்? அவை இல்லை என்று அறிந்த உடன் கூரையிலே இருந்து ஓலை ஒன்றை எடுத்தார். வேலியிலே இருந்து முள் ஒன்றை எடுத்தார். அந்த முள்ளை வைத்துக் கொண்டு ஓலையில் ஏதோ எழுதினார். எழுதிய பின்பு அந்தக் கிழவியிடம் ஓலையைக் கொடுத்து அம்மா, அரண்மனை அதிகாரிகளைச் சென்று பாருங்கள். அதனால் உங்களுக்குப் பயன் உண்டு'' என்று சொல்லி விட்டு, குதிரை மீது ஏறி விரைந்து சென்றார்.

**கொடையும் பிறவிக்குணம்**

சில நாட்களில் மருது சகோதரர்கள் திருப்புத்தூரிலே தூக்கில் இடப்பட்டார்கள். அவ்வாறு தூக்கில் இடுவதற்கு முன்பு பெரிய மருது, "நான் யார் யாருக்கு எதை எதை மானியமாகக் கொடுத்தேனோ அவற்றை எல்லாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்'' என்று ஆங்கிலேயப் படைத் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர்களும் அவ்வாறே கொடுப்பதாக உறுதி அளித்தார்கள். அதற்குப் பின் ஓலையை எடுத்துக் கொண்டு ஏழைக்கிழவி அரண்மனைக்குச் சென்று அதிகாரிகளிடம் ஓலையை காட்டியபோது அதில் பெரிய மருது எழுதியிருந்தபடி அந்தக் கிழவிக்கு அவள் வாழ்ந்த ஊர் முழுதும் மானியமாக வழங்கப்பட்டது. அப்போது தான் அந்தக் கிழவிக்கு தன் வீட்டுக்கு வந்திருந்தவர் பெரிய மருது என்பது தெரியவந்தது. தங்கள் மரணத்திற்குப் பிறகும் தாங்கள் வழங்கிய கொடைகள் உரியவர்களுக்குச் சேர வேண்டுமென்று எண்ணிய பெருமக்கள் வாழ்ந்த பூமி, இந்த பூமி.

கொடையும் பிறவிக் குணம் என்பார்கள்.

மருது சகோதரர்களுக்குக் கொடை என்பது பிறவிக் குணமாக இருந்தது. வீரத்திற்காக மட்டுமல்லாமல் தான தர்மங்களுக்காகவும் அறச் செயல்களுக்காகவும் மருது சகோதரர்கள் இன்றைக்கும் நினைவு கூரப்படுகிறார்கள்.

"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர்கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்? மாபெரும் வீரர், மானம் காப்போர் சரித்திரம் தனிலே நிற்கின்றார்!''



இந்தப் பாடலின்படி மருது சகோதரர்கள் மக்கள் மனதில் நிற்கின்றனர்.

இதயதெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்கள் மனதில் நிற்கின்றார்.

இவ்வாறு, வழங்கிச் சரித்திரம் படைத்த வள்ளல்கள் வாழ்ந்த நாட்டில், வாங்கிச் சரித்திரம் படைப்பதற்காகவே சில தலைவர்கள் புறப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இலட்சியங்களைச் செயல்படுத்தும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் எந்த எந்தப் புதிய திட்டப் பயன்களை வழங்கலாம் என்பது பற்றியே எப்போதும் சிந்தித்து செயல்பட்டு வருகிறேன்.

**மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள்**

சீர்மிகு சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு அரசுத் திட்டப் பயன்களை மாவட்ட மக்கள் அனைவரும் அதிக அளவிலே பெறவேண்டும் என்பதற்காக இந்த மாபெரும் விழாவிலே 77 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,831 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அவற்றில் ஒரு சில முக்கியமான பணிகளைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் முழு சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டத்தினைத் துவக்கி வைப்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன். இந்தியாவிலேயே அதிக அளவிலான மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவது, தமிழ்நாட்டில் தான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக 35 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள், கச்சா வீடுகளை பக்கா வீடுகளாக மாற்றும் பணிகள், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள், வணிக வளாகங்கள் கட்டுதல் முழு சுகாதார திட்டப் பணிகள் போன்ற 5,738 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் அக மிக மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 11 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 92 தனி மின்விசை திட்டங்கள், 500 சிறு மின் விசை திட்டங்கள் மற்றும் 146 கிராம குடிநீர்த் திட்டங்களுக்காக இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 7 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலங்கள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக சிவகங்கையில் 89 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் சோதனை ஓட்டத் திடல், திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள் விளையாட்டு அரங்கங்கள் ஆகியவற்றை அமைக்கும் பணிகளுக்காகவும் இன்று நான் அடிக்கல் நாட்டியதில் பெருமிதம் கொள்கின்றேன்.

கல்வித் துறையின் மூலமாக அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடப் பணிகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற பணிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலமாக கீழப்பூங்குடி, முறையூர், சிவகங்கை ஆகிய இடங்களில் 94 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள் கட்டுவதற்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் அக மிக மகிழ்கின்றேன்.

கிடக்கும் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்படும். அரசின் தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், சிறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்குக் குத்தகைக்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், தனியாரிடம் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்ற பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி வருகிறது.



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக 12 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிங்கம்புணரி, எஸ்.புதூர், ஏ. தெக்கூர் ஆகிய இடங்களில் உள்ள 66/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களை 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களாக உயர் நிலைப்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தரிசு நில மேம்பாடு**

"பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்''

– என்பது வெறும் கவிதை கனவாய்ப் போய் விடாமல் தமிழகத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது அரசின் இலட்சியமாகும்.

இந்த இலட்சியத்தோடு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடுத் திட்டத்தை நான் கொண்டு வந்தேன். இத்திட்டத்தின் கீழ் பயிரே செய்யாமல் வீணாகக்

சிவகங்கை மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் நிலப் பகுதியை அதிக அளவிலே கொண்டது. இங்கு 1 இலட்சம் எக்டேர் நிலம் உபயோகப்படுத்தப் படாத தரிசு நிலமாக இருக்கின்றது. விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 41,118 எக்டேர் தரிசு நிலத்தை 5 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் மக்கள் பங்களிப்போடு மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 21,300 எக்டேர் தரிசு நிலங்களை 10 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலே மேம்பாடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 5,355 எக்டேர் நிலம் கண்டறியப்பட்டு கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.



இது மட்டுமல்லாமல் பாசன வசதியைப் பெருக்கும் நோக்கில் 8 தடுப்பு அணைகள் 3 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், இதே விழாவில் 6 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் 79 கண்மாய்களை மேம்படுத்தும் பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுகளில் 11 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் 226 கண்மாய்கள் ஆழப்படுத்தப்பட்டு பாசன வசதிக்காக மேம்படுத்தப் பட்டுள்ளன என்பதையும் இந்த வேளையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களின் தேவையை அறிந்து திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன். ஆனால், என்னுடைய முயற்சிகள் அனைத்துக்கும் முட்டுக்கட்டை போடுவதையே தொழிலாகக் கொண்ட அரசியல் தலைவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும், நானும் மக்களுக்கு இயன்றபோதெல்லாம் சொல்லி வருகின்றேன்.

ஒரு பையன் பக்கத்து வீட்டில் கோழி முட்டையைத் திருடிக் கொண்டிருந்தான். சில நாள் இப்படி நடந்தது.

ஒரு நாள் இந்தப் பையன் முட்டை திருடியதைப் பார்த்துக் கொண்டிருந்த அடுத்த வீட்டுக்காரர் பையனின் அப்பாவைச் சந்தித்தார்.

"உங்க பையன் செய்வது உங்களுக்கே நல்லா இருக்கா ?'' என்று கேட்டார்.

"அப்படி என்ன செய்கிறான் ?'' என்று அப்பாக்காரர் கேட்டார்.

"எங்கள் வீட்டில் இருப்பது ஒரே ஒரு கோழி. அது இடும் முட்டைகளை உங்கள் பையன் திருடி வருகிறான். இன்று அவன் முட்டை திருடுவதை நானே பார்த்தேன். என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் ? என்று பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

"நீங்கள் வீட்டுக்குப் போங்கள், நான் தக்க நடவடிக்கை எடுக்கிறேன்'' – என்று அப்பாக்காரர் சொன்னார்.

பக்கத்து வீட்டுக்காரர் போய்விட்டார். மறுநாள் முட்டைத் திருட்டு நடைபெறவில்லை. அதற்கு வாய்ப்பே இல்லை!

ஏன் ? கோழியையே காணோம்!

பையன் முட்டை திருடாமல் இருக்க, அப்பா கோழியையே திருடி விட்டார்.

இனி, பையன் முட்டை திருட மாட்டான். அப்பா சொன்ன சொல்லைக் காப்பாற்றி விட்டார்.

இப்படி, மகன் திருடாமல் பார்த்துக் கொள்கிற அப்பாக்களும் உண்டு.

அதற்கு, அவர்கள் கையாளுகிற முறை இருக்கிறதே அது தான் அபாரம்!

மறுநாள் கோழியைப் பறி கொடுத்த பக்கத்து வீட்டுக்காரரிடம் பையனின் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். "நான் ரோஷக்காரன்!" வார்த்தை மாறாதவன். மனுஷனுக்கு வார்த்தை சுத்தம் வேணுமுங்க.''

– இது தந்திரத் தந்தையின் சவடால் பேச்சு.

கோழியைப் பறி கொடுத்தவருடைய நிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

இது ஒரு உருவகக் கதை தான். யார் அந்தத் தந்தை? யார் அந்தப் பிள்ளை? நான் சொல்லித் தெரிய வேண்டும் என்று அவசியம் இல்லை. உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

சமுதாயத்தின் அடித்தள மக்களுக்கு அரசினுடைய பல்வேறுபட்ட நலத்திட்ட உதவிகள் விரைவாக சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு எப்போதும் அளவற்ற அக்கறையும் ஈடுபாடும் உண்டு. எனவே, என்னுடைய எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 25,963 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 20 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்குவதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தாட்கோ மற்றும் வனத்துறை மூலம் 17 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,630 பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள், சுழல் நிதி உதவிகள், கடன் உதவிகள், தையல் இயந்திரங்கள் போன்ற பல்வேறு உதவிகளை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

வருவாய்த் துறை மூலமாக 3,650 பயனாளிகளுக்கு 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகைகள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக 100 பயனாளிகளுக்கு, 1 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சலவைக் கருவிகள் ஆகியவற்றை வழங்குவதிலும் நான் மன நிறைவு அடைகின்றேன்.

மாவட்டத் தொழில் மையம் மூலமாக புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் 5 பயனாளிகளுக்கு தொழில் தொடங்கக் கடன் மற்றும் மானிய உதவி, சமூக நலத்துறை மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் 658 பயனாளிகளுக்கு 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இலவசத் தையல் இயந்திரம், கலப்புத் திருமண உதவித்தொகை, மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காதொலிக் கருவி, ஊன்றுகோல் ஆகியவற்றை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், சுகாதாரத்துறை மூலமாக 1,000 பயனாளிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் தேசிய மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் உதவியும், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலமாக 3,146 பயனாளிகளுக்கு 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் உதவிகளும், கூட்டுறவுத் துறை மற்றும் தொழிலாளர் துறை மூலமாக 1,083 பயனாளிகளுக்கு 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கடன் உதவிகளும் வழங்குவதில் உள்ளபடியே நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள் இவற்றை அடிப்படையாக வைத்து தொழில்களைச் சிறப்போடு செய்து தங்கள் வாழ்வில் மென்மேலும் நலமும் வளமும் பெற்றிட வேண்டுமென்று அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நல்ல நேரத்தில் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு புத்திசாலிகள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு புத்திசாலி கேட்டான் "நாம் செவ்வாய் கிரகத்துக்குப் போகலாமா?''

அடுத்த புத்திசாலி அதை மறுத்தான்.

"சே சே! அது சாதாரணமானவங்க செய்வது. நாம் எல்லாம் வீரர்கள். நம்ம தரத்துக்குத் தகுந்தபடி பெரிதாகச் சாதிக்க வேண்டும். ஆகவே, நாம் சூரியனுக்குப் போகலாம்.'' – என்று சொன்னானாம்.

அந்தப் பக்கம் வந்த ஒருவர் அதைக் கேட்டு விட்டு "சூரியனுக்குப் போனா, மீண்டு வர முடியாதுங்க. எரிஞ்சு போய்டுவீங்க'' என்று சொன்னாராம்.

அப்பொழுது இரண்டாவது புத்திசாலி சொன்னானாம்.

"ஏங்க, எங்களுக்குத் தெரியாதா, சூரியன் சுடும் என்று? சுட்டாச் சுடட்டும்! அதனால் என்ன? பிரயாணத்தை ராத்திரியில் வச்சிக்கிட்டாப் போச்சு!'' என்று சொன்னானாம். எப்பேர்ப்பட்ட புத்திசாலி! பார்த்தீர்களா?

நீங்களே சொல்லுங்கள் சூரியனுக்குச் சென்றால், யாராவது உயிரோடு திரும்ப முடியுமா?

சூரியனுக்குப் போனவர்கள் உயிரோடு திரும்ப முடியாது என்று சிறுவர்களுக்குக் கூடத் தெரியும். சிவகங்கை மாவட்டக்காரர்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.



சூரியனுக்குப் போனால் உயிரோடு திரும்ப முடியாது என்று சிவகங்கை மாவட்டக்காரர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இந்திய வரைபடத்தில் இணையற்ற ஓர் இடத்தை தமிழகத்திற்குப் பெற்றுத் தர உள்ளத்து உறுதியோடும், துணிவோடும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் பாடுபட்டு வருகிறேன்.

இந்தப் பணிக்கு உங்களது ஒத்துழைப்பும், ஆதரவும் எனக்கு நிச்சயம் உண்டு என்பதை நான் நன்கு அறிவேன்.

"காலம் என்பது – உன்
வரவுக்காகக் காத்திருக்கும்
கனியைப் போன்றது
நாளை என்பது – உன்
நன்மைக்காகப் பூத்து நிற்கும் மலரைப்
போன்றது –

என்னும் கண்ணதாசன் அவர்களின் கவிதை வரிகளின்படி, காலம் வெற்றிக் கனியோடு உங்களுக்காகக் காத்திருக்கிறது என்பதைக் கூறிக் கொண்டு உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலே வழங்க வேண்டும் என்று ஆசை இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும் இந்த உதவிகளை நானே மேடையில் வழங்க இருக்கிறேன். மற்ற அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும் இப்போதே இங்கேயே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திட பணியாற்றிய சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். J. ராதா கிருஷ்ணன் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

*23–9–2003 அன்று நடைபெற்ற*
*சிவகங்கை மாவட்ட அரசு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*
*ஆற்றிய*
*விழாப் பேருரை*

# வீழ்த்த வருவது வஞ்சகம் என்றாலும் விவேகத்தால் அதை முறியடிக்க வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

அகிலம் போற்றும் ஆன்மிகத் தலைநகரம் திருவண்ணாமலை! இந்தத் திருவண்ணாமலை நகரைத் தலைநகராய்க் கொண்டதால் இந்த மாவட்டம் ஆன்மிக மாவட்டம் என்னும் சிறப்பினைப் பெறுகின்றது.

இத்தகைய சிறப்பு மிக்க திருவண்ணாமலை நகரில் திருவண்ணாமலை மாவட்டத்தின் அரசு விழாவிலே கலந்து கொண்டு என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைக் காணவும் கண்டு ஒரு சில கருத்துகளைப் பரிமாறவும் மொத்தம் 234 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கவும் இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பிறக்க முக்தி தரும் தலம் உண்டு! இருக்க முக்தி தரும் தலம் உண்டு ! இறக்க முக்தி தரும் தலம் உண்டு !

நினைத்தாலே முக்தி தரும் தலம் உண்டா ?

உண்டு! அந்தத் திருத்தலத்தின் திருப்பெயர் தான் திருவண்ணாமலை !

இது ஞானிகளின் வீடு !

சித்தர்களுக்குத் திருப்பதி !

பக்தர்களின் சரணாலயம்!



எங்கோ பிறந்த ஞானிகளும் இங்கே வந்து ஜோதியாய் விளங்கினார்கள் !

அது இந்த மண்ணின் மாட்சி !

பகவான் ரமணரை ஈர்த்தது திருவண்ணாமலை !

மகான் சேஷாத்திரி சுவாமிகளை ஈர்த்தது திருவண்ணாமலை !

அப்பைய தீட்சிதர், குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், இசக்கி சுவாமிகள், பூண்டிமகான், மகான் ராம்சூரத்குமார் ஆகியோரை ஈர்த்த மலை இந்தத் திருவண்ணாமலை !

பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான இடைக் காட்டுச் சித்தர் வாழ்ந்து இறையருள் பெற்றதும் இந்தத் திருவண்ணாமலை தான் !

மாணிக்க வாசக சுவாமிகள் திருவெம்பாவை பாடியதும் திருவண்ணாமலையில்தான்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெருமக்களும் தங்கள் தேவாரப் பாடல்களில் திருவண்ணாமலையைப் போற்றி இருக்கிறார்கள்.



இத்தனை சிறப்புகளுக்கும் சிகரம் வைத்தாற்போல் ஒரு செய்தி !

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் அவதாரம் செய்தது இங்குதான் !

திருவண்ணாமலை மாவட்டத்தில், செய்யாறு என்று அழைக்கப்படுகின்ற சேயாற்றின் தென் கரையில் உள்ள செங்கம்தான் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'செங்கண்மா' என்ற பெயரில் சிறப்போடு இருந்திருக்கிறது. செங்கத்தை ஆண்ட மன்னன் நன்னன் சேய் நன்னன் என்பவரைப் பற்றி சங்க இலக்கியமாகிய பத்துப் பாட்டில் 'மலைபடு கடாம்' என்னும் இலக்கியம் பாடப்பட்டுள்ளது என்பதை அறிகிற போது, இந்த மாவட்டம் எத்தனை பெரிய நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது என்பதை நினைத்து நாம் பெருமைப்படுகிறோம்.

இவ்வளவு பெருமைக்குரிய திருவண்ணாமலை மாவட்டத்தில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு கை நிறையத் திட்டங்களையும் உதவிகளையும் கொண்டு வந்திருக்கிறேன்.

**குடிநீர்த் திட்டப் பணிகள்**

சீர்மிகு இவ்விழாவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வண்ணம் 124 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6,150 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சித் துறைகள் மூலமாக 48 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்கள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், ஏரிகள்-குளங்கள் தூர்வாரும் பணிகள் போன்ற பல்வேறு பணிகளையும் – நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பாலங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளையும் – தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் ஆணைபோகி மற்றும் சீயமங்கலம் ஆகிய இடங்களில் 2 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களையும் – ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகம் மழையின்றி வறட்சியால் பாதிக்கப்பட்டாலும் தமிழக மக்கள் தாகத்தால் தவிக்கக் கூடாது என்பதுதான் எனது தலைமையில் அமைந்த தமிழக அரசின் உறுதியான கோட்பாடாகும். ஆகவே,



மக்களுக்குக் குடிநீர் அளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக பெய்த மிகக் குறைந்த அளவு மழையின் காரணமாக ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 16 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1581 குடிநீர்ப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இன்றைய விழாவில் 16 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட சாத்தனூர் அணையிலிருந்து 46 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 75 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான நல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – 12 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட ஆரணி, செங்கம், பெரணமல்லூர், தேசூர், வேட்டவலம் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் – 25 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட தனி மின்விசைத் திட்டங்கள், தலைமை நீரேற்று நிலைய திறந்த வெளிக் கிணறுகள் மற்றும் பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள்–ஆக மொத்தம் 55 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்புடைய குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்ததில் நான் உள்ளப்பூர்வமான மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு காட்டில் காட்டு நாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப் புலி தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததை அந்தக்காட்டுநாய் பார்த்தது. நாயைப் பிடித்துத் தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப் புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பிச் செல்வது என்பது காட்டு நாயின் கவலை. ஓடிச் செல்வதால் பயன் இல்லை. ஏனென்றால், எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப் புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது. எனவே, காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்கத் தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றைப் பார்த்ததும் உடனே அந்தக் காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப் புலியின் பக்கம் தன் முதுகைத் திருப்பிக் கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பது போல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப் புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்குத் தயாரான போது காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது:"இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப் புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப் புலி கிடைக்குமா என்று தேடிப் பார்க்க வேண்டும்'' என்றது. இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப் புலி அப்படியே ஸ்தம்பித்து சிலை போல் நின்றுவிட்டது. 'இந்தக் காட்டு நாய் சிறுத்தைப் புலிகளையே கொன்று தின்று விடுகிறதே! அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும்! இதனிடம் அகப்படாமல் தப்பிச் சென்று விட வேண்டும்' என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கிச் சென்று அந்த சிறுத்தைப் புலி புதருக்குள் மறைந்துவிட்டது.

அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. தனக்குத் தெரிந்த தகவலை சிறுத்தைப் புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப் புலியுடன் பேரம் பேசி தனக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது. எனவே, சிறுத்தைப் புலியைப் பின் தொடர்ந்து அந்தக் குரங்கு வேகமாக ஓடிச் சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது. குரங்கு சிறுத்தைப் புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப் புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் சொன்னது. சிறுத்தைப் புலிக்குத் தாங்க



முடியாத கோபமும் ஆத்திரமும் வந்தது. “அந்தக் காட்டு நாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுகிறேன். இந்தக் காட்டில் யார் யாரைக் கொன்று தின்பார்கள் என்பதைக் காட்டுகிறேன்” என்று சொல்லிவிட்டு, “குரங்கே வா! என் முதுகில் ஏறி உட்கார். இரண்டு பேரும் அந்தக் காட்டு நாயைப் பிடிக்கலாம்” என்றது. குரங்கு சிறுத்தைப் புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது. இரண்டும் நாயை நோக்கிச் சென்றன.

சிறுத்தையும் குரங்கும் சேர்ந்து வருவதைக் காட்டு நாய் பார்த்தது. “இந்தத் திருட்டுக் குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டுவிட்டதே! இப்போது என்ன செய்வது ?” என்று அந்தக் காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்தக் காட்டு நாய் பயந்து ஓடவில்லை. அந்தச் சிறுத்தையையும் குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்குத் தன் முதுகைக் காட்டிக் கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்தக் காட்டுநாய் உரத்த குரலில் சொன்னது. “அந்தப் போக்கிரிக் குரங்கு எங்கே போய்த் தொலைந்தது? அதனை நம்பவே முடியாது! நான் சாப்பிடுவதற்கு இன்னொரு சிறுத்தைப் புலியை உண்பதற்குப் பிடித்துக் கொண்டு வா என்று நான் சொல்லி அனுப்பி, அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்தக் குரங்கைக் காணோமே?” என்றது. இதனைக் கேட்டதும், அடுத்து என்ன நடந்திருக்கும் என்று உங்களாலேயே யூகிக்க முடியும். காட்டு நாய் சொன்னதைக் கேட்ட அந்த சிறுத்தைப் புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது; அதனைக் கடித்துக் குதறிக் கொன்று தின்றுவிட்டது.

வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரலாம் ! ஆபத்துகள் வரலாம் ! அவை பயங்கரமாகத் தெரியலாம். இந்தப் பிரச்சினையிலிருந்து மீண்டு நாம் வரவே முடியாது என்று கூட நமக்குத் தோன்றலாம். ஆனால் பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. அப்போது செயலற்றுப் போய் விடக் கூடாது ! பிரச்சினைகளை விட்டு எவ்வளவு தூரம் ஓடினாலும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என்பதை மறந்து விடக் கூடாது !

பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்தியுங்கள்; பிரச்சினைகளை நிச்சயம் வெல்லலாம். பிரச்சினைகளை விட்டு ஓடிப் போக நினைப்பவர்கள் ஒரு நாளும் வாழ்வில் வெற்றி பெற இயலாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரே வழி அவற்றை எதிர் கொள்வது தான் !

வீழ்த்த வருவது வஞ்சகம் என்றாலும் விவேகத்தால் அதை முறியடிக்க வேண்டும். முறியடிக்க முடியும்.

அப்படித்தான் –

வஞ்சகத்தை, சூழ்ச்சியை, பொறாமையை, நேருக்கு நேர் சந்தித்து உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வெற்றி பெற்று வருகிறேன். எனவே, “பிரச்சினைகளைச் சந்தியுங்கள்; அவற்றை வெல்லுங்கள்” என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம்**

மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன; தற்போதும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. என்றாலும், அந்தந்த மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை, உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின்




அடிப்படையிலேயே பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டம் முற்றிலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மாவட்டம். இங்கு பெருந்தொழில் எதுவும் இல்லை. இந்தக் காரணங்களால் பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்த மாவட்டங்களோடு ஒப்பிடும் போது திருவண்ணாமலை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. இந்த நிலைமையை மாற்றி ஒரு முழுமையான வளர்ச்சியைத் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அளிப்பதற்காக நீர்ப்பாசனம் மற்றும் நீர் வடிப் பகுதி வளர்ச்சி, தனிநபர் வருமான வளர்ச்சி, சமூக மேம்பாட்டுத் துறை வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய மைய அரசின் வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் என்னும் திட்டத்தை இன்று தொடங்கி வைத்ததில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் மாநிலத்திலேயே முதல் முதலாக திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் தொடங்கப் படுகிறது என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வளர்ச்சிக்குத் தடையாக உள்ள பல்வேறு இடர்ப்பாடுகளை நீக்கி, வளர்ச்சியின் வேகத்தை உறுதி செய்வதற்கு இந்தத் திட்டம் வழி வகுக்கும். உள்ளாட்சி அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள் இணைந்து திட்டத்தை வடிவமைப்பது முதல் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பது வரை ஒரு கூட்டு முயற்சியாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டம் 3 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்படும். முதல் ஆண்டு செயலாக்கத்திற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும்; பல்வேறு துறைகள் சார்பாக, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் இதன் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒட்டு மொத்த முன்னேற்றம் ஏற்படும் என்பதையும் இந்த நல்ல நேரத்தில் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியாக வலிமை பெற்று, தன்னம்பிக்கைப் பெற்று சொந்தக் காலில் நிற்க வேண்டும். பொருளாதார ரீதியாக பெண்கள் வளர்ச்சி அடைவது மிகவும் அவசியம். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் 1992 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களை நான் துவக்கினேன். ஆரம்பத்தில் இந்தக் குழுக்கள் தொடங்கப்பட்டபோது வங்கிகள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள பெண்களுக்குக் கடன் வழங்க பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், தற்போது இந்த நிலைமை தலைகீழாக மாறி உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதை உணர்ந்து இன்றைக்கு வங்கிகளே இந்த மகளிரை அணுகி, அவர்களைப் பின் தொடர்ந்து, 'உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்கள் வங்கியில் வைப்பு நிதியாகப் போட்டு வையுங்கள்' என்று கோருவதற்காக இந்த மகளிரைத் தேடிச் செல்கிறார்கள்.

இந்த சமூக மாறுதலில் இன்னொரு மைல் கல்லாக 25.9.2003 அன்று முற்றிலும் மகளிருக்கான கனரா வங்கியின் சிறப்புக் கிளையினை, சென்னை தியாகராயர் நகரில் நான் திறந்து வைத்தேன். அந்தக் கிளையின் அனைத்துப் பணியாளர்களும் பெண்கள் தான். வாடிக்கையாளர்களும் முற்றிலும் மகளிரே என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது 1 இலட்சத்து 39 ஆயிரத்து 961 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 23 இலட்சத்து 82 ஆயிரத்து 286 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு தற்போது 335 கோடி ரூபாயாக வளர்ந்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்றைய தினம் 4,314 சுய உதவிக் குழுக்கள் 75,061 உறுப்பினர்களோடு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் சேமிப்புத் தொகையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 3 பொது விநியோகக் கடைகளும் 3 ஆவின் பாலகங்களும் சிறப்பாக நடத்தப் பட்டு வருவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இம்மாவட்டத்தில் 4 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதையும், மொடையூர் கிராமத்தில் சிற்பக் கலை மகளிர் மன்றம் துவக்கப்பட்டு கற்சிலைகள் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பதையும் அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## முழு சுகாதாரத் திட்டம்

சீரும் சிறப்புமாக நடைபெற்று வரும் இந்த விழாவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு அரசு திட்டப் பணிகளின் பயன்களை மாவட்ட மக்கள் அனைவரும் பெருமளவில் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு 91 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 4992 பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றில் முக்கியமான ஒரு சில பணிகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், முழு சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 18 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவிருக்கும் இந்தத் திட்டத்தினை இன்று துவக்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாகவும் நகராட்சித் துறை மூலமாகவும் 37 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு கட்டுமானப் பணிகள், ஏரிகள், குளங்கள் தூர் வாரும் பணிகள், சிமெண்ட் சாலைகள், மழை நீர் வடிகால் பணிகள், பூங்கா மேம்பாட்டுப் பணிகள் போன்றவற்றிற்கும் மிகப் புனிதம் வாய்ந்த பர்வத மலைக்குச் செல்லும் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் சாலை வசதி மற்றும் மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கும்; சுற்றுப்புறச் சூழலுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ள பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, பிளாஸ்டிக் தார்ச் சாலை அமைக்கும் பணிகளுக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில், விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணமாக மின்சார வாரியத்தின் மூலம் பரமனந்தல், மேல் ராவந்தவாடி, சேவூர், புதுப்பாளையம் மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவி வரும் குறைந்த மின்னழுத்தக் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவிருக்கும் நான்கு 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித் துறை மூலமாக 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் செய்யாற்றின் குறுக்கே தடுப்பு அணைகள், கட்டுமானப் பணிகள் – கல்வித் துறை மூலம் 2 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளி வகுப்பறைகள், குடிநீர், கழிவறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் – நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆற்காடு-திண்டிவனம் சாலையை அகலப்படுத்தும் பணிக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண்மைத் துறை, காவல் துறை மற்றும் சுற்றுலாத் துறை மூலமாக, 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கும் – ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகள் மூலமாக 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவிருக்கின்ற மாணவர் விடுதிகளுக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

## தரிசு நில மேம்பாடு

காலங் காலமாக தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. இந்தத் தரிசு நிலங்களை வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றி தமிழகத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது அரசின் இலட்சியமாகும். இந்த இலட்சியத்தோடு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை நான் கொண்டு வந்தேன். இந்தத் திட்டத்தின் கீழ், பயிரே செய்யாமல் வீணாகக் கிடக்கும் தரிசு நிலங்கள், விளை நிலங்களாக மாற்றப்படும். அரசின் தரிசு நிலங்களை, கூட்டாண்மை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், சிறு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு குத்தகைக்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், தனியாரிடம் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்ற பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

விவசாயத்தையே நம்பி வாழும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 26 கோடியே 58 இலட்சம் ரூபாயை நான் ஒதுக்கியுள்ளேன். விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 7500 எக்டேர் தரிசு நிலமும், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 52,000 எக்டேர் நீர் வடிப் பகுதியும் மேம்படுத்தப் படுகின்றன.



ஒரு பலூன் வியாபாரி வண்ண வண்ண பலூன்களை விற்றுக் கொண்டிருந்தார். ஹீலியம் (Helium) என்னும் வாயுவால் நிரப்பப்பட்ட அந்தப் பலூன்கள் உயரத்தில் சென்று பார்ப்பவர்களைப் பரவசப் படுத்திக் கொண்டிருந்தன.

பல்வேறு வண்ணங்களில் பலூன்கள் வானத்தில் பறப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பச்சை வண்ணம், நீல வண்ணம், சிவப்பு வண்ணம், மஞ்சள் வண்ணம், வெள்ளை வண்ணம் என்று பல்வேறு வண்ணங்களில் பலூன்கள் காற்றின் வேகத்திற்கு ஏற்ப உயர உயரச் சென்று கொண்டிருந்தன.

பலூன் வியாபாரி தன் பக்கத்தில் ஒரு குட்டிப் பையன் நிற்பதைப் பார்த்தார். எல்லோரும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்தக் குட்டிப் பையன் மட்டும், பலூன் வியாபாரியையே பார்த்துக் கொண்டிருந்தான். "தம்பி! என்ன வேண்டும்?" என்று அந்த வியாபாரி கேட்டார். "எனக்கு ஒன்றும் வேண்டாம். ஆனால் உங்களிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்க வேண்டும். பச்சை வண்ணம், நீல வண்ணம் என்று பல வண்ண பலூன்கள் வானத்தில் பறப்பதைப் போல கருப்பு வண்ண பலூனும் இப்படி வானத்தில் பறக்குமா?" என்று அந்த குட்டிப் பையன் கேட்டான்.

குட்டிப் பையனின் கேள்வி, பலூன் வியாபாரியின் நெஞ்சைத் தொட்டது.

"தம்பி! பலூன் பறப்பதற்கு நிறம் காரணம் அல்ல! பலூனுக்குள் என்ன இருக்கிறதோ, அது தான் பலூன் பறப்பதற்குக் காரணம்! ஆகவே, கருப்பு நிற பலூனும், கட்டாயம் வானத்தில் பறக்கத் தான் செய்யும்" என்று அந்த பலூன் வியாபாரி பதில் சொன்னார்.

அதைப் போலத் தான் மனிதர்களும்! மனிதர்களின் வெற்றி தோல்விகளை அவர்களுடைய நிறம் நிர்ணயிப்பதில்லை – அவர்களின் உள்ளாற்றல் தான் தீர்மானிக்கிறது.

அன்றாட வாழ்க்கையில் மட்டுமல்லாமல், ஆன்மிகத்தின் அடிப்படையிலும் கூட இந்த உண்மை ஆழ்ந்த பொருள் கொண்டது. 'ஆன்மாக்கள் எல்லாம் ஒன்று' என்பது தானே இந்த மண்ணிலே வாழ்ந்த மாபெரும் ஞானிகள் சொன்ன தத்துவம்!

நீங்கள் என்ன நிறம், என்ன குலம், என்ன மதம் என்பவை உங்கள் தகுதியை நிர்ணயிப்பதில்லை. உங்களுக்குள் நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்பதே உங்கள் வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது; உங்கள் வெற்றியை நிர்ணயிக்கிறது.

இதை உணர்ந்து தான் மகாகவி பாரதியார்,

"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – இங்கு
மானுடர் வேற்றுமை இல்லை"

– என்று அற்புதமாகப் பாடினார்.




என் அன்புக்குரிய திருவண்ணாமலை மாவட்ட மக்களே! உங்கள் மூலம் தமிழக மக்கள் அனைவருக்கும் நான் கூற விரும்புகின்ற செய்தி இதுதான்! உங்களுடைய வண்ணங்கள், உங்களுடைய வடிவங்கள் இவற்றைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவை ஒரு பொருட்டே அல்ல! உங்களுக்குள்ளே இயற்கை கொடுத்து இருக்கின்ற மகத்தான சக்தி இருக்கிறது. அதை நீங்கள் உணர்ந்துகொண்டால் மாபெரும் சாதனைகளை உங்களால் படைக்க முடியும்.

இது தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்கள் மூலமாக அனைவருக்கும் கூற விரும்புகின்ற செய்தி – குறிப்பாக நலத் திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்களுக்குக் கூற விரும்புகிற செய்தி !

**நலத் திட்ட உதவிகள்**

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களை அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்று அடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் எப்போதும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 20,653 பயனாளிகளுக்கு 19 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை இந்த இனிய விழாவில் வழங்குவதில் நான் உள்ளபடியே மனநிறைவு அடைகின்றேன்.

சமூக நலத்துறை மற்றும் ஊனமுற்றோர் நலத் துறைகள் மூலம் 1394 பயனாளிகளுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தையல் இயந்திரங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு நிதி, கலப்புத் திருமண உதவித் திட்ட நிதி, 3 சக்கர வண்டிகள், காலிபர் கருவிகள் போன்ற உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் பால் வளத் துறைகள் மூலமாக 18 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை 17,289 பயனாளிகளுக்கும் – தாட்கோ மூலமாக 7 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் சுழல் நிதி மானியம் மற்றும் பொருளாதார உதவிகளை 165 மகளிர் சுய உதவிக் குழு பயனாளிகளுக்கும் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வருவாய்த் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் நலத் துறைகள் மூலம், 44 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1747 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா, முதியோர் உதவித் தொகை, விபத்து நிவாரணத் தொகை, கல்வி உதவித் தொகை, தையல் இயந்திரம், சலவைப் பெட்டி போன்ற உதவிகள் வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள் இவற்றை அடிப்படையாக வைத்து, தங்கள்



தொழில்களைச் சிறப்பாக செய்து, வாழ்வில் மென்மேலும் நலமும் வளமும் பெற்றிட வேண்டுமென்று அத்தனை பேருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரொம்ப நாட்களுக்கு முன்னால் ஒரு சக்கரவர்த்தி இருந்தார். அவர் ஒரு குதிரை வீரனிடம் சொன்னார் : 'குதிரை மேல் ஏறி சவாரி செய்து, இடையில் எங்கேயும் நிற்காமல் ஒரே பயணத்தில் உன்னால் எவ்வளவு தூரம் நிலப் பரப்பைக் கடக்க முடிகிறதோ அவ்வளவு நிலத்தையும் உனக்கே தானமாகத் தருகிறேன்' என்று கூறினார்.

உடனே, குதிரை மேல் ஏறி அந்தக் குதிரை வீரன் எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகத்துடன் அதிக நிலப் பரப்பைக் கடக்க வேண்டும் என்று வேக வேகமாகச் சென்றான். இன்னும் அதிக நில பரப்பைக் கடக்க வேண்டுமென்ற பேராசையில் மேலும் வேகமாகச் செல்ல வற்புறுத்திக் குதிரையை அடித்துக் கொண்டே இருந்தான். தனக்குப் பசி ஏற்பட்ட போதிலும் தாகம் ஏற்பட்ட போதிலும் களைப்பு ஏற்பட்ட போதிலும் அவன் பயணத்தை நிறுத்தாமல் சென்று கொண்டே இருந்தான். ஏனென்றால், முடிந்த வரை அதிக அளவு நிலப் பரப்பைக் கடந்து, அதைச் சக்கரவர்த்தியிடம் இருந்து பெற வேண்டுமே என்ற பேராசை அவனை விரட்டிக் கொண்டிருந்தது.

"மிகப் பெரிய நிலப்பரப்பைக் கடந்த பின்னர் இறுதியில் ஓர் இடத்திற்கு வந்தான். அப்போது, அதற்கு மேல் அவனால் செல்ல முடியவில்லை – அந்த அளவுக்குக் களைத்துப் போய்விட்டான்! அதற்கு மேல் குதிரையாலும் ஓட முடியவில்லை. குதிரை கீழே விழுந்து இறந்து போய் விட்டது. தானும் மண்ணில் விழுந்தான். தன் உயிர் பிரியப் போவதை உணர்ந்தான். அப்போது தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்: 'இவ்வளவு பெரிய நிலப் பரப்பைக் கடக்க வேண்டுமென்ற பேராசையால் என்னை நானே ஏன் இப்படி விரட்டிக் கொண்டேன்? ஆசை என்னை விரட்டியது! குதிரையை நான் விரட்டினேன்! இப்போது, நான் எங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்? மரணத்தின் வாசலுக்கு அல்லவா வந்து சேர்ந்திருக்கிறேன்? இதோ, இப்போது என் உயிர் பிரியப் போகிறது. இப்போது எனக்குத் தேவை என் உடலை அடக்கம் செய்ய 6 அடி மண் தானே!" இவ்வாறு இறப்பதற்கு முன் அந்தக் குதிரை வீரனுக்கு ஞானம் வந்ததாம் !

இப்படி, காலம் கடந்து புத்தி வருவதால் யாருக்கு என்ன நன்மை ?

சில தலைவர்கள் இருக்கிறார்கள்; அவர்களின் ஆசைக்கு அளவே இல்லை!

தலைமுறை தலைமுறைக்குத் தங்கள் குடும்ப ஆட்சியே தமிழகத்தில் நடைபெற வேண்டும்



என்பதற்காக அவர்கள் தவறுக்கு மேல் தவறு செய்கிறார்கள்; செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் பேராசையால் வீழ்ந்த குதிரை வீரனைப் போன்றவர்கள். இந்தக் குதிரை வீரர்கள் தங்கள் பேராசையின் காரணமாக அன்று ஒரு 'மதுரை வீரனை' வீழ்த்தச் சூழ்ச்சி செய்தார்கள்.

விளைவு ?

வீழ்த்த நினைத்தவர்கள் வீழ்த்தப்பட்டார்கள். அந்த மதுரை வீரர் மன்னாதி மன்னர் ஆனார்.

மறுபடியும் பேராசை அவர்களைத் துரத்துகிறது! என்னை அரசியலில் இருந்து துரத்தப் பார்த்த அந்தப் பேராசைக்காரர்கள் மக்களால் துரத்தப்பட்டார்கள் என்பதை மறந்தே போய் விட்டார்கள்.

அந்தப் பாடத்தை மறுபடியும் மக்கள் புகட்ட வேண்டுமாம்! அதற்காகவே மறுபடியும் மறுபடியும் மோதிப் பார்க்கிறார்கள். எந்தக் களத்தில் நான் நின்றாலும் அந்தக் களத்தில் எனக்குத் துணையாகப் போரிடுபவர்கள் யார்? பொது மக்களாகிய நீங்கள் தானே! எந்தச் சக்தி எனக்கு என்றும் துணையாக இருக்கிறது? உங்கள் சக்தி தானே! மக்கள் சக்தி தானே! மக்கள் சக்திதான் மகத்தான சக்தி. இந்த மந்திரமே எனது தாரக மந்திரம் என்று கூறி, எனது முயற்சிகளுக்கு என்றும் துணை நிற்கும் உங்கள் அன்புக்கு மனதார என் நன்றியை இந்த மகத்தான விழாவின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை உயரமானது. அண்ணா மலையார் கோவிலில் உள்ள ராய கோபுரம் உயரமான கோபுரம்.

இங்கே மலை உயர்ந்தது; கோயில் உயர்ந்தது; இந்த மாவட்ட மக்களாகிய நீங்களும் உயர்ந்தவர்கள்.

திருவண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களில் நெருப்புத் தலம். இது தீபத் திருநகரம்.

தீபத்தை உச்சியில் ஏற்றுகிறோம் – ஏன் ?

அதன் ஒளி தொலைவிலும் தெரிய வேண்டும் என்பதற்காக!

அந்தத் தீப ஒளி போல, திருவண்ணாமலை மக்களாகிய உங்கள் புகழும் உயரத்தில் ஒளி வீசி, உலகத்தை ஈர்க்க வேண்டும் என்று உளமாற வாழ்த்துகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எனது கைகளாலேயே வழங்க வேண்டும் என்று ஆசை இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் இந்த உதவிகளை நான் வழங்க இருக்கிறேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அரசின் உயர் அதிகாரிகளும் இங்கேயே, இப்போதே, உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீரஜ் குமார் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!<br>
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!<br>
என்று கூறி விடை பெறுகிறேன்.<br>
நன்றி, வணக்கம்.

*(7–10–2003 அன்று நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)*

* * *

# மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், 22–9–2003 அன்று, சென்னையில் ஜெர்மன் நாட்டில் தயாரிக்கப்பட்ட Beach Tech 2000 என்னும் புதிய இயந்திரத்தைக் கொண்டு, சென்னை மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் திட்டப் பணியைத் தொடங்கி வைத்தார்.




3.2 கிலோ மீட்டர் நீளமுள்ள, உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான சென்னை மெரினா கடற்கரையை உலகச் சிறப்பு வாய்ந்த கடற்கரையாக ஆக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தபோது, சென்னை மெரினா கடற்கரை மணற்பரப்பில் சேருகின்ற பல்வேறு வகையான குப்பைகளை பணியாளர்களைக் கொண்டு அகற்றுவது என்பது மிகப் பெரிய சவாலாக இருப்பதை அறிந்து, வெளிநாடுகளில் கடற்கரைப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தப் பயன்படுத்தப்படும் இயந்திரத்தைப் போன்று, சென்னைப் பெருநகர் கடற்கரைப் பகுதிகளையும் உயர்ந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட இயந்திரங்கள் மூலம் தூய்மைப்படுத்த அறிவுரை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், கடற்கரைப் பகுதிகளை தூய்மைப்படுத்துவதற்கு உகந்த தொழில்நுட்பம் வாய்ந்த இயந்திரமாக ஜெர்மன் நாட்டின் Beach Tech 2000 என்னும் இயந்திரம் இருப்பதை அறிந்து, அதேபோன்று இயந்திரத்தின் மூலம், சென்னை மெரினா கடற்பரப்பை தூய்மைப்படுத்துவதற்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை மேற்கொண்டது.

Beach Tech 2000 (the Beach Cleaning Equipment) என்னும் இந்த இயந்திரத்தின் மூலம், ஒரு மணி நேரத்தில் 20,000 சதுர மீட்டர் மணற்பரப்பை தூய்மைப்படுத்த முடியும். நாள்தோறும் சேருகின்ற

சிறு கற்கள், கண்ணாடித் துண்டுகள் மற்றும் பல்வேறு குப்பைகள் அனைத்தையும், இந்த இயந்திரம் மணலில் இருந்து சலித்து எடுத்துக் கொண்டு தூய மணலைத் தனியாக பிரித்துக் கொட்டி, கடற்கரையைத் தூய்மைப்படுத்தும். மழைக்காலத்தில் கூட, இந்த இயந்திரத்தைக் கொண்டு, மெரினா கடற்கரையை தூய்மைப்படுத்த முடியும். இந்த இயந்திரத்தின் மூலம் மெரினா கடற்கரை மிகவும் தூய்மையாக்கப்பட்டு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படும். இந்த இயந்திரம் ஆண்டு முழுவதும் தங்கு தடையின்றி, தினமும் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படும். இந்தப் பணி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்பந்தக்காரர் மூலமாக நிறைவேற்றப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மேற்பார்வையில் இயங்க உள்ள Beach Tech 2000 (the Beach Cleaning Equipment) இயந்திரத்தின் மூலம், சென்னை மெரினா கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டப் பணியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **22–9–2003** அன்று சென்னை காந்தி சிலைக்குப் பின்புறம் உள்ள மெரினா கடற்கரையில் கொடி அசைத்து, தொடங்கி வைத்தார்கள். அப்போது, இந்த இயந்திரத்தைக் கொண்டு, மெரினா கடற்கரை மட்டுமன்றி, சென்னைப் பெருநகர் கடற்கரை பகுதிகளான சாந்தோம், பெசன்ட் நகர் (எலியட்ஸ்) கடற்கரைகள், திருவான்மியூர் முதல் நீலாங்கரை வரை உள்ள கடற்கரைப் பகுதிகளையும் தூய்மைப்படுத்தும்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சென்னைப் பெருநகர் கடற்கரை மேம்பாட்டுக் குழுவின் தலைவரும், பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சருமான திரு. ஓ. பன்னீர்செல்வம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.லால் ராணா சைலோ, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் – செயலர் திரு.பி.ஆர்.சம்பத், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



• • •

# பதக்கங்கள் வென்ற 19 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், **29–9–2003** அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, தனித்திறன் போட்டிகளிலும், குழுப் போட்டிகளிலும் தங்கள் திறமையைக் காட்டி தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற **19** விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, ஊக்கத்தொகையாக **9** இலட்சத்து **25** ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

தமிழகத்தின் சார்பில் சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், அந்தப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றிட ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **24–1–2002** அன்று ஆணை பிறப்பித்தார். அந்த ஆணையில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, தனித்திறன் போட்டிகளில் தங்கப்பதக்கம் வெல்வோருக்கு ரூபாய் ஒரு இலட்சம், வெள்ளிப்பதக்கம் வெல்வோருக்கு ரூபாய் **50** ஆயிரம், வெண்கலம் வெல்வோர்க்கு ரூபாய் **25** ஆயிரம் ஊக்கத்தொகையாக வழங்கிடவும், அதேபோல், குழுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்றால், அக்குழுவிலுள்ள ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும், தங்கப்பதக்கம் எனில் ரூபாய் **20** ஆயிரம், வெள்ளி என்றால் ரூபாய் **15** ஆயிரம், வெண்கலம் எனில் ரூபாய் **10** ஆயிரம் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, கடந்த **2001**ஆம் ஆண்டில், நவம்பர் திங்கள் **20** முதல் **25** ஆம் தேதி வரை, பஞ்சாப் மாநிலம் லூதியானா மற்றும் ஜலந்தர் ஆகிய நகரங்களில் நடைபெற்ற **31**ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில், தமிழகத்தின் சார்பில், டேபிள் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில வெள்ளி, ஆண்கள் இரட்டையர் பிரிவில் தங்கம், ஆண்கள் குழுப் பிரிவில் வெள்ளி, கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற திரு.எஸ்.ராமனுக்கு ரூபாய் **1** இலட்சத்து **5** ஆயிரம், ஆண்கள் இரட்டையர் பிரிவில் தங்கம், கலப்பு இரட்டையர் பிரிவில்

வெள்ளி, ஆண்கள் குழுப் பிரிவில் வெள்ளி, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலப்பதக்கம், வென்ற திரு.ஏ.சரத் கமலுக்கு ரூபாய் 75 ஆயிரம், ஆண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு.ஏ.ராஜேஷுக்கு ரூபாய் 15 ஆயிரம், பெண்கள் கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கம், பெண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கம், பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளி, பெண்கள் குழுப் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்ற செல்வி என்.ஆர்.இந்துவுக்கு ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம், கலப்பு இரட்டையர் பிரிவில் வெள்ளி, பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளி, பெண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற செல்வி டி. பிரதீபாவுக்கு ரூபாய் 45 ஆயிரம், பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலம், பெண்கள் இரட்டையர் பிரிவில் வெண்கலம், பெண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற செல்வி என். அருள்செல்விக்கு ரூபாய் 50 ஆயிரம், பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலம், பெண்கள் இரட்டையர் பிரிவில் வெண்கலம், பெண்கள் குழுப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற செல்வி பி.புவனேஸ்வரிக்கு ரூபாய் 50 ஆயிரம், ஆண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. எஸ். ராஜாவுக்கு ரூபாய் 15 ஆயிரம், ஆண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. என். செந்திலுக்கு ரூபாய் 15 ஆயிரம், பெண்கள் குழுப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற ஜெ. சுவர்ணாவுக்கு ரூபாய் 15 ஆயிரம், பளுதூக்கும் போட்டிகளில் 56 கிலோ பிரிவில் பங்கேற்று தங்கப்பதக்கம் வென்ற திரு. டி. முத்துவிற்கு ரூபாய் 1 இலட்சம், 77 கிலோ பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற திரு. எஸ். நந்தகுமாருக்கு ரூபாய் 25 ஆயிரம், 85 கிலோ பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. பிரேம்குமாருக்கு ரூபாய் 50 ஆயிரம், 105 கிலோ பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. கே. எஸ். முத்துவுக்கு ரூபாய் 50 ஆயிரம், 69 கிலோ பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. ஏ. முகம்மது ஜாகீருக்கு ரூபாய் 50 ஆயிரம், குத்துச் சண்டைப் போட்டியில் Women Light Middle வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி டி. சுதாவிற்கு ரூபாய் 50 ஆயிரம், Women Middle பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற தேவிகா ராஜனுக்கு ரூபாய் 25 ஆயிரம், தடகளப் போட்டியில் 4 X 100 மீ தொடர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற எம்.கே. சியாமாந்தகத்திற்கு ரூபாய் 20 ஆயிரம், 4 X 400 மீ தொடர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற பி.பிரியா ரோஸுக்கு ரூபாய் 20 ஆயிரம் ஆக 19 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையாக மொத்தம் 9 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 29.9.2003 அன்று நேரில் வழங்கினார்கள்.

இந்த ஊக்கத் தொகைகளைப் பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், தங்களது உளமார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

• • •



"அறிவியல் அறிஞர்கள், தொழில்நுட்பவாணர்கள், அறிஞர்கள், பொது வாழ்க்கையில் ஈடுபட்டுப் புகழ்பெற்றோர் போன்றோர் தாய்நாட்டுக்குத் தனிச்சிறப்பும், புகழும் கொண்டு வருவதைப் போலவே, விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள ஆண்களும், பெண்களும் தங்கள் தாயகத்துக்குச் சிறப்பும் புகழும் கொண்டு வருகிறார்கள் என்னும் உண்மை, இன்னும் பெருமளவில் உணரப்படவேண்டும். அரசும், சமுதாயமும் கிடைக்கின்ற அனைத்து வளங்களையும், ஒன்று திரட்ட, ஒன்றுபட வேண்டும். அதன் மூலமாகத்தான் விளையாட்டில் வேட்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் தேவைகளை நாம் முழுமையாக நிறைவு செய்ய முடியும்"

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா



# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடகளப் போட்டிகளில் வென்ற வீராங்கனைக்கு வழங்கிய ஊக்கத் தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.10.2003 அன்று தலைமைச் செயலகத்தில், பெங்களூரில் நடைபெற்று வரும் 43–வது தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டு Polevault எனப்படும் கோல் ஊன்றித் தாண்டும் போட்டியில், புதிய தேசிய சாதனை (New National Record) படைத்து தங்கப் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை செல்வி வி.எஸ். சுரேகாவுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்திய அமெச்சூர் தடகளக் கழகங்களின் கூட்டமைப்பின் சார்பில், கர்நாடக மாநிலம் பெங்களூர் நகரில் 43–வது தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளில், Polevault எனப்படும் கோல் ஊன்றித் தாண்டும் போட்டியில் 19 வயது நிரம்பிய தமிழக வீராங்கனை செல்வி வி.எஸ். சுரேகா, 3.51 மீட்டர் உயரம் தாண்டி, புதிய தேசிய சாதனை (New National Record) படைத்து, தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறத் தக்க வகையில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி, அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வெற்றி காணும் அளவிற்கு மேம்படுத்திட, தமிழ்நாடு அரசு "சாம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தை '' செயல்படுத்தி வருகிறது. செல்வி வி.எஸ். சுரேகா இந்த சாம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதன் மூலம் பெற்ற உதவிகள் மற்றும் ஊக்கத்தின் காரணமாகவே, இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், செல்வி வி.எஸ்.சுரேகாவுக்கு, கோல் ஊன்றி தாண்டுதலுக்குரிய இறக்குமதி செய்யப்பட்ட, சிறப்புக் காலணிகள் (Spikes) ஷுக்கள் 2 ஜோடி, இறக்குமதி செய்யப்பட்ட போல்வால்ட் கம்பு (Vaulting Pole) ஆகியவை இலவசமாக வழங்கப் பட்டன. மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அனைத்து நவீன விளையாட்டு அரங்க வசதிகளை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. இதுவன்றி, பெங்களூரில் உள்ள இந்திய விளையாட்டுக் குழுமத்தில், ஒருங்கிணைந்த உடற்கூறு பற்றிய பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டன. மேலும், மனதை ஒருமுகப்படுத்தி, தனித்திறனை ஊக்குவித்து, வெற்றிச் சிந்தனையைத் தூண்டுகிற உயர்நிலையிலான மனவியல் பயிற்சி செல்வி வி.எஸ். சுரேகாவக்கு அளிக்கப்பட்டது. செல்வி வி.எஸ்.சுரேகாவின் திறன்மேம்பாடு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தொடர்ந்து கண்காணிக்கப் பட்டது.

இந்தத் திட்டத்தில் சேரும்போது 3.25 மீட்டர் உயரம் தாண்டிய செல்வி வி.எஸ் சுரேகா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிய ஆக்கத்தாலும், ஊக்கத்தாலும், படிப்படியாக முன்னேறி, தற்பொழுது 3.51 மீட்டர் உயரம் தாண்டி, புதிய தேசிய சாதனை படைத்து, தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவ்வாறு, தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்திய பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில், 43–வது தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டு, Polevault எனப்படும் கோல் ஊன்றித் தாண்டும் போட்டியில், 3.51 மீட்டர் உயரம் தாண்டி, புதிய தேசிய சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றுள்ள செல்வி வி.எஸ். சுரேகாவுக்கு ஊக்கப் பரிசாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை 1.10.2003 அன்று நேரில் வழங்கி, சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைக்க வேண்டும் என்று வாழ்த்திப் பாராட்டினார்கள். அப்போது செல்வி. சுரேகாவின் தாயார் திருமதி. புஷ்பகுமாரி, தந்தை திரு. சுரேஷ்பாபு மற்றும் அவரது பயிற்சியாளர் திரு. மாணிக்கராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

ஊக்கப் பரிசுத் தொகைக்கான காசோலையைப் பெற்றுக் கொண்ட செல்வி வி.எஸ். சுரேகா, விளையாட்டுத் துறையில் தன்னை முழுமையாக தத்து எடுத்துக் கொண்டதைப் போல் அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஊக்கத்தால், இன்னும் பல அரிய சாதனைகளை செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ★



# உலக தடகளப் போட்டியில் வென்ற வீராங்கனைக்குப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 29–9–2003 அன்று தலைமைச் செயலகத்தில், பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகரில் ஆகஸ்ட் 2003இல் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற முதல் தமிழக வீராங்கனை திருமதி அஞ்சு பி.ஜார்ஜ்க்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 25 இலட்சம் மற்றும் அவரது பயிற்சியாளர் திரு.பாபி ஜார்ஜ்க்கு ரொக்கப் பரிசாக ரூபாய் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஆகியவற்றிற்கான காசோலைகளை நேரில் வழங்கி பாராட்டினார்கள்.

திருமதி அஞ்சு பி.ஜார்ஜ், சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று பதக்கங்களை வென்று சாதனை புரிந்த தமிழக விளையாட்டு வீராங்கனை என்பது குறிப்பிடத்தகுந்தது. இவ்வாறு உலக அளவில் பல்வேறு பதக்கங்களைப் பெற்று இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் பெருமைத் தேடித் தந்த திருமதி. அஞ்சு பி.ஜார்ஜ் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு வகையில் ஊக்கமளித்து வருகிறார்கள். 2002ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றமைக் காக 20 இலட்சம் ரூபாயும், காமன்வெல்த் போட்டிகளில் வெண்கலப்பதக்கம் வென்றமைக்காக 10 இலட்சம் ரூபாயும், திருமதி. அஞ்சு பி.ஜார்ஜ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வழங்கியுள்ளார்.

தற்போது, பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் ஆகஸ்ட் 2003–இல் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்று, நீளத்தாண்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்ற முதல் தமிழக வீராங்கனை என்பதோடு, உலக தடகளப் போட்டிகள் வரலாற்றிலேயே இந்தியாவிலிருந்து பதக்கம் பெறும் முதல் பெண்மணி என்ற வியக்கத்தக்க சாதனையை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விளையாட்டு வீராங்கனைகளுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து வரும் திருமதி. அஞ்சு பி.ஜார்ஜ் உலக அளவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றதற்காக 25 இலட்சம் ரூபாய் ஊக்கப் பரிசாக வழங்கப்படும் எனவும் அவரது பயிற்சியாளர் திரு.பாபி ஜார்ஜ் அவர்களுக்கு 3.75 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1–9–2003 அன்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 29–9–2003 அன்று தலைமைச் செயலகத்தில் விளையாட்டு வீராங்கனை திருமதி. அஞ்சு பி.ஜார்ஜ் அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினையும், அவரது கணவரும், பயிற்சியாளருமாகிய திரு.பாபி ஜார்ஜ் அவர்களுக்கு, 3.75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினையும் வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும் 2004ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் சிறப்பாக வெற்றி பெற வேண்டும் என்று தனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தக் காசோலைகளைப் பெற்றுக் கொண்ட திருமதி அஞ்சு பி.ஜார்ஜ் அவர்களும் அவரது பயிற்சியாளர் திரு.பாபி ஜார்ஜ் அவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காட்டுகின்ற ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டியிலும் மற்றும் பங்கேற்க உள்ள சர்வதேச போட்டிகளிலும் சிறப்பாக வெற்றியை ஈட்ட முடியும் என்று நம்புவதாகத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

★ ★ ★

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கல்வி பயன்பாட்டுக் குறுந்தகடுகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 22.9.2003 அன்று தலைமைச் செயலகத்தில், அண்ணா பல்கலைக் கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் இயங்கும் இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் – தமிழ் (The Resource Centre for Indian Language Technology Solutions - Tamil) மையத்தின் மூலம், பள்ளி மாணவ – மாணவியர்களின் கல்வி பயன்பாட்டுக்கு என உருவாக்கப்பட்ட மூன்று குறுந்தகடுகளை (CDs) வெளியிட்டார்.

அண்ணா பல்கலைக் கழகத்தில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் கீழ் இயங்கும் இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் – தமிழ் (The Resource Centre for Indian Language Technology Solution) மையத்தில் தமிழ் மொழிக்காக 25 மென்பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவையன்றி, பள்ளிக் குழந்தைகள் கல்விப் பயன்பாட்டிற்கான பல்லூடகத் தொகுப்பினை (innovative multimedia educational material) உருவாக்குவதும் இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வகையில், பள்ளி மாணவ – மாணவியரின் பயன்பாட்டுக்காக இம்மையத்தின் மூலம் 3 குறுந்தகடுகள் (CDs) தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழ், புவியியல், வேதியியல் ஆகிய பாடங்கள் இந்தக் குறுந்தடுகளில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் பாடக் குறுந்தகட்டில், பல்வகை தமிழ் இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் இசையோடு பாடப்பெற்று அணிநயம், அருஞ்சொற் பொருள், சொற்களைப் பிரித்தரிதல் போன்றவற்றைத் தெளிவுபடுத்தி "பாடி மகிழ்வோம்" என்னும் தலைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. புவியியல் குறுந்தகட்டில் ஆரம்ப நிலையிலிருந்து மேல்நிலை வரையிலான மாணவ, மாணவியர்களுக்குப் பயன்படும் வகையில் புவியியல் பாடங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இத்தொகுப்பு 33 பாடங்களைக் கொண்டுள்ளது. வேதியியல் குறுந்தகடு பத்தாம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கானது. வேதியியல் பாடத்தில் தனித்த ஊக்கத்தை வளர்க்கும் விதத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று குறுந்தகடுகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். இதன் முதல் பிரதிகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ.செம்மலை அவர்களும், உயர் கல்வித் துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர் இ.ஆ.ப., அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

முன்னதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த மூன்று குறுந்தகடுகளிலும் இடம் பெற்றுள்ள விவரங்களை கணினி ஒளித்திரையில் பார்வையிட்டார். அப்போது இந்தக் குறுந்தகடுகள் மிகவும் பயனுள்ளதாகவும், தகவல்கள் நிறைந்ததாகவும் உள்ளது என்று பாராட்டினார். இந்த மூன்று குறுந்தகடுகளும் அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் 10 இலட்சம் ரூபாய் செலவில் பிரதி எடுக்கப்பட்டு 1,500 அரசுப் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை செயலர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் இ. பாலகுருசாமி மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறைத் தலைவர் முனைவர் டி.வி. கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

# தமிழ்நாடு அரசின் புதிய தொழில் கொள்கை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.9.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் புதிய தொழில் கொள்கையை வெளியிட்டார்கள். இந்தப் புதிய தொழில் கொள்கையின் முதற் பிரதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தில் தொழில்துறை மேம்பாட்டுக்கான இதற்கு முந்தைய கொள்கை, 1992ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கை வெளியிடப்பட்டதன் விளைவாக, ஏராளமானத் திட்டங்களைத் தன்னகத்தே ஈர்த்து இந்தியாவில் தொழில் முனைவோர் நாடும் முக்கிய மையமாகத் தமிழ்நாடு உருவானது.

10ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வளர்ச்சி வீதத்தை 8 சதவிகிதமாக உயர்த்துவது, வளர்ந்து வரும் தொழில் போட்டிக்கு ஈடுகொடுக்கும் வகையில், புதிய ஆற்றலை உருவாக்கிட உதவும் அரசின் நோக்கத்தை பிரகடனப்படுத்துவது, கடுமையான போட்டி நிலவும் சந்தையில் தொழில் அமைப்புகள் தங்களது ஆதாயங்களை நிலைப்படுத்திக்கொள்ளத் துணை நிற்பது ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 16.9.2003 அன்று வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய தொழில் கொள்கை 2003–இன் குறிக்கோள்கள் ஆகும். பொது மற்றும் தனியார் பங்களிப்பின் மூலமாக, குறிப்பிடத் தகுந்த அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் வந்து குவியும் வகையில், தமிழகத்தின் தொழில் சூழலை உருவாக்குவதும் இந்தப் புதிய தொழில் கொள்கையின் நோக்கமாகும்.

உள் கட்டமைப்புகளைப் பலப்படுத்துவது, தொழிலாளர் மற்றும் நிதிச் சீர்த்திருத்தங்களை மேற்கொள்வது, தொழில் நடைமுறை விதிகளை எளிமைப்படுத்துவது போன்ற இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாக இந்தக் குறிக்கோள்களை எய்துவதே இந்தப் புதிய தொழில் கொள்கையின் நோக்கமாகும்.

மாநிலத்திலுள்ள தொழில் பூங்காக்களுக்கு தடையற்ற மற்றும் தரமான மின்சக்தியை வழங்குவதை உறுதி செய்து, மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கிட

வேண்டுமென்ற தமிழக அரசின் உயர் நோக்கத்தை இந்தப் புதிய தொழில் கொள்கை வெளிப்படுத்துகிறது. இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டங்களை மறுஆய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை இந்தப் புதிய தொழில் கொள்கை ஏற்றுக் கொள்கிறது.

200 கோடி ரூபாய் தொகுப்புடன் கூடிய ஒரு உள் கட்டமைப்பு நிதியத்தை உருவாக்குவதையும், உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அதிகாரம் அளிக்கும் சட்டம், தொழில் மேம்படுத்தல் மற்றும் தொழில் நடைமுறை விதிகளை எளிமைப்படுத்தும் சட்டம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம் ஆகிய சட்டங்களை இயற்றுவதையும் இந்தப் புதிய தொழில் கொள்கை அறிவிக்கிறது.

இந்தப் புதிய தொழில் கொள்கை, தொழில் மேம்பாட்டுக்கான அரசின் ஊக்க உதவிகளை எடுத்துக் கூறுவதுடன், தொழில் நுட்ப முன்னேற்றம், தொழில் நுட்ப மேம்பாடு, தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், அறிவுத்திறன் சார்ந்த சொத்துரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவிட தொழில் அமைப்புகளுடன் இணைந்து அந்த அமைப்புகளே நிர்வகிக்கும் ஒரு மையத்தை உருவாக்க வகை செய்கிறது

மேலும், இந்தப் புதிய தொழில் கொள்கையானது, தொழில் கூட்டமைப்புகள், நிதி நிறுவனங்கள், அரசு அமைப்புகள் ஆகியவை பங்கேற்கும், "நிலையான கலந்தாய்வுப் பணிக்குழு" ஒன்றை அமைத்திட வழிவகை செய்கிறது. புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கவும், அவ்வப்போதைய தேவைக்கேற்ப கொள்கை மறுஆய்வு மேற்கொள்ளவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொழில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை செயலாளர், திரு. என். நாராயணன் இ.ஆ.ப., தொழில் துறை செயலாளர் திரு. அருண்ராமநாதன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ✶



சென்னை தரமணியில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க சர்வதேசப் பள்ளியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 25.9.2003 அன்று திறந்து வைத்தார்.

# புழலில் நவீன மத்திய சிறைச்சாலை வளாகம்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.9.2003 அன்று திருவள்ளூர் மாவட்டம், புழலில் 221 ஏக்கர் நிலப்பரப்பில் 77 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நவீன மத்திய சிறைச்சாலை வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழகத்தின் மத்திய சிறைச்சாலையானது, தற்போது சென்னை மாநகரில், சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரில், மிகுந்த இட நெருக்கடியும், மிக அதிகமான மக்கள் நெருக்கமும் கொண்ட பகுதியில் அமைந்துள்ளது. இதனைச் சுற்றி உயர்ந்த பல மாடிக் கட்டடங்களும், ரயில்வே நிலையங்களும் இருக்கின்ற காரணத்தால், சிறையின் பாதுகாப்பிற்கு உகந்ததாக இல்லை. இந்தக் காரணங்களுக்காக சுமார் 3,000 சிறைவாசிகளுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில், நவீன மத்திய சிறைச்சாலையை திருவள்ளூர் மாவட்டம், புழலில் அமைத்திட அரசு முடிவு எடுத்துள்ளது. இந்த நவீன சிறைச்சாலை வளாகம், 221 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும். இதன் உத்தேச மதிப்பீடு 77 கோடியே 9 இலட்சம் ரூபாய் ஆகும். இந்தியாவிலேயே மாநில அரசால் நிருவகிக்கப்படுகின்ற முதல் நவீன மிகப்பெரிய சிறை வளாகமாக புதிய புழல் மத்திய சிறை வளாகம் அமையும்.

இந்தப் புதிய புழல் சிறைச்சாலை வளாகத்திற்குள், ஒவ்வொன்றிலும் 1,250 ஆண் சிறைவாசிகளுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் 2 சிறைச் சாலைகளும், 500 பெண் சிறைவாசிகளுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் ஒரு சிறைச்சாலையும் அமைக்கப்படவுள்ளது. மேலும், ஆண்களுக்கான இந்த சிறைச்சாலைகளில், ஒன்று விசாரணை சிறைவாசிகளுக்கென்றும், மற்றொன்று தண்டனை சிறைவாசிகளுக்கென்றும் ஒதுக்கப்படும். அதிக அளவில் பாதுகாப்புத் தேவைப்படும் சிறைவாசிகளை அனுமதிக்கக்கூடிய உயர் பாதுகாப்புச் சூழல் அமைப்பினைக் கொண்டதாக இந்த சிறைச்சாலை அமையும். இந்தப் புதிய சிறைச்சாலை வளாகம், நவீன




கட்டமைப்பு வசதிகளுடன் திறந்தவெளிக் கலையரங்கம் போன்ற அம்சங்களோடு உருவாக்கப் படும். மேலும் சிறைவாசிகளின் மறுவாழ்வுக்குப் பயனுள்ள தொழில் கல்வி பயிற்சி வசதியும் செய்து தரப்பட உள்ளது. இந்தச் சிறைச்சாலை வளாகத்தில் கணினி மையம் ஒன்றும், நூலகம் ஒன்றும் அமைக்கப்படும்.

அனைத்து நவீனப் பாதுகாப்புத் தேவைகளையும், சிறைவாசிகளின் திருந்திய மறுவாழ்விற்கான வசதிகளையும் கொண்டதாக உருவாக இருக்கும், இந்தப் புதிய நவீன மத்திய சிறைச்சாலை வளாகத்திற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.9.2003 அன்று குத்து விளக்கு ஏற்றி கல்வெட்டைத் திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து, கடந்த 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த கலவரத்தின் போது அபாயகரமான கைதிகளை எதிர்கொண்டு, சிறை சட்ட ஒழுங்கினை நிலைநாட்டும் பணியில் கொல்லப்பட்ட, சென்னை மத்திய சிறை, துணைச் சிறை அதிகாரி திரு. ஜெயக்குமார் அவர்களின் துணைவியார் திருமதி. விமலா ஜெயக்குமார் அவர்களிடம், மதுரை அவனியாபுரத்தில் 9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உயர் வருவாய் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த விழாவில் வழங்கினார்கள்.

மேலும், இந்தவிழாவில், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில், 2002–2003 ஆம் ஆண்டுக்குரிய ஈவுத்தொகையான 30 இலட்ச ரூபாய்க்கான காசோலையை, காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பி.பி. நெய்ல்வால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சிறைவாசிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களையும், புதிதாக உருவாகவுள்ள புழல் நவீன மத்திய சிறைச்சாலை வளாகத்தின் மாதிரி வடிவத்தையும் பார்வையிட்டார்கள்.

இந்த விழாவில், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், உள்துறை செயலாளர் திரு. சையத் முனீர் ஹோடா, இ.ஆ.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பி.பி.நெய்ல்வால், சிறைத்துறை கூடுதல் தலைமை இயக்குநர், திரு. போலாநாத், ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 29.9.2003 அன்று தலைமைச் செயலகத்தில், புதுடெல்லியிலுள்ள பிரிட்டிஷ் நாட்டின் ஹைகமிஷனர் ஸர் ராப் யங் (Sir Rob Young, High Commissioner of Britain in New Delhi) அவர்கள் சந்தித்துப் பேசினார். அப்போது தென்னிந்தியாவிற்கான பிரிட்டிஷ் துணை ஹைகமிஷனர் திரு. ஸ்டுவர்ட் இன்னஸ் (Mr. Stuart Innes, Deputy High Commissioner, South India) உடன் இருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரிட்டிஷ் நாட்டின் வெளி நாடுகளுக்கு உதவி வழங்கும் நிறுவனமான Department for International Development (DFID)தமிழ்நாட்டிற்கும் உதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தியாவில் 4 மாநிலங்களுக்கு மட்டுமே இவ்வாறு உதவி வழங்கப்படுகின்றது என்றும், தமிழ்நாட்டிற்கும் அவ்வாறு உதவி வழங்கத் தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் ஹை கமிஷனர் தெரிவித்தார். அதேபோல் தற்போது உலக வங்கி, தமிழ்நாட்டிற்கு, வறுமை தணிப்புத் திட்டம், மருத்துவம் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு உதவி வழங்கப் பரிசீலித்து வருகின்றது. இத்திட்டங்களுக்கு உலக வங்கியுடன் பிரிட்டிஷ் உதவி நிறுவனம் DFID-யும் சேர்ந்து உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வைத்தார். இதனையும் தீவிரமாகப் பரிசீலிப்பதாக பிரிட்டிஷ் ஹைகமிஷனர் உறுதி அளித்தார்.

சென்னை மாநகரத்தில் ஆற்றோரம் மற்றும் கால்வாய் ஓரம் வாழும் குடிசைவாழ் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்திற்கும் உதவி அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அத்துடன் ஆறு மற்றும் கால்வாய்களைச் சுத்தப்படுத்த பிரிட்டிஷ் உதவி நிறுவனத்தின் வாயிலாக உதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இது பற்றி தீவிரமாகப் பரிசீலிப்பதாக பிரிட்டிஷ் ஹைகமிஷனர் தெரிவித்தார்.

உலகம் தழுவிய வர்த்தக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தை, தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சரியான உச்சரிப்புடன் பிழையின்றிக் கற்பிக்க வேண்டும் என்பதற்கு தான் அதிக முக்கியத்துவம் அளிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, இதற்கு முழு உதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதற்கான விரிவான திட்டத்தை ஏற்படுத்துவதற்கும், உதவி அளிப்பதற்கும் பிரிட்டிஷ் அரசு முன் வரும் என்று ஹைகமிஷனர் உறுதி அளித்தார்.

* * *

# ஒருங்கிணைந்த நகரியம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், 16.9.2003 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னையை அடுத்துள்ள சிறுசேரியில், ஒருங்கிணைந்த நகரியம் அமைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்று கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில், பணியை மேற்கொள்ள உள்ள சிங்கப்பூர் நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பில், சிங்கப்பூர் லீ கிம் டா ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயல் தலைவர் திரு. லீ சூன் டெக் (Mr. Lee Soon Teck, Executive Chairman, Lee Kim Tah Holdings Limited) அவர்களும், தமிழக அரசின் சார்பில் தொழில் துறைச் செயலாளர் திரு. அருண் ராமநாதன் இ.ஆ.ப., அவர்களும் கையெழுத்திட்டனர். அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சென்னையில் பழைய மகாபலிபுரம் சாலையில் டைடல் தொழில்நுட்பப் பூங்காவில் இருந்து, சிறுசேரி வரையிலான நீண்ட பகுதி, தகவல், தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் தயாரிப்பு முன்னணி நிறுவனங்களின் அமைவிடமாக விளங்கி வருகிறது. தமிழக அரசின் "சிப்காட்" நிறுவனம் சிறுசேரியில் ஏறத்தாழ 980 ஏக்கர் பரப்பில் ஒரு தகவல் தொழில் நுட்ப பூங்காவினை உருவாக்கியுள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் நிறுவனங்களில் பணியாற்றும் ஏராளமான தொழில்நுட்ப வல்லுனர்களின், வளர்ந்து வளரும் தரமான குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்தத் தகவல் தொழில்நுட்பப் பேட்டையில் ஒரு ஒருங்கிணைந்த நகரியத்தினை உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முழு அளவில் முன் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், சிறுசேரியில் உள்ள சிப்காட் தொழில்நுட்பப் பூங்கா வளாகத்தில் ஓர் ஒருங்கிணைந்த நகரியத்தை உருவாக்குவதற்காக லீ கிம் டா ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமையிலான சிங்கப்பூர்

நிறுவனங்களின் கூட்டமைப்புடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. சிப்காட் மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களுடன் கலந்து பேசியபின், சிங்கப்பூர் கூட்டமைப்பு சிறுசேரி தொழில்நுட்பப் பூங்கா வளாகத்தில் சுமார் 102 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் ஒருங்கிணைந்த நகரியத்தை உருவாக்க முன் வந்துள்ளது.

ஒவ்வொரு கட்டத்திலும், 200 குடியிருப்புகள் என, மொத்தம் 6,000 குடியிருப்புகள் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு இந்த ஒருங்கிணைந்த நகரியம் உருவாக்கப்பட உள்ளது. இதன் முதற்கட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்நுட்பம் சார்ந்த சேவைப்பணிகளுக்கான இடஒதுக்கீட்டுடன் கூடிய அலுவலக மற்றும் வணிக வளாகங்கள், பள்ளிகள், சமுதாய மற்றும் மருத்துவச் சேவைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் போன்ற வசதிகளை இந்த நகரியம் தன்னகத்தே கொண்டிருக்கும்.

மூன்று கட்டங்களில் உருவாகும் இந்தத் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு சுமார் 500 கோடி ரூபாய் ஆகும்.

சிப்காட் நிறுவனம், இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை விலைக்கு வழங்கும். தமிழ்நாடு அரசு, தனது பல்வேறு அமைப்புகளின் மூலமாக இத்திட்டத்திற்குத் தேவையான சாலை இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை நகரியத்தின் புறஎல்லை வரை செய்து தரும். இத்திட்டத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம், நுகர்வோருக்கு நேரடியாக நுகர்வோரின் செலவில் மின்வசதி செய்து தரும்.

நகரியத்திற்கு உள்ளே செய்யப்பட வேண்டிய அனைத்து முன்னேற்றப் பணிகளையும், சிங்கப்பூர் கூட்டமைப்பு மேற்கொள்ளும்.

இந்த நிகழ்ச்சியில், தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு சட்டம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.நயினார்நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு. அருண் இராமநாதன் இ.ஆ.ப., சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஆர். சீனிவாசன் இ.ஆ.ப., ஆகியோரும் சிங்கப்பூர் கூட்டு நிறுவனங்களின் சார்பில் லீ கிம் டா ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயல் தலைவர் லீ சூன் டெக் (Lee Soon Teck, Executive Chairman, Lee Kim Tah Holdings Limited) இயக்குநர் ஆர். ஆதப்பன் (R.Athappan, Director, Lee Kim Tah Holdings Limited) பௌஸ்டெட் சிங்கப்பூர் நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஜேம்ஸ் லிம் (James Lim, Executive Director, Bousteed Singapore Limited) லீ கிம் டா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின், இயக்குநர்கள், லோ பாட் கியாங், வாங் சின் பாட் (Loh Fatt Kheong and Wong Chin Fatt, Directors of Lee Kim Tah Private Limited) ஒப்பந்த மேலாளர் ஜெராட் சியா, (Jarrod Seah, Contracts Manager, Lee Kim Tah Privated Limited) பி.பி. வென்சர் நிறுவனத்தின் ஊக்குவிப்பாளர் வி. சுப்ரமணியம் (V. Subramaniam, Promoter, BP Ventures Limited) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

* * *

## புளிப்பை விரும்பும் குழந்தைகள்



குழந்தைப் பருவத்தில் புளிப்பு சுவையை அதிகம் விரும்பு கிறார்கள் என்று கூறுகின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். உப்பு மற்றும் இனிப்பான உணவுகளை ஆரம்பத்தில் விரும்பினாலும் இளம் பருவத்தின் இறுதியில் அவை மறைந்து விடுகின்றன என்கிறார் ஆராய்ச்சியாளர் ஜூலி மென்னலா. புளிப்பு சுவையை விரும்பும் குழந்தைகள் பின்னாளில் காய்கறிகளையும் பழங்களையும் விரும்புகின்றனராம்.

## இரும்புச் சத்து வேண்டுமா?

சிறுகீரை, அரைக்கீரை, பாகற்காய், பீன்ஸ், வாழைக்காய், சுண்டைக்காய், உலர் திராட்சை, அன்னாசிப்பழம், மாதுளை, பேரீட்சை, கோதுமை, கேழ்வரகு, கொள்ளு, பட்டாணி, வெல்லம், முட்டை போன்ற உணவுகளில் இரும்புச் சத்து உள்ளது. இந்த உணவுகளை வளர் இளம் பருவத்தினருக்கு வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சபையின் 'யுனிசெப்' நிறுவனம் கூறியுள்ளது.





# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்த மகளிருக்கான சிறப்பு வங்கிக் கிளை!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.9.2003 அன்று சென்னையில், தியாகராயநகர் பர்கிட் சாலையில் கனரா வங்கியின் சார்பில், அமைக்கப்பட்டுள்ள, முற்றிலும் மகளிருக்கான சிறப்பு வங்கிக் கிளையினைத் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தில் மகளிருக்கு அதிகாரம் அளித்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண்கள் தொழில் முனைவோர் ஆவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் முதலான பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த முன் மாதிரியான முயற்சிகளை வழிகாட்டியாக கொண்டு தேசியமயமாக்கப்பட்ட கனரா வங்கியானது சென்னை தியாகராயநகர் பர்கிட் சாலையில் மகளிருக்கான சிறப்பு வங்கிக் கிளையினை அமைத்துள்ளது. இக்கிளையின் அனைத்துப் பணியாளர்களும் மகளிரே என்பதுடன், வாடிக்கையாளர்களும் முற்றிலும் மகளிரே என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.9.2003 அன்று முற்றிலும் மகளிருக்கான கனரா வங்கியின் இந்தப் புதிய கிளையினை, கல்வெட்டைத் திறந்து, குத்து விளக்கேற்றி வைத்து, திறந்து வைத்தார்கள். பின்னர், சென்னை தியாகராயநகர் திருமதி ஜி. பத்மா, நங்கநல்லூர் திருமதி. ஜே. சுபாஷினி, பரங்கிமலை திருமதி. லூயிஸ் பிரேமலதா, ஆழ்வார்ப்பேட்டை செல்வி பி. கீதா, மடிப்பாக்கம் செல்வி வி.கனகவல்லி, மேற்கு மாம்பலம் செல்வி. லட்சுமி ஆகிய 6 பேர்களுக்கு சுயதொழில் தொடங்கிட வங்கிக் கடன் உதவிக்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, கனரா வங்கியில் கடன் உதவி பெற்று தொழில் நடத்துகின்ற மகளிரால் தயாரிக்கப்பட்டுள்ள பொருட்களை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார்கள். கேன்பஜார் என்னும் இக்கண் காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிதியடி, துணிப்பை மற்றும் துண்டுகள் முதலானவற்றை வாங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கனரா வங்கியின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான திரு. ஆர்.பி. சாஸ்திரி, பொது மேலாளர் திரு. ஜார்ஜ் ஜோசப், துணைப் பொது மேலாளர் திரு. யதீந்திரதாஸ், மண்டல மேலாளர் திருமதி. சித்ரா, மகளிர் வங்கி கிளை மேலாளர் திருமதி. நிர்மலா தேவி ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# சிறார்களை நல்வழிப்படுத்த காவலர் சிறுவர் மன்றங்கள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்




"**சி**றுவர் மன்றங்களின் தொடக்க விழா! ஏழை எளிய மக்களின் வாரிசுகளுக்கு வரப் பிரசாதமாகக் கிடைத்திருக்கும் அமைப்பின் ஆரம்ப விழா! குடிசைகள் மற்றும் பின் தங்கிய பகுதி வாழ் சிறுவர்களின் வாழ்வில் வசந்தத்தைக் கொண்டு வரும் விழா!

சிறுவர் மன்றம் என்றால் என்ன? அதன் நோக்கம் என்ன? என்பது பலருக்குத் தெரியாது; பலருக்குத் தெரிந்திருக்காது.

இது, நமது காவல் துறை ஏற்று நடத்தும் இளைஞர் நலப்பணி! குடிசைப் பகுதிகளிலும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலும் வசிக்கும் 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பல சிறுவர்களுக்கு, அவர்களின் பெற்றோர்களின் கவனிப்பு தேவையான அளவு கிடைப்பதில்லை. இதற்கு, அவர்களது சமுதாய சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, கணவன் மனைவி இருவரும் பணிக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம், சில குடும்பங்களில் நிலவும் உட்பூசல் போன்ற பல காரணங்கள் உள்ளன. இந்தக் காரணங்களால் அதிகம் பாதிப்புக்குள்ளாவோர் இளைஞர்களே! ஏனென்றால், இத்தகைய சூழல்கள் அவர்களின் மனதில் பசுமரத்து ஆணி போல பதிந்து விடுகின்றன. ஆகவே, அவர்களைக் கவனித்து நெறிப்படுத்த அமைப்புகள் தேவை. அவற்றில் ஒரு அமைப்புதான் "சிறுவர் மன்றம்"! இளம் வயதில் இருந்தே குடிசைகள் மற்றும் பின்தங்கிய பகுதிச் சிறுவர்களை நல்வழிப்படுத்துவதே இந்த மன்றங்களின் நோக்கம்!

"இளைஞர்கள் சரியில்லை – அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியே இல்லை – மூத்தவர்களை மதிக்கத் தெரிவதில்லை – அவர்களுக்குத் தங்களது குடும்பச் சூழ்நிலை தெரிவதில்லை" என்றெல்லாம் குறை கூறுவதோடு பெரியவர்கள் நின்றுவிடக் கூடாது. இளைஞர்களை நல்வழிப்படுத்த, பெரியவர்கள் தங்கள் தரப்பிலிருந்தும் ஏதாவது முயற்சி எடுக்க வேண்டும்.

இளைஞர்களுக்கு நல்வழி காட்டாதவர்களுக்கு நாளை அவர்களைக் குற்றவாளிகள் என்று கூற என்ன உரிமை இருக்கிறது?

**சிறுவர் மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து முடிவெடுக்க, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் தலைமையிலான, 15 பேர் கொண்ட குழு ஒன்றினை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். அரசுத் துறை உயர் அலுவலர்களும், காவல்துறை உயர் அதிகாரிகளும், உறுப்பினர்களாக உள்ள இந்த "சிறுவர் மன்றக் குழு'' சிறுவர் மன்றங்களின் செயல்பாடுகளை வரையறுத்து அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்த ஆலோசனைகளை வழங்கும்.**

இருட்டைப் பழிப்பது எல்லாராலும் இயலும். அப்படிப் பழித்துக் கொண்டு இருப்பதை விட ஒரு மெழுகுவர்த்தியையாவது ஏற்றி வைப்பதல்லவா சிறந்த செயல்?

"Better to light one candle than curse the darkness" என்பார்கள். அப்படி ஒரு விளக்கை, ஓர் ஒளி விளக்கை சிறுவர்களின் வாழ்வில் ஏற்றி வைக்கின்ற சீரிய முயற்சியின் தொடக்கவிழா தான் இந்த விழா!

குடிசைகள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வாழும் சிறுவர்களின் ஆற்றலை நல்வழியில் கொண்டு செல்ல 28 இடங்களில் சிறுவர் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் பல கால கட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 30.6.1999 முதல் அவை செயலிழந்து விட்டன என்று சொல்வதை விட கைவிடப்பட்டன என்று சொல்வதே சரியாக இருக்கும். அந்த நிலைமை இனியும் தொடராது, சிறுவர்களை இளம் வயதிலேயே நல்வழிப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். எனவே, இந்த ஆண்டு மொத்தம் 64 சிறுவர் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் 32 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்படும் என்று காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அதன்படி, சிறுவர் மன்றங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று புதுப்பொலிவுடன் புதிய செயல் வடிவத்துடன் இன்று தொடங்கப்படுகின்றன என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை மாநகருக்கு 25 சிறுவர் மன்றங்களும் – மற்ற ஐந்து மாநகரக் காவல் துறை ஆணையரகங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் இரண்டு என்ற அளவில் 10 சிறுவர் மன்றங்களும் – ஒவ்வொரு காவல் மாவட்டத்துக்கு ஒன்று வீதம், 29 மாவட்டங்களுக்கு, 29 சிறுவர் மன்றங்களும் இன்று தொடங்கப்படுகின்றன. ஆக மொத்தம், 64 சிறுவர் மன்றங்கள் அரசின் சார்பில் இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஒரு சிறுவர் மன்றத்துக்கு ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம், 64 சிறுவர் மன்றங்களுக்கு 32 இலட்சம் ரூபாயை எனது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், சென்னை மாநகரில் சுழற்சங்கங்கள் (Rotary Clubs) சார்பாக 25 – அரிமா சங்கங்கள்(Lions Clubs) சார்பாக 11 – வட்ட மேசை (Round Table) சார்பாக17 – ஆக மொத்தம் 53 சிறுவர் மன்றங்களை தொண்டு நிறுவனங்கள் சார்பாக இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

இத்தகைய தொண்டு நிறுவனங்களை நான் பாராட்டுகிறேன். மேலும் இதுபோன்ற இன்னும் பல தொண்டு நிறுவனங்கள் சமூகப் பணியாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தொடங்கப்படுகின்ற சிறுவர் மன்றங்களின் எண்ணிக்கை மொத்தம் 117 என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுவர்களை ஊக்கப்படுத்தி நல்வழிப் படுத்தும் கருத்துப் பாடல் அடங்கிய CD ஒன்றை வெளியிட்டு சிறுவர் மன்றம் பற்றிய Web-site ஒன்றை இன்று தொடங்கி வைத்ததிலும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுவர் மன்றங்கள் ஒவ்வொன்றிலும், சுமார் 100 சிறுவர்கள் இருப்பார்கள். இந்த மன்றங்கள் அரசுத் துறைகள், மாநகராட்சி மற்றும் தனியார் கட்டடங்களில் செயல்படும். கல்வி, பல்வேறு விளையாட்டுகள், நுண்கலைகள் போன்ற வைகளைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் இவர்களின் வாழ்க்கையை இம்மன்றங்கள் மேம்படுத்தும். கல்வித் திறனை ஊக்குவிக்க நூலகங்கள் துணைபுரியும். இந்த மன்றங்களில் சிறப்பானதைத் தேர்ந்தெடுத்து, அதனை




ஊக்கப்படுத்தும் வகையில் அந்த மன்றச் சிறுவர்களுக்கு சுற்றுலாப் பயணமும் ஏற்பாடு செய்து தரப்படும்.

இந்த மன்றங்களுக்கு சாரண அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த மன்றங்களைத் தூய்மைப்படுத்தவும், சொத்துக்களைக் காக்கவும், பொறுப்பாளர் ஒருவர் பணியமர்த்தப்படுவார். அவரே இரவுக் காப்பாளராகவும் இருப்பார். இவர்கள் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் சிறுவர் நலத்தில் ஆர்வம் உடையவர்களாக இருப்பது, மிக மிக அவசியம். இவர்களின் நியமனத்தில் தனிக் கவனம் செலுத்தப்படும். சாரண அதிகாரிக்கு, பிரதி மாதம் 2,000 ரூபாய் வீதமும், பொறுப்பாளருக்கு 1,000 ரூபாய் வீதமும் ஊதியம் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுவர் மன்றங்களுக்கு, அப்பகுதியின் காவல் ஆய்வாளர், ஒருங்கிணைப்பாளராகத் திகழ்வார். சமூக ஆர்வ அமைப்புகளான ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளைச் சேர்ந்த 15 பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்படும். காவல் நிலையங்களில், உதவி ஆய்வாளர் ஒருவரும், தலைமைக் காவலர் ஒருவரும், நல அதிகாரிகளாகச் செயல்பட்டு, மையத்தின் செயல்பாட்டினைக் கண்காணித்து வருவார்கள். குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரும், இக்குழுவில் இடம் பெறுவார்கள். இந்த மன்றங்கள், காவல் துறைக்கும், பொது மக்களுக்கும், முக்கிய உறவுப் பாலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம், ஒவ்வொருவரும் காவலர்களின் நண்பர்களாக மாறுவார்கள் என்பது திண்ணம்! மேலும், குற்றங்கள் பெருகாமல் குறைவதற்கும் இந்த மன்றங்கள் பெருமளவில் உதவும் என்பதும் உறுதி!

சிறுவர் மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து முடிவெடுக்க, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் தலைமையிலான, 15 பேர் கொண்ட குழு ஒன்றினை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். அரசுத் துறை உயர் அலுவலர்களும், காவல்துறை உயர் அதிகாரிகளும், உறுப்பினர்களாக உள்ள இந்த “சிறுவர் மன்றக் குழு'' சிறுவர் மன்றங்களின் செயல்பாடுகளை வரையறுத்து அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்த ஆலோசனைகளை வழங்கும்.

சிறுவர் மன்றங்களில் உள்ள சிறுவர்கள் சட்டத்தை மதித்து நடக்கும் குடிமகன்களாக ஆவார்கள்! தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறும் வீரர்களாக விளங்குவார்கள்! சமுதாயத்தில் மதிப்பு மிக்க மாணிக்கங்களாகச் சுடர் விட்டு பிரகாசிப்பார்கள். சுருங்கச் சொன்னால், “ஒளி

படைத்த கண்ணினாய் வா வா வா!''என்று இளைய பாரதத்தை வரவேற்றுப் பாடிய பாரதியாரின் பாடல் வரிக்கு ஏற்ப, இவர்கள் விளங்கவேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு!

மகாகவி பாரதியார், வித்தியாசமான சிந்தனைகளுக்குச் சொந்தக்காரர். ஒரு நாள், புதுவையில் தன் நண்பர்களோடு பாரதியார் போய்க் கொண்டிருந்தார். அப்போது, ஒரு வீட்டுத் திண்ணையில் ஒரு பையன் உரக்கப் படித்துக் கொண்டிருந்தான்.

"இளமையில் கல்!'' என்று பையன் படித்ததைக் கேட்ட பாரதியார் நடந்து கொண்டு இருந்ததை நிறுத்தி விட்டு, உடனே பையனைப் பார்த்து, "முதுமையில் மண்!'' என்று உரக்கச் சொன்னாராம்.

மற்றவர்களுக்கு ஆச்சரியம், "என்ன இப்படி பாரதியார், ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுகிறாரே'' என்று நினைத்தார்கள்.

"இளமையில் கல்!'' என்றால், "முதுமையில் மண்'' என்பது சரி தானே! ஆனால் அது வெறும் வாசகம் அல்ல. அதற்குள்ளே வேறு அர்த்தம் அடங்கியிருக்கிறது.

இளமையில் கல்லாக இளைஞன் இருந்தால், முதுமையில் மண்ணாகத்தான் போவான்.

இளமையில் அவன் சாதாரணக் கல்லாக இருக்கக் கூடாது. வைரக் கல்லாக இருக்க வேண்டும்! அவன் இளமையில் வைரக் கல்லாக இருந்தால், முதுமையிலும் வைரக் கல்லாகவே இருப்பான்.

அவன் இளமையில் ஒளியோடு இருந்தால், முதுமையிலும் ஒளியோடுதான் இருப்பான்.

இதை உணர்த்தத் தான் மகாகவி பாரதியார், "இளமையில் கல்'' என்று பையன் படித்ததும், "முதுமையில் மண்'' என்று சொன்னார். சரி, இளைஞர்கள் வைரக் கல்லாக இருக்கிறார்கள் என்றாலும் பட்டை தீட்ட வேண்டாமா?

இளமையில், அப்படி வைரக்கல்லாக இருக்கும் இளைஞர்கள், பட்டை தீட்டப்படாவிட்டால், உரிய ஒளியோடு எதிர்காலத்தில் விளங்கமாட்டார்கள். அவர்களுக்கு – அந்தத் தீட்டப் படாத வைரங்களுக்கு – பட்டை தீட்டிப் பளபளக்க வைக்கின்ற பணியில்தான், காவல்துறை இன்று தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. "தீயதைத் தவிர்ப்போம்'', "நல்லதை நாடுவோம்'', "வாழ்வை வெல்வோம்'' என்ற கொள்கை முழக்கங்களோடு சிறுவர் மன்றங்கள் வெற்றி நடைபோடும்.

நாம் செடிகளைக் காப்போம் – அவை நல்ல மரங்களாகும்!

நாம் சிறுவர்களைக் காப்போம் – அவர்கள் நல்ல மனிதர்கள் ஆவார்கள்!

இன்றைக்கு தொடங்கப்படுகின்ற இந்த 117 சிறுவர் மன்றங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள தமிழகம் எங்கிலும் உள்ள சிறுவர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அனைவருமே மிக மிக கொடுத்து வைத்தவர்கள், அதிருஷ்டசாலிகள். உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள உங்களுக்கு நல்லதொரு வாய்ப்பு இன்றைக்கு கிடைத்து இருக்கிறது. உங்களைப்போல் இன்னும் எத்தனையோ சிறுவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இன்னும் இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே கிடைத்த இந்த அரிய வாய்ப்பை நல்ல முறையில் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு எதிர்காலத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் டாக்டராக, எஞ்சினியராக, லாயராக, சயின்டிஸ்டாக, தொழிலதிபராக முன் வர வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் வாழ்த்துகிறேன்.

இன்னொன்றையும் உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த சிறுவர் மன்றங்களில் சேர்ந்து நீங்கள் என்னென்ன கற்றுக் கொள்கிறீர்களோ, அந்தப் பாடங்களை எல்லாம்,

**தமிழ்நாட்டை இந்தியாவிலேயே எல்லாத் துறைகளிலும், முதன்மையான மாநிலமாக ஆக்குவதுதான் என்னுடைய ஒரே இலட்சியம். முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்றால், அதன் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில்தான் இருக்கிறது. ஆகவே தான் இளைஞர்களை நல்வழிப்படுத்த அவர்கள் எதிர்காலத்தை வளமிக்க பிரகாசமிக்க ஒன்றாக ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசு, இந்த சீரிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.**




ஒவ்வொரு சிறுவனும் தலா இரண்டு சிறுவர்களுக்காவது கற்றுக் கொடுக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் உங்கள் பகுதிகளில் வாழும் சிறுவர்களை இந்த சிறுவர் மன்றங்களில் சேர்க்க நீங்கள் ஒவ்வொருவரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும், உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே எல்லாத் துறைகளிலும், முதன்மையான மாநிலமாக ஆக்குவதுதான் என்னுடைய ஒரே இலட்சியம். முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்றால், அதன் எதிர்காலம் உங்கள் கைகளில்தான் இருக்கிறது. இளைஞர்களின் கைகளில்தான் இருக்கிறது. ஆகவே தான் இளைஞர்களை நல்வழிப்படுத்த அவர்கள் எதிர்காலத்தை வளமிக்க பிரகாசமிக்க ஒன்றாக ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசும், காவல்துறையும் இந்த சீரிய முயற்சியை இன்றைக்கு மேற்கொண்டுள்ளன.

இந்த சிறுவர் மன்றங்கள் மீண்டும் செயல்பட வேண்டும் என்பதற்காக தனி அக்கறை எடுத்துக் கொண்ட சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர், திரு.விஜயகுமார் அவர்களை பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நமக்கெல்லாம் உங்களுக்கெல்லாம் உற்சாகமும், தெம்பும் ஊட்டக்கூடிய நல்லதொரு பாடலை இன்றைக்கு கேட்டீர்கள். இந்த பாடலை இயற்றியவருக்கும், இந்த பாடலுக்கு இசை அமைத்து மிக அற்புதமாக பாடிக் காட்டிய திரு. பரத்வாஜ் அவர்களுக்கும் நான் மனதா பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலை நோக்குப் பார்வையுடன் வருங்கால சமுதாயத்தைப் பொறுப்பு மிக்க ஒரு சமுதாயம் ஆக உருவாக்க, காவல்துறை இன்று தொடங்குகின்ற இந்தச் சிறுவர் மன்றங்கள் ஒரு சமூக விழிப்புணர்ச்சியைத் தமிழகத்தில் நிச்சயம் ஏற்படுத்தும். பொதுமக்களும், தொண்டு நிறுவனங்களும், இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, காவல் துறைக்கு எனது பாராட்டுகளையும், மன்றச் சிறுவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
17–9–2003 அன்று,
சென்னைப் பல்கலைக்கழக
நூற்றாண்டு விழா அரங்கத்தில்
காவலர் சிறார் மன்றங்களை திறந்துவைத்து
ஆற்றிய உரை.



தமிழ்நாடு அரசின் சார்பில்

# மகாத்மா காந்தியடிகள்

## பிறந்த நாள் விழா

உலக உத்தமர் காந்தியடிகள் இந்திய சரித்திரத்தில் புகழ்மிக்க சகாப்தங்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் ஆவார். அவர் அன்பையும், அறநெறி தவறாத பண்பையும் வழிமுறையாகக் கொண்டு அந்நியர் ஆட்சியில் இருந்து ஒரு நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தரமுடியும் என்று உலக மக்களுக்கு உணர்த்திய மகத்தான விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.

அடக்கத்தின் சின்னமாகவும், அமைதியின் வடிவமாகவும் திகழ்ந்த மகாத்மா காந்தியடிகள் சத்திய சோதனையாகவே தமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டு வெற்றி கண்ட தலைவர் ஆவார்.

“இப்படிப்பட்ட ஒரு மாமனிதர் இந்த பூமியில் நடமாடினார் என்பதை அடுத்து வரும் தலைமுறையினர் நம்பமாட்டார்கள்'' என்று அறிஞர்களும், வரலாற்று ஆசிரியர்களும் போற்றுகின்ற மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 135–ஆவது பிறந்தநாள் விழா அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மேதகு ஆளுநர் திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மகாத்மா காந்தியடிகள் நூற்பு வேள்வியினை அந்நியர் ஆட்சிக்கு எதிரான சத்தியாக்கிரகப் போரின் ஒரு கூறுபாடாகக் கருதி நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்ததுடன் தமது இறுதிக் காலம் வரை அதனைக் கடைப்பிடித்தார்கள். அவரது அந்த உன்னத நோக்கத்தினை நினைவு கூர்ந்திடும்வகையில் மகாத்மா காந்தியடிகள் சிலை அருகே நூற்பு வேள்வி நடைபெற்றது.



ஏராளமானவர்கள் கலந்து கொண்டு இராட்டை சுற்றி நூல் நூற்ற காட்சி சரித்திரத்தின் பழைய நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவதைப் போல் அமைந்திருந்தது என்றால் மிகையாகாது. மகாத்மா காந்தியடிகள் சிலைக்கு அருகே அமர்ந்து மாணவ – மாணவிகளும், பொதுமக்களும் பக்திப் பாடல்கள் பாடி அவருக்குப் புகழாரம் சூட்டினார்கள்.

மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, உலக அமைதி ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் மாணவ – மாணவிகள் பங்கேற்ற சைக்கிள் பேரணி ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னையில் உள்ள காந்தி மண்டபத்தில் மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றினை சித்தரிக்கின்ற புகைப்படக் கண்காட்சியும், அரசுத் துறைகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிகளை எடுத்துக் காட்டும் வகையில் பொருட் காட்சியும் அமைக்கப்பட்டு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. அ.மில்லர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஏராளமான மாணவ – மாணவிகளும், பொதுமக்களும் இந்தக் கண்காட்சியினைக் கண்டு மகிழ்ந்ததுடன் கருத்து விளக்கமும் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அன்று மாலை 5.00 மணியளவில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

விழாத் தொடக்கத்தில் வரவேற்புரையாற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், “மகாத்மா காந்தியடிகள் ஒரு காலத்தின் சின்னம், ஒரு எழுச்சியின் அடையாளம், மறுமலர்ச்சியின் உருவகம் என்று பேரறிஞர் அண்ணா சுட்டிக்காட்டியது பொருத்தமுடையதாகும். அந்நியர் ஆட்சியில் இருந்து நாடு விடுதலை பெற மகாத்மா காந்தியடிகள் கையாண்ட வழிமுறை உலகத்திற்கு ஒரு முன்னுதாரணமாகும்'' என்று குறிப்பிட்டார்.






நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. செம்மலை அவர்கள், "தேசப்பிதா காந்தியடிகள் பெண்கள் முன்னேற்றம் குறித்து கொண்டிருந்த எண்ணங்களுக்கு எல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வண்ண வடிவம் கொடுத்து அதற்கான திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்'', என்று குறிப்பிட்டார்.

"ஒழுக்கமே சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையான உத்தரவாதம்'' என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகின்றார். அவற்றை மாணவ – மாணவிகள் கடைபிடித்து நல்லொழுக்கத்துடன் வாழ வேண்டும்'', என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்ற கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றிய மேதகு தமிழக ஆளுநர் திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள், "மகாத்மா காந்தியடிகள் அகிம்சை வழியில் நின்று சர்வோதயத்திற்காகப் பாடுபட்டு சத்தியாக்கிரகங்கள் நடத்தி சமுதாயத்திற்காகவும், நாட்டு விடுதலைக்காகவும் அரிய தொண்டு ஆற்றினார். இன்றைய இளைஞர்கள் அகிம்சை, சர்வோதயம் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

உலக சகோதரத்துவத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைக்காவிட்டால் சண்டைகளும், சச்சரவுகளும் தோன்றும். போர், எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாது. காந்தியடிகளின் கொள்கைகளையும் போதனைகளையும் அன்றாட வாழ்வில் நாம் கடைபிடிப்பது அவசியமாகும்.

மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமின்றி எதிர்வரும் பல தலைமுறையினருக்கும் வழிகாட்டக் கூடியதாகவும், அண்ணல் காந்தியடிகள் போதித்த அகிம்சை, அன்புநெறி, சகிப்புத்தன்மை ஆகியவை நமது நாட்டிற்கு மட்டுமின்றி உலகம் முழுமைக்கும் பொதுவானதாகவும் உள்ளன'' என்று குறிப்பிட்டார்.

செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. இராமதாஸ் இ.ஆ.ப., அவர்கள் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. வ. கனகராஜ் இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

விழா நிறைவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்ற தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு குறித்த கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் பின்னர் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் மகாத்மா காந்தியடிகள் பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது.

* * *

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் மைய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறையினர் சந்திப்பு!



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை **17.9.2003** அன்று தலைமைச் செயலகத்தில் புதுடில்லியில் உள்ள மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துற்றயின் செயலாளர் டாக்டர் வி.எஸ். ராமமூர்த்தி, துறைத் தலைவர் டாக்டர் ஆர். சிவக்குமார், நில அளவைத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர். பி. நாக் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. இ. பாலகுருசாமி ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

அறிவியல் இடவெளி தரவு (Geo Spatial Data) என்பது அரசின் அனைத்துத் துறைகளின் செயல் பாட்டிற்கு மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. ஆனால் இந்தத் தகவல் அமைப்பில் பயிற்சி அளிப்பதற் கென்று தனியாக மையம் எதுவும் இந்தியாவில் இல்லை. எனவே, இந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த புதிய அறிவியல் இடவெளி தரவு துறையில் பயிற்சி அளிப்பதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரிய இருக்கை அமைப்பதற்கு மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை **50** இலட்சம் ரூபாய் நிதி வழங்குகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில்தான் முதன் முதலாக இத்தகைய அறிவியல் இடவெளி தரவு மையம் (Geo Spatial Data Centre) அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்திய நில அளவைத் துறைக்கென்று தமிழகத்தில் இதுவரை தனி அலுவலகம் ஏதும் இல்லை என்றும், தற்போது இந்திய நில அளவைத் துறையின் புதிய அலுவலகம் ஒன்றை சென்னையில் அமைக்க உள்ளதாகவும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலஒதுக்கீடு முதலான உதவிகளை வழங்க வேண்டுமென்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் செயலாளர் டாக்டர் வி.எஸ். ராமமூர்த்தி, கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு அரசின் சார்பாக இதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் வழங்குவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயின்ற மகளிருக்கு பயிற்சி அளித்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் அண்ணா பல்கலைக் கழகத்துடன் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணைந்து, மகளிர் திறன் மேலாண்மைத் திட்டத்தை (Project on Women Empowerment) செயல்படுத்த உள்ளது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். இத்திட்டத்தில் பங்கேற்கும் மகளிர், பயிற்சி முடித்து தங்கள் வீட்டில் இருந்தபடியோ அல்லது வெளியில் அலுவலகத்தில் பணி பெற்றோ பணியாற்ற இயலும். இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது வாழ்த்துகளையும் மாநில அரசின் உதவியையும் நல்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அனைத்து உதவிகளையும் தமிழக அரசு வழங்கும் என்று தெரிவித்துக் கொண்டார்.

★ ★ ★

# "அனைவருக்கும் கல்வி" திட்டம் – தமிழ்நாடு முதலிடம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 356 புதிய தொடக்கப் பள்ளிகளைத் துவக்கவும், ஒரு தொடக்கப் பள்ளிக்கு 2 இடைநிலை ஆசிரியர்கள் என்ற வீதத்தில் மொத்தம் 712 இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்யவும், 399 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, அப்பள்ளிகளுக்கு 399 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யவும் ஆணையிட்டு உள்ளார்.

தமிழகத்தில், பள்ளிக்குச் செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவரையும், 2003ஆம் ஆண்டுக்குள் பள்ளிகளில் சேர்த்து 100 விழுக்காடு சேர்க்கையை அடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, 2003–2004ஆம் கல்வி ஆண்டில், 356 புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி, அப்பள்ளிகளுக்கு 712 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை வழங்கவும், பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் இடையில் நின்று விடாமல் எட்டாம் வகுப்பு வரை தொடர்ந்து பயில்வதற்கு வசதியாக, 2003–2004ஆம் கல்வி ஆண்டில் 399 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, அந்தப் பள்ளிகளுக்கு 399 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை வழங்கவும் இந்த ஆணையின் மூலம் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பயனாக, "அனைவருக்கும் கல்வித் திட்டம்" தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள், 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் எளிதாகக் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2001–2002ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளி வசதி பெற்ற குடியிருப்புகளின் விழுக்காடு 97.1 லிருந்து 2003–2004 ஆம் ஆண்டில் 100 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதிகளை வழங்குவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்னும் பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

# கூடலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 5.10.2003 அன்று தலைமைச் செயலகத்தில், நீலகிரி மாவட்டம் கூடலூரில் அமையும் கலை, அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்தார். மேலும், இந்தக் கல்லூரியில் சேர்வதற்கான அனுமதிக் கடிதங்களை, 10 மாணவ மாணவியர்களுக்கு நேரில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 13.9.2003 அன்று நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரையின் போது, நீலகிரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் கூடலூர் பகுதியிலுள்ள மாணவ மாணவியர்கள் உயர் கல்வி பயில வேண்டுமானால் 40 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து, உதகை, குன்னூர் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய நிலையைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதி மாணவ மாணவியர்கள் உயர் கல்வி பயில வசதியாக, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கூடலூரிலேயே தொடங்க உத்தரவிட்டதுடன், அக்கல்லூரியின் உடனடி செலவுக்காக ரூ.50 இலட்சம் வழங்குவதாகவும் அறிவித்தார்.

மேலும், உடனடியாக இந்தக் கல்லூரி அமைவதற்கும், மாணவ – மாணவியர்களை இந்தக் கல்வி ஆண்டிலேயே சேர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை உடனே எடுக்கும்படி கல்வித் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இந்த ஆணையின்படி கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தால் கூடலூரில் கல்லூரி அமைவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு அந்தக் கட்டடத்தில் செய்ய வேண்டிய பணிகளும் வசதிகளும் "Rose" என்னும் தன்னார்வ அமைப்புடன் இணைந்து 22 நாட்களுக்குள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த இந்தக் கல்லூரியில், இளங்கலை வணிகவியல்(B.Com), இளங்கலை வணிக மேலாண்மை (B.B.A.) , இளங்கலை கணிதம் (B.Sc. Maths), இளங்கலை புவியியல் (B.Sc. Geography) ஆகிய நான்கு பட்டப் படிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஒரு பாடப் பிரிவுக்கு 60 பேர் என்ற வகையில் மொத்தம் 240 பேர், இக்கல்லூரியில் சேர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, 105 மாணவர்கள், 116 மாணவிகள் ஆக மொத்தம் 221 பேர் இக்கல்லூரியில் சேர்ந்துள்ளனர். இதில், 52 சதவீதம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவ மாணவியர்கள் ஆவார்கள்.

இவர்களுள், இளங்கலை (கணிதம்) பயில செல்வி. எஸ். யோகேஸ்வரி, செல்வன். பி.சுபின் , இளங்கலை (புவியியல்) பயில செல்வி. ஆர். நித்ய லட்சுமி, செல்வி. எஸ். பிருந்தாதேவி, செல்வன். தே. பைஜு, செல்வன். எஸ். ஜெய்னுதீன், செல்வன். ஏ. செந்தில்குமார், இளங்கலை (வணிக மேலாண்மை) பயில செல்வன். பி.சுபைர், இளங்கலை (வணிகவியல்) பயில செல்வி ஷனீபா, செல்வி. பி. அனீஷா அல்போன்ஸ் ஆகிய 10 மாணவ மாணவியர்களுக்கு இந்தக் கல்லூரியில் சேர்வதற்கான அனுமதிக் கடிதங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 5.10.2003 அன்று நேரில் வழங்கி, சிறப்பாக கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேற தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. அமில்லர், உயர்கல்வித் துறை செயலாளர் செல்வி லீனா நாயர் இ.ஆ.ப., பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். சிவசுப்ரமணியன், பதிவாளர் டாக்டர் சி. சுப்ரமணியம் மற்றும் கூடலூர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எம். சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

* * *



# குடவரைக் கோயில்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டான். நாளடைவில் இக்குகைகளை வழிபடும் இடமாகவும் மாற்றிக்கொண்டான். குடவரைக் கலை உலக அளவில் மிகப் பழமையான கலையாகும்.

இந்தியாவில் குடவரைக்கலை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. உலக அளவில் இந்தியாவில் மட்டும்தான் குடவரைக்கலை வளர்ச்சி பெற்று விளங்கியது. குடவரைக்கலை முதன் முதலில் அசோகரால் ஏற்படுத்தப்பட்டது. பல்லவப் பேரரசு தமிழ்நாட்டில் தோன்றியபின் குடவரைக்கலை பெரிதும் வளர்ச்சியடைந்தது.

குடவரைகள் சமண தாக்கங்கள் உள்ள பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன.

மண்ணாலும் செங்கலாலும் எடுக்கப்பட்ட கோயில்கள் மண்டளிகள் எனவும், மலையில் குடையப்பட்ட கோயில்கள் குடபோகம்,எனவும் தனிப்பாறைகளில் குடைவிக்கப்பட்ட கோயில்கள் மலைதளிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் மகேந்திரவர்மன் காலத்திய குடவரைக் கோயில்களுக்கும் மொகல் இராஜபுரத்து குடவரைக் கோயில்களுக்கும் பெரும் ஒற்றுமை உண்டு. காரணம் விஜயவாடாவில் உள்ள விஷ்ணு குண்டினரின் வம்சத்தில் இவர் தாய் வந்தவள். எனவே மகேந்திரவர்மன் உள்ளத்தில் விஜயவாடாவில் உள்ள விஷ்ணு குண்டினரின் கலை ஐயமின்றி நன்கு பதிந்தது.

மண்டகப்பட்டில் உள்ள கல்வெட்டு மகேந்திரவர்மன் ''செங்கல், மரம், உலோகம்'' இவற்றின் துணையின்றி முதன்முறையாக குடவரைக்கோயில் கட்டப்பட்டதைத் தெரிவிக்கிறது.

மகேந்திரவர்மன் காலத்தில் குடையப்பட்ட குகைகளை தொடக்ககால குடைவரைகள், பிற்கால குடைவரைகள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

தொடக்ககால குடைவரைகள் மலைச் சரிவுகளில் குடைந்து அமைக்கப்பட்டவை. இவை மலை உச்சியிலும் இரா, அடியிலும் இரா, இத்தகைய இடத்தில் ஒரு கோயிலை குடையும்போது அங்கு தூண்களையும் மூர்த்தங்களையும் செய்வதற்கு இடம் விட்டு மிகுந்த இடமே குடையப்பட்டிருக்கும். குன்றுகளின் சரிவுகளுக்கு ஏற்ப கிழக்கையோ, மேற்கையோ, வடக்கையோ பார்த்தவாறு குடையப்பட்டன. மண்டபத்தின் திசைக்கு ஏற்றவாறு உள்ளிருந்த கருவறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. நீள் சதுர மண்டபத்தில் சதுரமான கருவறை, சுவர் பகுதியில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை யிலோ குடையப்பட்டன.

மகேந்திரவர்மன் குடவரைகளில் காணப்படும் தூண்கள் எவ்வித வேலைப்பாடும் இன்றி கீழும் மேலும் பெருத்த சதுரங்களையும் நடுவில் வேலைப்பாடற்ற கட்டுப்பகுதியையும் கொண்டு விளங்குகின்றன.

குடவரை முகப்பில் தூண்களும் பக்க சுவர்களில் அரைத்தூண்களும் இதே அமைப்பில் குடையப்பட்டன. தூண் கீழும் மேலும் சதுரமானது. நடுவில் மூலை செதுக்கப்பட்டது. தூணின் முழு உயரம் ஏழு முழம்

மேற்சதுரம், கீழ் சதுரம் இரண்டிரண்டு முழம் உயரம் இருக்கும். சதுரத்தில் தாமரை மலர் செதுக்கப்பட்டிருக்கும். வரிசையில் நேராக மண்டபத்தின் நடுபகுதியில் தூண்வரிசை அமைக்கப்பட்டு மண்டபம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்றவாறு மண்டபத்தின் தரைப்பகுதியைத் தாழ்த்தியும் உயர்த்தியும் வேறுபடுத்திக் காட்டியுள்ளனர். போதிகைகள் ஒழுங்கு இல்லாத நிலையில் காணப்படுகின்றன. சுவர்களின் மீது சித்திர வேலைப்பாடுகள் காணப்படும்.

கோயில் நடுவில் இறையகம் (கர்ப்பகிரகம்) இருக்கும். நீள்சதுர மண்டபத்தில் சதுரமான கருவறை ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் குடையப்பட்டன. கருவறையில் லிங்கம் பொருவதற்கான குழிகளோ அல்லது சுதைச்சிற்பங்களோ இருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. பல்லவர் குடைவரைகளில் ஆகமவிதிகள் பின்பற்றப்படவில்லை. பூசைகள் எதுவும் நடைபெறவில்லை.

கருவறையின் வாயிலின் இருபுறமும் வாயிற்காவலர் (துவாரபாலகர்) உருவங்கள் அமைந்திருக்கும். அக்காவலர் தலைப்பாகை உடையவர். அவர்தம் வலக்கை இடக்கைமீது இருக்கும். இடக்கை ஒரு தடியைப் பிடித்திருக்கும். அக்காவலர் தடி மீது முன்புறம் சாய்ந்தபடி பார்ப்பவரை அடிக்க முயல்பவரைப் போல காணப்படுவார்.

கருவறையில் சுவர்களின் மீது புராணக் கதைகளைக் குறிக்கும் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும். கோயில்களின் சுவற்றில் மகேந்திரவர்மன் கல்வெட்டுகள் இருக்கும். அவை வடமொழியிலும் தென் மொழியிலும் பொறிக்கப்பட்டு இருக்கும்.

கட்டுமான குடவரை முகப்பின் கூரைப்பகுதி எவ்வித வேலைப்பாடும் அற்று கபோதமற்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. கபோத அமைப்பை ஏற்படுத்தும் முயற்சி பல்லாவரம் குடவரையில் மட்டுமே இக்காலக் கட்டத்தில் காணப்படுகிறது. மழைநீர் மண்டபத்தின் உள்ளே விழாதபடி முகப்பை சிறிது வெளியே நீட்டியவாறு அமைந்துள்ளது. குடவரையின் முகப்பு கட்டுமான கோயில்களைப் போன்று பல சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைத்தனர்.

பல்லவர்களின் குடவரைகள் சில நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்களில் உள்ள ஊர்களிலேயே இருந்தும் அவற்றினைப் பற்றிய குறிப்புகள் பாடல்களில் காணப்படவில்லை. குடவரைகள் யாவும் நீர்நிலைகளின் அருகிலேயே அமைக்கப்பட்டன. குடவரைக்கு எதிரில் ஏரிகளோ, குளங்களோ காணப்படும்.

முதலாம் மகேந்திரவர்மனுக்கு பின்வந்த மன்னர்கள் குடவரைகளில் சில மாற்றங்களைச் செய்தனர். பரமேஸ்வரவர்மபல்லவன் பின்பற்றிய குடவரைக் கலைப்பணியை ''மாமல்லன் கலைப்பாணி'' என்று கூறுவர்.

முதலாம் நரசிம்மவர்மன் குடவரைகளுடன் ஒரே கல்லிலான இரதங்களையும் விமானத்துடன் கூடிய குடவரைகளையும், புடைப்பு சிற்பங்களையும் உருவாக்கினான். இவர் காலத்தில் மலைதளிகள் அமைக்கப்பட்டன. மலை உச்சியிலிருந்து தொடங்கப் பட்டு அடித்தளத்தில் முடிவடையும். அக்காரணத் தினாலேயே பஞ்சபாண்டவ இரதங்கள் பல முற்றுப் பெறாமல் உள்ளன.



மாமல்லன் முதலாம் நரசிம்மவர்மன் ஏற்படுத்திய குடவரைகளின் மேற்பகுதி கபோத வரிசையுடன் காணப்படும். கபோதத்தின் மீது சாலைக்கூடு அமைப்புகளும் இவர் காலத்தில் உள்ள குடவரை களில் காணமுடிகிறது. கற்றளி அமைப்பிற்கான கூடுசாலை வரிசைகளின் முன்னோடியாக குடவரைகளில் விமானம் அமைக்கும் வழக்கமும் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்திலுள்ள திருமூர்த்தி குடவரைக் கோயிலை குறிப்பிடலாம். மேலும் கபோத வரிசையின் மேல் பூதகண வரிசையோ, வியாழ வரிசையோ குடவரைகளில் காணமுடிகிறது.

முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் அமைந்த தூண்கள் காண்போரைப் பரவசப்படுத்தும் வகையில் அழகு ஊட்டப்பட்டு அமைக்கப்பட்டன. பலகை, பத்மம் பெற்ற தூண்களும் சிங்கம் அல்லது வியாழன் உருவங்களுடன் எண் பட்டை மற்றும் பதினாறு பட்டையும் கலசம் தாடி கண்டம், கும்பம், பத்மம் ஆகிய அம்சங்களைப் பெற்ற தூண்களும் கலைப்பாணியின் சிறப்பு அம்சங்களாகும். சில தூண்கள் தாமரை அமைப்புடன் விளங்கும். போதிகைகள், தரங்கம் போன்ற அமைப்பு பெற்று திகழ்கின்றன. இத்தகைய கலை நுணுக்கங்கள் மாமல்லன் காலத்தில் பின்பற்றப்பட்டன.

மாமல்லபுரத்தில் மாமல்லன் கலைப்பணி குடவரைகளாக முற்றுப் பெற்றதும் பெறாததுமாக பத்து குடவரைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் தொடக்க நிலையில் குடவரையில் புடைப்பு சிற்பங்கள் அற்றும், பிற்காலக் குடவரைகளில் புடைப்பு சிற்பங்கள் மிகுந்தும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மகிஷாசுரமர்த்தனி குடவரை, வராக மண்டபம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பரமேஸ்வரவர்மன் காலத்தில் கருவறையின் பின் சுவற்றில் சோமாஸ்கந்தர் புடைப்புச்சிற்பம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டதைக் குறிப்பிடலாம்.

பிற்காலப் பல்லவர்களான நந்திவர்மன், இரண்டாம் நந்திவர்மன் மற்றும் மூன்றாம் நந்திவர்மன், நிருதுபங்கன் ஆகியோரின் காலத்தில் அவர்களால் உருவாக்கப்பட்டக் குடவரைக் கோயில்கள் எதையும் காண முடியவில்லை.

தொண்டை மண்டலத்தில் பிற்காலப் பல்லவர் காலக்கட்டத்தைச் சேர்ந்த குடவரையாக கீழ்மாவலங்கை ஒன்றை மட்டுமே குறிப்பிடலாம்.

மகேந்திரவர்மனின் தொடக்க கால குடவரைகளாக மண்டகப்பட்டு, பல்லாவரம், குரங்கணி மூட்டம் போன்ற குடவரைகளைக் குறிப்பிடலாம்.

மகேந்திரவர்மனின் வளர்ச்சி பெற்ற குடவரைகளாக வல்லம், தளவானூர், சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குடவரை அமைப்பது காலவிரையமும் பொருள் விரையமும் தொழில்நுட்பமும் மிக்கதாய் விளங்கின. சோழர்கள் காலத்தில் குடவரைகளுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. இவர்கள் காலத்தில் கற்றளி கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆனால் குடவரைக் கோயிலுக்குப் பல நிலவந்தங்களும் கட்டுமான விரிவாக்கங்களும் செய்யப்பட்டன.

தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் குடவரைக் கோயில்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ந. சௌந்திரபாண்டியன்,**
*காப்பாட்சியர்,*
*அரசு அருங்காட்சியகம்,*
*உதகமண்டலம்,*
*நீலகிரி மாவட்டம்.*

## எவ்வளவு சர்க்கரை சாப்பிடலாம்?

ஒருவர் தனது உடலுக்கு தேவையான கலோரிகளில் 10 சதவீதத்திற்கு மேல் சர்க்கரை மூலமாக பெறக்கூடாது என்று கூறுகிறது. உடல் பருமனையும் அது தொடர்பான நோய்களையும் நீக்குவது எப்படி என்று விளக்கும் புதிய ஆய்வறிக்கை ஒன்று.

கடந்த 10 ஆண்டுகளில் உணவுக் கட்டுப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே சிறந்தது என்று இந்த ஆய்வு பாராட்டப்படுகிறது. சர்க்கரை உட்கொள்வது குறித்து கவலை தெரிவிப்பது புதிது அல்ல என்றாலும் எவ்வளவு சர்க்கரை சாப்பிட வேண்டும் என்று அறுதியிட்டு ஒரு சில ஆய்வுகளே கூறுகின்றன. இந்த ஆய்வு முடிவுகளை உணவுப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் எதிர்க்கின்றன. உடல் பருமனை குறைக்க கூடுதல் உடற்பயிற்சியே சிறந்தது என்று அவை கூறுகின்றன.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் உணவு மற்றும் விவசாய நிறுவனம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வினை சர்வதேச நிபுணர்கள் தொகுத்துள்ளனர். உடற்பயிற்சி மற்றும் உணவு கட்டுப்பாடு தொடர்பான நிலையான பரிந்துரைகளை அவை வெளியிட்டுள்ளன.

ஆனால் சர்க்கரையைப் பொறுத்தவரை மக்கள் சர்க்கரை உபயோகத்தை குறைக்க வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது. இயற்கையாகவே சர்க்கரை உள்ள தேன், சிரப்புகள் மற்றும் பழரசம் போன்றவை இதில் அடங்காது. மொத்த கலோரிகளில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே சர்க்கரை மூலம் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

சர்க்கரை நோயைக் கண்டுபிடிக்க இரண்டு ரத்த மாதிரிகள் தேவை. ஒன்று பட்டினியாக இருந்தபின் பெறப்பட்டது. மற்றொன்று 75 கிராம் குளூகோசை 300 மி.லி. தண்ணீருடன் கலக்கி குடித்த பின் 2 மணி நேரம் கழித்து எடுக்கப்பட்டது. பட்டினியாக இருந்தபின் பெறும் மாதிரி 8 முதல் 10 மணி நேரம் ஒன்றும் சாப்பிடாமல் காலையில் எடுக்கப்பட வேண்டும். பிளாஸ்மா குளூகோஸ் அளவு பட்டினியாக இருந்தபோது டெசிலிட்டருக்கு (டெலி) 110 மில்லி கிராம் (மி.கி) அல்லது அதற்கு குறைவாக இருக்க வேண்டும். 2 மணி நேரம் கழித்து எடுக்கப்பட்ட மாதிரியில் 140 மி.கி./டெலி இருக்க வேண்டும். பட்டினி மாதிரியில் 126 மி.கி./டெலிக்கு மேலும், சாப்பிட்ட பின் உள்ள மாதிரியில் 200 மி.கி/டெலியும் இருந்தால் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கக்கூடும். •

# இந்தியாவிலேயே முதன்முதலாக வளர் இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசித் திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கிவைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10–10–2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்திலுள்ள வளர் இளம் பெண்களுக்கான ரூபெல்லா தடுப்பூசி மற்றும் குழந்தைகளுக்கான தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா (Measles, Mumps, Rubella) தடுப்பூசித் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். தடுப்பூசி மருந்துப் பொருட்களை 10 பயனாளிகளிடம் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து மருத்துவர்களால் இந்த பயனாளிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

ரூபெல்லா எனும் ஜெர்மன் தட்டம்மை நோய், கர்ப்பிணி பெண்களைத் தாக்கும் போது, அந்த நோயானது கருவின் வளர்ச்சியைத் தாக்கி, பிறக்கும் குழந்தைகள், காது கேளாமை, கண் பார்வை இழப்பு, பேச்சுத் திறன் பாதிப்பு, மூளை வளர்ச்சி குன்றுதல் என பலவிதமான உடற் கோளாறுகளுக்கு ஆளாகின்றன. உலகச் சுகாதார நிறுவனம் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் ரூபெல்லா நோயானது இந்திய துணைக் கண்டத்தில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அதிக அளவில் ஏற்படுகிறது எனவும், இந்நோய்த் தாக்கும் கர்ப்பிணிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளில் 40 விழுக்காடு நோய்ப் பாதிப்புக்குள்ளாகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் இந்தக் குறைபாடுகளை முன்கூட்டியே தவிர்த்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில், சட்டமன்றத்தில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கையின் போது புதிய அறிவிப்பாக ரூபெல்லா தடுப்பு ஊசித் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின்படி, 10 முதல் 15 வயது வரை உள்ள வளர் இளம் பெண்களுக்கு ரூபெல்லா தடுப்பூசியும் 24 முதல் 60 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்குத் தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா தடுப்பூசியும் போடப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இத்திட்டம், முதற்கட்டமாக, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியம், பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஒன்றியம், கடலூர் மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப் பெண்ணாத்தூர் ஒன்றியம் மற்றும் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு ஒன்றியம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும். தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா தடுப்பூசி 25,000 குழந்தைகளுக்கும் ரூபெல்லா தடுப்பூசி 22,500 வளர் இளம் பெண்களுக்கும் போடப்படும். நடப்பு நிதியாண்டில் இதற்காக ரூ.24.75 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

அடுத்து, மேற்கண்ட 5 மாவட்டங்களிலுள்ள மீதமுள்ள 70 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். இத்திட்டம் பற்றிய தகவல், கல்வி, மக்கள் தொடர்பு பணிகள், பயிற்சி ஆகியவையும் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதைத் தொடர்ந்து மீதமுள்ள 24 மாவட்டங்களிலுள்ள 312 ஊராட்சி ஒன்றியங்களிலும் 47 நகர்ப்புற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பகுதிகளிலும் தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா நோய்கள் தடுப்பு அவசியம் குறித்து பொதுமக்களிடையே மக்கள் தொடர்பு பணிகள் மற்றும் பிரச்சாரங்கள் வாயிலாக தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்திற்காக மொத்தம் 3 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி, தலைமைச் செயலாளர் திருமதிலக்ஷ்மி பிராணேஷ், இ.ஆ.ப., சமூக நலத்துறை செயலாளர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

• • •

# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்த கண்காணிப்புக் குழுக் கூட்டம்

தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்ற ''புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்'' குறித்த மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் கூட்டம் **09-10-2003** அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.கே.பாண்டுரங்கன், தமிழக அரசு தலைமைச் செயலர், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர், தொழில்துறைச் செயலர், சிறுதொழில் துறைச் செயலர், வேளாண்மைத்துறை சிறப்புச் செயலர், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தோட்டக்கலைத்துறை ஆணையர், வேளாண்மை வணிக ஆணையர், தொழில் முதலீட்டுக் கழக நிருவாக இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர், மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை துணை இயக்குநர், வணிக வரி இணை ஆணையர், மின் வாரிய தலைமைப் பொறியாளர், சிட்கோ பிரதிநிதி, ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தலைமை அலுவலர், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய இயக்குநர், கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கத் தலைவர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.





இக்கூட்டத்தில் இத்திட்ட செயல் முன்னேற்றம் பற்றி கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை மாநில ஒருங்கிணைப்பு குழுவால் **495** திட்டங்கள் **285** ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் **174** திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திடம் கடன் பெற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது. இதில் 77 திட்டங்களுக்குக் கடன் அனுமதி பெறப்பட்டு தொழில் துவங்க ஆயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் **19** திட்டங்கள் சுயநிதியில் தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை **42** திட்டங்கள் ரூ.**29.10** கோடி முதலீட்டில் **18** மாவட்டங்களில் **35** ஒன்றியங்களில் உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான தொழில்கள் தொடங்குவதை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில் முனைவோர்க்குத் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரம் குறித்த தகவல்களை அளிப்பது, வங்கிகள் கடன் வழங்குவதைத் துரிதப்படுத்துவது, உயிர்த்தாவர எண்ணை (ஜெட்ரோபா) தயாரிப்பதை ஊக்குவித்தல், ஏற்றுமதிக்கான மலர் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற செயல்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி, **385** ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க உரிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசு அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. ★

## இந்தியாவில் முதன்முறையாக, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில்

# அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகம்

*"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"*

– என்ற பாரதியின் கனவு வரிகள் தற்போது நனவாகி வருகின்றன. அக்கனவை நனவாக்கும் வகையிலும், எந்த ஒரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் பெண் இருக்கிறாள் என்பதை மாற்றி இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் உள்ளார்கள் என்று, இந்திய அளவில் செயல்படும் காட்சியை தமிழகத்தில் தான் பார்க்க முடியும். ஜாதிக் கொடுமை, தீண்டாமை போன்ற வன்முறைகள் ஏற்பட்டு அவதியுற்ற காலத்தில் பெண்கள் முடங்கி திறமைகளை அடக்கி, வாரிசுகளை உருவாக்கும் இயந்திரமாக சித்திரிக்கப்பட்ட காலத்தில் ஒளிவிளக்காய், இடி முழக்கமாய் சமுதாய, மூடநம்பிக்கைகளை அகற்ற முழங்கிய பெரியாருக்கு 1938 டிசம்பர் 13–ஆம் நாள், சென்னையில் நடந்த தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில், "பெரியார்" என்ற பட்டத்தை பெண்கள் வழங்கினார்கள்.

இந்த வட்டத்தில் 7 உள்வட்டங்களும், 121 வருவாய் கிராமங்களும் உள்ளன. தற்போது இவ்வட்டம் அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒரு தலைமையிடத் துணை வட்டாட்சியர், 2 மண்டலத் துணை வட்டாட்சியர், ஒரு வட்ட வழங்கல் அலுவலர், தனித் துணை வட்டாட்சியர், உயர்






நிலையிலான வட்டாட்சியர் ஆகிய 7 அலுவலர்களும், 11 உதவியாளர்களும், 8 இளநிலை உதவியாளர்களும், ஒரு பதிவறை எழுத்தரும், 2 அலுவலக உதவியாளர்களும், 7 நில வருவாய் ஆய்வாளர்களும், 3 வரைவாளர்களும், 1 இரவுக் காவலரும், பெண் வாகன ஓட்டுநரும் ஆக முழுக்க முழுக்க 41 மகளிர்களைக் கொண்டு பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

அந்தப் பெரியார் பிறந்த மண்ணில் பெண்களுக்கு என்று தனியாக வட்டாட்சியர் அலுவலகத்தை உருவாக்கி இந்திய அளவில் சாதனை புரிந்துள்ளதை இன்று அனைத்துப் பெண்களும் பாராட்டுகின்றனர்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகம் 11.8.2003 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கா. பாலச்சந்திரன் இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வட்டாட்சியர் அலுவலகம் ஈரோட்டிலிருந்து 20ஆவது கி.மீட்டரில் அமைந்துள்ளது. இவ்வட்டம் துணை வட்டாட்சியர் அலுவலகமாக இருந்து, 20.7.1979 முதல் வட்டாட்சியர் அலுவலகமாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகத்தினைத் திறந்து வைத்த மாவட்ட ஆட்சியர் திரு. கா. பாலச் சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தனது உரையில், "பெண்களுக்கு தாய்மை உள்ளம் இருப்பதால் அவர்கள் பணியாற்றும் அலுவலகத்தின் மூலம் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையாற்ற முடியும். இதனடிப்படையில் தான் பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகம் அனைத்து மகளிர் வட்டாட்சியர் அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. வட்டாட்சியர் வாகனத்திற்கு ஓட்டுநராக பெண் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளது, இவ்வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மேலும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை" என்று குறிப்பிட்டார்கள்.

# ஆண்கள் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடு



நாடு வளர்ச்சி அடைய வேண்டுமானால், ஆண், பெண் என்ற பேதம் இல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். மாவட்டங்கள் தோறும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கிராம பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டத்தில் ஆண்களை உறுப்பினர்களாகக் கொண்ட சுயஉதவிக் குழுவும் அமைக்கப்பட்டு, அதன் மூலம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் ஆண்கள் சுய உதவிக்குழுக்களும் அமைத்து அக்குழுக்களையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டார். அதனைப் பின்பற்றி ஈரோடு மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் 142 ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 35 குழுக்களும், சத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 34 குழுக்களும், தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் 46 குழுக்களும், பவானி ஊராட்சி ஒன்றியத்தில் 7 குழுக்களும், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 4 குழுக்களும், கோபி ஊராட்சி ஒன்றியத்தில் 3 குழுக்களும், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் 5 குழுக்களும், தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 குழுக்களும், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் 1 குழுவும், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 4 குழுக்களும் ஆக 142

ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பிக்கப்பட்ட 142 குழுக்களில் 2,000 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தக் குழுக்களில் 6 மாதம் கடந்து தகுதி வாய்ந்த 18 குழுக்களுக்கு சுழல்நிதி ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 11 குழுக்களுக்கு சுயதொழில் செய்திட பொருளாதாரக் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. பர்கூர் மலைப் பகுதியில் உள்ள 9 ஆண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், வியாபாரம் போன்ற வனப்பொருட்கள் சேகரம் செய்து விற்பனை செய்திட ரூ.18.18 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் இம்மாவட்டத்தில் மலைப்பகுதியான தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் ஸ்ரீவிக்னேஷ்வரா ஆண்கள் சுயஉதவிக் குழுவிற்கு வேளாண்மை நடவடிக்கைக்காக டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாடகைக்கு விட ரூ.3 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1.25 இலட்சம் மானியமாகவும் ரூ.1.75 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

பவானி ஊராட்சி ஒன்றியம் கவுந்தப்பாடியில் உள்ள முகில் ஆண்கள் சுயஉதவிக் குழுவிற்கு காய்கறி விற்பனை, ஆவின் பொருட்கள் விற்பனை மற்றும் காளான் வளர்ப்பிற்கு ரூ.1 இலட்சம் பொருளாதாரக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 12 படித்த இளைஞர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கு பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கடைகளில் ஒரு கிராம அங்காடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வியாபாரத்தின் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ரூ.2,000 வருமானம் ஈட்டி வருகின்றனர். இதைத் தவிர வான்கோழி வளர்ப்பு வியாபாரத்தில் இக்குழுவினர் ஈடுபட்டு நல்ல இலாபம் பெற்றுப் பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்ற நிலையினை அடைந்து வருகின்றனர்.

சத்தி ஊராட்சி ஒன்றியம் கெஞ்சனூர் ஊராட்சியில் நண்பர்கள் ஆடவர் குழு, உழைப்பாளிகள் ஆடவர் குழு ஆகிய இரண்டு குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடம் ஆகிறது. இந்த இரண்டு ஆடவர் சுயஉதவிக் குழுக்களும் அருகாமையில் உள்ள 7 ஏக்கர் விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்து அதில் மக்காச்சோளம், பழவகைகள், பயிர் செய்து அதன் மூலம் தங்கள் வருவாயை பெருக்கி வருகின்றனர். மேலும் இந்தப் பகுதியில் இந்தியர் மற்றும் பாரதம் ஆகிய 2 ஆண்கள் சுயஉதவிக் குழுக்கள் சமூக சிந்தனை நோக்கத்தோடு பசுமைப்பயணம் என்ற பெயரில் அக்கிராமம் முழுவதும் மரக்கன்றுகள் நட முடிவு செய்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர்.

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பர்கூர் மலைப்பகுதி மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் ஆண்கள் சுயஉதவிக்குழுக்கள் 28 ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் அந்தப் பகுதியில் எளிதாகக் கிடைக்கக்கூடிய சோளம், ராகி, நெல்லிக்காய் போன்ற தொழில்களைக் கண்டறிந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களோடு இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த மலைப்பகுதி மக்கள் தங்கள் பட்டா நிலங்கள் உள்ள சுமார் 15 ஆயிரம் புளியமரங்களை கந்துவட்டிக்காரர்களிடம் மரம் ஒன்றிற்கு ரூ.2,000 வீதம் கடனாகப் பெற்று அந்த இரண்டாண்டுகளுக்கு ஆன வட்டியை மரத்தில் காய்க்கும் புளியங்காய்களை அடித்து விற்பனைச் செய்ய சம்மதித்து உள்ளனர். ஆனால் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத சூழ்நிலையில் மரங்களை மீட்க முடியாமலேயே இருந்தனர். இதை அறிந்த அந்தப்பகுதியில் உள்ள மைராடா தொண்டு நிறுவனம் என்ற அமைப்பு ஆண்கள் சுய உதவிக்குழுக்களை நிறுவி வங்கியின் ஒத்துழைப்புடன் பல வருடங்களாக மீட்கப்படாத புளிய மரங்களைத் தற்போது மீட்டு அவர்கள் வியாபாரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு சிந்தாமணி மூலம் விற்பனை செய்ய மாவட்ட நிருவாகம் ஏற்பாடு செய்து ஈரோடு சிந்தாமணி கூட்டுறவுப் பண்டகச் சாலை மூலம் இந்த குழுவினர் சேகரித்த புளியை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் ஆண்கள் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்து, அக்குழுக்களுக்குத் தேவையான வங்கிக் கடன்களையும் பல்வேறு வங்கிகள் மூலம் வழங்கி, அவர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட நிருவாகத்தின் மூலம் அனைத்துநடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்கொண்டுள்ளார்.

---

**ஆர்.லிங்கம்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*ஈரோடு மாவட்டம்.*

# கரூர் மாவட்டத்தில் முன்னோடியாகத் திகழும் தனிநபர் கழிப்பறைத் திட்டம்

கரூர் மாவட்டத்தில் 8 ஒன்றியங்களில் உள்ள 158 கிராம பஞ்சாயத்துக்களில் ஒட்டுமொத்த சுகாதார திட்டமானது 3 ஆண்டு திட்டமாக அறிவிக்கப்பட்டு (2002–2005) 3 திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பள்ளி கழிப்பறைகள், அங்கன்வாடி கழிப்பறைகள், பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் மற்றும் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தனிநபர் கழிப்பறைகள்**

கரூர் மாவட்டத்தில் 2002 – 2005 ஆம் ஆண்டில் ரூ.8.64 கோடி மதிப்பீட்டில் மத்திய / மாநில அரசுகள் மூலம் முழு சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வழக்கமாக கிராமங்களில் பொதுமக்கள் சாலை தெருவோரங்களிலும், முள்புதர்கள் உள்ளிட்ட திறந்தவெளிப் பகுதிகளையே கழிப்பிடங்களாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் முழு சுகாதாரத் திட்டத்தை பயன்படுத்தத் தொடங்கி யுள்ளது, கரூர் மாவட்டத்திலுள்ள பிள்ளாபாளையம் ஊராட்சி. இந்த ஊராட்சியில் பிள்ளாபாளையம், வல்லம், கொம்பாடிபட்டி, வீரகுமாரன்பட்டி, காஞ்சிநகர் ஆகிய கிராமங்கள் உள்ளன.

தாழ்த்தப்பட்டோர் நிறைந்த இந்த ஊராட்சியில் பெரும் பகுதியினர் கூலித் தொழிலாளர்கள், பெரும்பாலான வீடுகள் கீற்றுக் குடிசைகளாக உள்ளன. கீற்றுக் குடிசைகளில் வாழ்வோரும் தனிநபர் கழிப்பிடங்கள் மூலம் சுகாதார வாழ்வுக்கு மாறும் சூழல் உருவாகி உள்ளது. வல்லம் கிராமத்தில் 125 வீடுகளிலும், வீரகுமாரன்பட்டியில் 65 வீடுகளிலும் தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப் பட்டிருப்பது முன்னோடி நடவடிக்கையாகும்.

பிள்ளாபாளையத்தில் முதற்கட்டமாக 100 வீடுகளில் தனிநபர் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. பிள்ளாபாளையம் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தனிநபர் கழிப்பிடங்களில் இதுவரை 476க்கும் அதிகமானவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தேவைக் கேற்ப ரூ.250 முதல் ரூ.2,000 வரை கூடுதலாக பங்களிப்பு செலுத்தி கழிப்பிடங்களோடு குளியல் அறைகளையும் சிலர் அமைத்துள்ளனர்.

பிள்ளாபாளையத்தில் யார்டு தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடனும் ஊராட்சி மன்றத் தலைவர் உதவியுடனும் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் ஆர்வமுள்ள பயனாளிகளின் பங்கெடுப்புடனும் இத்திட்டமானது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் முழு சுகாதாரத் திட்டத்தில் அதிகளவில் தனிநபர் கழிப்பிடங்கள் கட்டியதற்காக ஊராட்சித் தலைவரை மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டினார்.

தற்போது கிராம மக்கள் தங்கள் கிராமங் களில் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை வசதி தேவை என்பதை உணர்ந்து கழிப்பறை கட்டித் தாருங்கள் என்று மாவட்ட நிர்வாகத்தைக் கேட்டு வருகின்றனர். எனவே இத்திட்டத்தினை கரூர் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செய்து முடித்து





முழு சுகாதார திட்ட மாவட்டமாக மாற்ற முடியும் என்ற எண்ணத்தில் இத்திட்ட மானது தற்போது மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

### கரூர் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்களை கருத்தில் கொண்டு **2001–2002**ஆம் நிதியாண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஹட்கோ திட்டங்களின் கீழ் **82,** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. **2002–2003**ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் **31** சுகாதார வளாகங்களும்,ஒட்டுமொத்த சுகாதாரத் திட்டத்தின் கீழ் **47** சுகாதார வளாகங்களும் மொத்தம் **78** சுகாதார வளாகங்கள் கட்டும் பணி முடிவுற்று, மேலும் **2003 – 2004**ஆம் ஆண்டு ஒட்டுமொத்த சுகாதார திட்டத்தின் கீழ் **16** சுகாதார வளாகங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுகாதார வளாகத்தில் உள்ள கழிப்பறையை பயன்படுத்த அச்சப்பட்டுக்கொண்டு துணி துவைக்க மட்டுமே பயன்படுத்தினர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊராட்சி மன்ற தலைவர்களின் ஒத்துழைப்புடன் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு, கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாடகங்களை கிராமப்புறங்களில் நடத்தியும் தொலைக்காட்சி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டு இத்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி நடத்தி அதன்மூலம் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுகாதார வளாகங்களை அவர்கள் அதிக அளவில் பயன்படுத்தும் பழக்கத்தை உருவாக்கி உள்ளார்கள்.

சுகாதார வளாகத்தை பயன்படுத்த ஆரம்பித்த பின்னர் கிராம மக்கள் தங்களின் தெருக்களின் சுத்தம் மற்றும் சுகாதார வளாகத்தின் நன்மைகள் அறிந்து முறையாக பயன்படுத்த அறிந்துள்ளனர்.

சுகாதார வளாகத்தினை பராமரிக்க அச்சுகாதார வளாகத்தினை உபயோகிக்கும் குடும்பங்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து பயனாளிகள் குழுக்களை அமைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ.10/– வீதம் வசூலித்து அத்தொகையினை குழுவின் பெயரில் Joint Account ஆக ஆரம்பித்து அத்தொகையிலிருந்து சுகாதார வளாகத்தினை பராமரிக்க தேவையான பினாயில், கிளினிங் பவுடர் போன்ற பொருட்கள் வாங்கவும் சுகாதார வளாகத்தினை காலை மற்றும் மாலை நேரங்களில் சுத்தம் செய்வதற்கு ஒரு நபரை அவர்களாகவே நியமித்து ஊதியமாக ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க மேற்கண்ட தொகையிலிருந்து செலவு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நடைமுறை கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்தொகையில் இருந்து மின்கட்டணம் செலுத்தவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

கிராம மக்கள் அனைவரும் இச்சுகாதார வளாகம் தங்களுடையது என்ற எண்ணத்தில் இச்சுகாதார வளாகத்தினை நல்லமுறையில் பயன்படுத்தினால் கிராமப்புறங்களும் தூய்மையான பகுதியாக மாறும். மக்களும் சுகாதாரமாக வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

அ. சந்திரசேகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர்.

# வேலூர் மாவட்டத்தில் குப்பைகளை எருவாக்கும் திட்டம்




கிராமப்புறங்களில் தினசரி உருவாகும் குப்பைகளை எல்லாம் ஒரு பள்ளமான இடத்தில் கொட்டுவார்கள். பல ஆண்டுகள் கழித்து அதை உரமாகப் பயன்படுத்துவார்கள். அதனால் இந்த இயற்கை உரங்களால் நிலங்களின் விளைச்சல் அதிகமாக இருந்தன. ஆனால் நகரங்களில் குப்பை கொட்ட இடம் இல்லை. அதனால் குப்பைகளை ஒன்றாக சேகரிக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை எனப்படும் குப்பைகளை எருவாக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகர் மையப்பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சி அலுவலக வளாகத்தில் குப்பைகளை எருவாக்கும் திட்ட கட்டடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஆ. சி. மோகன்தாஸ் இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

எல்லா வீடுகளுக்கும் இரண்டு வகையான குப்பைக் கூடைகள் வழங்கப்படும். அதில் பச்சை நிற குப்பைக் கூடையில் எளிதில் மக்கக்கூடிய குப்பைகள், சிவப்பு நிற குப்பைக் கூடையில் மக்காத குப்பைகள் (பிளாஸ்டிக், கண்ணாடி) போன்றவற்றைப் போட வேண்டும். அக்குப்பைகளை காலை 7 மணி முதல் 10.30 மணி வரை குப்பை வண்டியுடன் வரும் தொழிலாளர்களிடம் கொடுக்க வேண்டும். இப்படி சேகரிக்கப்படும் குப்பைகள் எருவாக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அமைக்கப் பட்டுள்ள சிமெண்ட் தொட்டிகளில் கொட்டப்படும். ஒவ்வொரு 3 அங்குலத்துக்கும், ஒரு அடுக்கு என்ற வகையில் ஒவ்வொரு அடுக்கின் மீதும் சாணம் கரைத்து தெளிக்கப்படும். இதனால் துர்நாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். குப்பைகள் அனைத்தும் மக்குவதற்கு சுமார் 45 நாட்கள் வரை ஆகும். பின்னர் அதை எடுத்து சல்லடை மூலம் சலித்து இரண்டு வகையான எருவாக விற்கப்படுகிறது. முன்னதாக குப்பைகள் மக்கும் பொழுது புழு, பூச்சிகள் உருவாகும். அதற்காக அந்த இடத்தில் 10 கோழிகள் விடப்பட்டுள்ளது.



- ✶ தமிழ்நாட்டில் முதன் முதலாக வேலூர் மாவட்டம் காந்தி நகர் பேரூராட்சியில் எக்ஸ்னோரா மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பேரூராட்சி அலுவலகத்துடன் இணைந்த அறையில் குப்பை கொட்டப்படுவது எதையும் முறையாக செய்தால் பாதிப்பு இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.
- ✶ இதனைத் தொடர்ந்து 26 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- ✶ 10 மேற்பார்வையாளர்கள், அவர்களின் கீழ் 31 தொழிலாளர்கள் இந்தப் பணியில் ஈடுபடுகின்றனர்.
- ✶ காந்தி நகர் பேரூராட்சியில் உள்ள 2 ஆயிரத்து 780 வீடுகளிலும் காலை 7.30 மணி முதல் 10.30 மணி வரை குப்பைகளைச் சேகரிப்பார்கள்.
- ✶ குப்பையில் தோன்றிய மாணிக்கம் என்று சொல்வார்கள், ஆனால் இங்கே குப்பையே மாணிக்கமாகிறது.
- ✶ திருமண மண்டபங்களின் மூலம் சேகரிக்கும் இலைகள் எருதுகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- ✶ இக்கட்டடத்தில் மழைநீர் சேகரிப்பு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ எந்தவொரு துர்நாற்றமும் வராமல் குப்பைத் தொட்டியின் அமைப்புகள் கட்டப்பட்டுள்ளது.
- ✶ தனியார் தொண்டு நிறுவனங்கள் சேவை மனப்பான்மையுடன் நல்ல லாபம் சம்பாதிக்க முடியும்.
- ✶ குப்பைகள் விவசாயத்திற்கு நல்ல உரமாகப் பயன்படுத்தப்படுகிறது.
- ✶ நகரங்கள், கிராமங்கள் முழு சுகாதாரம் உள்ளவைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

– எம். கலைமணி
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்

**இராமநாதபுரம் மாவட்டத்தில்**

# கணினி படிப்பு
# கிராமச்சாலைகள் அமைப்பு
# கடலரிப்பு தடுப்புப் பணிகள்

தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தை செயல்படுத்துவதில் இராமநாதபுரம் மாவட்டம் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 999 ஆரம்பப் பள்ளிகளும், 162 நடுநிலைப் பள்ளிகளும், 64 உயர்நிலைப் பள்ளிகளும், 58 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஆக மொத்தம் 1,283 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 2,471 பகுதி மக்கள் பயன்பெறுகிறார்கள். 5 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதுவரை 13,286 பேர் இத்திட்டத்தின் கீழ் கல்வி பயில சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் முதல் கட்டமாக இம்மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகள், அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கும் திட்டம் அனைத்து 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடங்கிட கணக்கிடப்பட்டு, 23,797 மாணவர்கள் பயிலுவது கண்டறியப்பட்டு, அவர்களுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த 12 தனியார் நிறுவனங்களுக்கு விடப்பட்டு, தற்போது இராமநாதபுரம், கடலாடி தவிர மற்ற 9 ஒன்றியங்களிலும் சுமார் 1,400 கணினிகள் மூலம் 6ஆம் வகுப்பு மாணவர்கள் 23,797 பேருக்கு பயிற்சி தரும் திட்டம் தொடங்கப்பட்டது. விரைவில் இராமநாதபுரம், கடலாடி ஒன்றியங்களில் தொடங்கப்படும்.

பரமக்குடி நகரில் உள்ள கே.ஜே.இ.எம். மேல்நிலைப் பள்ளியில் 257 பேர் 6ஆம் வகுப்பு படிக்கிறார்கள். சுமார் 10 கணினி மூலம் இவர்களுக்கு 40 மணி நேரம் கணினி பயிற்சி தரப்படுகிறது. இதற்கென அரசு ஒவ்வொரு மாணவனுக்கும் ரூபாய் 50 வீதம் ரூ. 15 இலட்சம் பயிற்சிக் கட்டணத்துக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இம்மாவட்டத்தில் மட்டும் 284 மையங்களில் கணினி பயிற்சி தரப்படுகிறது. பரமக்குடி வட்டாரத்தில் 32 இடங்களில் கணினி பயிற்சி தரப்படுகிறது. பரமக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்பகுதியைச் சேர்ந்த 3,677 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.




தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று அழைக்கப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில், பாரதப் பிரதமரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டப் பணி நடைபெற்று, (பிரதான் மந்திரி கிராம சதக்யோஜனா) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சாலைகள் எல்லாம் சீரமைக்கப்படுகிறது. கிராமங்களில் உள்ள மண் சாலைகள் எல்லாம் தரமான தார்சாலைகளால் ஒன்றோடு ஒன்று இணைப்புப் பெற்றுள்ளன.

இத்திட்டம் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாழ்பட்டுக்கிடக்கும் சாலைகளுக்கு விடிவுகாலம்




ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் திரு. ச. விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். ஆயிரம் மக்கள்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை போடப்படும். 500 முதல் 999 பேர் வரை உள்ள கிராமங்களுக்கு சாலை போடுவதும் இத்திட்டத்தின் கீழ் படிப்படியாக செயல்படுத்தப்படும். இதன்படி இம்மாவட்டத்தில் 1,000 பேருக்கு மேல் மக்கள் தொகை உள்ள 49 கிராமங்களில் இணைப்பு சாலை போடப்படுகிறது. இதனால் இந்த ஊரைச் சுற்றியுள்ள 119 குக்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள். இதுநாள் வரை இந்த கிராமத்து மக்கள் சந்தைக்கு செல்ல முடியாமல், பள்ளிக்கு செல்ல முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். மாவட்ட நிருவாகம் எடுத்த கணக்கெடுப்பின்படி இத்திட்டத்தின் கீழ் 500 மக்கள்தொகைக்கு கூடுதலாக உள்ள குக்கிராமங்கள் பலவற்றில் ஒத்தையடிப் பாதைகள் எல்லாம் தார்ச்சாலைகளாக மாறிவருகின்றன. இதன் அடிப்படையில் சுமார் 87 கிராமங்கள் இணைப்புச் சாலைகள் வசதி பெறுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் தெரிவித்ததின் அடிப்படையில் மாவட்ட நிருவாகம் எடுத்துள்ள தீவிர நடவடிக்கையால், நடைமுறைப்படுத்தி வரும், சாலைப்பணிகள், இணைப்புச் சாலைப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டால், இம்மாவட்ட மக்களின் சாலைவசதி 100% நிறைவேறிவிடும்.

திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் கூறியதாவது, "இராமநாதபுரம் மாவட்டத்தில் 2000-01 ஆம் ஆண்டில் முதல் கட்டப் பணிகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் போடப்படும் தார்ச்சாலைகள் எல்லாம் மிகவும் தரத்துடன் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் தரக்கட்டுப்பாடு அடிப்படையில் பணிகள் செய்யப்படுகின்றன. முதல் கட்டமாக மண்ரோடுகள் சரிசெய்யப்பட்டு, கிராவல் போடப்படுகிறது. அடுத்த கட்டமாக மெட்டல் போடப்படுகிறது. கடைசியில் தார் போடப்படுகிறது. இதன் தரம் மிகவும் கடுமையாகக் கண்காணிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

நடப்பு நிதி ஆண்டான 2003இல் 49 சாலைகள் போடப்படுகின்றன. இதன் நீளம் 131 கிலோ மீட்டர். இதன் மதிப்பு ரூபாய் 16 கோடியே 60 இலட்சம் ஆகும். இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இந்த மூன்றாம் கட்டப் பணிகள் அனைத்தும் முடிவுறும் போது, மாவட்டம் முழுவதும் 100% கிராமங்கள் அனைத்தும் சாலை மற்றும் இணைப்புச்சாலை வசதியைப் பெற்று விளங்கும். பிரதமரின் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகத்தில் இம்மாவட்டம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இம்மாநிலத்தில் தரமான சாலைகள் நிரம்பியிருப்பதோடு, இணைப்புச் சாலைகளாலும் சூழப்பட்ட மாவட்டமாக இது இன்னும் மூன்று ஆண்டுகளில் மாறும், என்பது கனவல்ல, உண்மை என்பதை நடந்து வரும் நிகழ்வுகள் நிருபிக்கும்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கடற்கரையோரம் வசிக்கும் மீனவ மக்களின் பல ஆண்டு காலக் கோரிக்கை, கடல் அரிப்பைத் தடுத்து நிறுத்தும் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டும் என்பது தற்போது



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நிறைவேறியுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கடற்கரையின் ஓரத்தில் ஏற்படும் கடல் அரிப்பால் பல மீனவர் குடும்பங்கள் வீடுகளை இழந்து பலநேரம் பாதிப்புக்கு உள்ளானதுண்டு. இத்துயரில் இருந்து விடுபட சுமார் 285 மீட்டர் நீளத்துக்கு கீழக்கரை கடற்கரையோரம் தடுப்புச் சுவர் எழுப்பப்பட வேண்டும் என்று பல ஆண்டு காலமாக கோரிக்கை வைத்து வந்தார்கள். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான் முதல் கட்டமாக 185 மீட்டர் நீளத்துக்கு தடுப்புச்சுவர் எழுப்பிட ஹட்கோ நிதி உதவியுடன் ரூபாய் 66 இலட்சத்தை ஒதுக்கி உத்தரவிட்டார்கள். இந்தப் பணி 22.8.2002ல் துவங்கியது. அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் கடல் அரிப்பைத் தடுத்திட கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவரில் கையாளப்பட்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் 185 மீட்டர் நீளத்துக்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. முதலில் போர் லேயர் ½ கிலோ அளவிற்கு கற்களால் நிரப்பப்பட்டு, பின்னர் கோர் லேயர் 50 கிலோ முதல் 125 கிலோ வரை உள்ள கற்களால் நிரப்பப்பட்டுள்ளது. இதற்கு ஆர்மர் லேயரில் 400 கிலோ முதல் 500 கிலோ எடையுள்ள கற்கள் நிரப்பப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக தமிழகத்தில்தான் இம்முறை பின்பற்றப் படுகிறது.

இம்மாவட்டத்தில் இதற்கு முன்னர் தடுப்புச் சுவர் எதுவும் கட்டப்படவில்லை. முதன் முதலில் கீழக்கரையில்தான் எழுப்பப்பட்டுள்ளது. இதனால் கடல் அரிப்பிலிருந்து இப்பகுதியில் குடிசைகள், ஓட்டு வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளது. பல ஆண்டுகாலக் கோரிக்கை நிறைவேறியதை எண்ணி மனம் பூரிக்கும் மீனவ மக்கள்,. மேலும் 100 மீட்டர் தூரத்துக்கு இந்தத் தடுப்புச் சுவர் நீடிக்கப்பட வேண்டும் என்றனர்.

இவர்களின் கோரிக்கையை முன்னரே கேட்டறிந்த மாவட்ட நிருவாகம் மேலும் 100 மீட்டர் தூரத்துக்கு தடுப்புச் சுவர் கட்டத் திட்ட மதிப்பீடு தயார் செய்து, சென்னையில் உள்ள ஐ.ஐ.டிக்கு அனுப்பி வைத்தது. தொழில்நுட்ப ரீதியில் இந்தத் திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த 100 மீட்டர் தூரம் கட்டி முடிக்க மேலும் ரூபாய் 27.50 இலட்சம் தேவைப்படுகிறது. அரசின் நிதி அனுமதி கிடைத்தவுடன் இந்த 100 மீட்டருக்கான பணி தொடங்கும் என மாவட்ட ஆட்சியர் திரு. ச. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கீழக்கரை கடற்கரையோரம் இந்தத் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளதை நேரில் பார்க்கும்போது மிக அழகாகக் காட்சியளிக்கிறது. மீனவ மக்களின் பல ஆண்டுக் கனவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆட்சியில் நிறைவேறியது கண்டு கடல் அலை கூட தனது வேகத்தை தணித்து, உள்ளே செல்கிறது!

**ரெ. இராவணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

# தருமபுரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் தார்ச்சாலைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று நாட்டின் முதன்மை மாநிலமாகத் திகழ நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். நகரங்களும், கிராமங்களும், அடிப்படை வசதிகளை சிறப்பாகப் பெற்று மக்கள் பயனடைந்திட பல புதுமையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அத்தகைய சிறப்பு மிகுந்த திட்டங்களில் ஒன்றாக தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு ஊரகச் சாலைகளை பிளாஸ்டிக் தார்ச்சாலைகளாக மாற்றும் திட்டம் ஒன்றாகும்.

தருமபுரி மாவட்டத்தில் அரூர் ஊராட்சி ஒன்றியம் கொளகம்பட்டி கிராமத்தில் இத்திட்டத்திற்கான பணியினைமாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார். அப்போது பேசும்போது அவர் குறிப்பிட்டதாவது,

“கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி. தமிழக கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களின் உயர்வுக்கு நன்மை தரும் பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்ற, இந்த அரசு கடந்த இரண்டாண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களையும் மக்கள் பாராட்டிடும் வகையில் செய்து முடித்து மகத்தான சாதனை புரிந்து வருகிறது.



அதில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்ட சீரிய திட்டம்தான் பிளாஸ்டிக் தார்ச்சாலை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தை தருமபுரி மாவட்டத்தில் இன்றைய தினம் உங்கள் அனைவரின் முன்னிலையில் துவக்கிவைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் சாலை வசதிக்கு முக்கியத்துவம் அளித்து, அதில் தனிக்கவனம் செலுத்தி திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்று வளர்ந்து வரும் விஞ்ஞான உலகின் வளர்ச்சிக்கேற்ப நவீன தொழில் நுட்பங்களை, அரசு நிருவாகத்திலும், திட்டப்பணிகள் செயலாக்கத்திலும், திட்டங்களை துரிதமாகவும், தரமாகவும் நிறைவேற்றி வருவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு என்றால் அது மிகையாகாது.

பொதுமக்கள், தங்கள் நிலப்பட்டாக்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும், இதர விவரங்களை அறிந்திடவும் தொடுதிரைக் கணினி திட்டத்தை 29 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தினார்கள். தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலுக்கா அலுவலகத்தில் ஒரு முன்னோடியாக அதனை அமைத்தார்கள். இத்திட்டம் இன்றைக்கு மக்களால் எளிதாகப் பயன்படுத்தப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

மாநிலம் முழுவதிலும் உள்ள 206 வட்டங்களிலும் கணினி பொருத்தப்பட்டு, நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிலப்படங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ் 2 முன்னோடித் திட்டங்கள் செங்கல்பட்டு, கொடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் வட்டங்களில் செயல்படுகின்றன.

அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்பும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில் நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்துவருகிறது.

இதுபோன்று பத்திரப்பதிவு தொடர்பான அலுவலகங்கள் முழுமையும் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரையும், காவல் கண்காணிப்பாளர்களையும் நேரில் உடனடியாகத் தொடர்பு கொண்டு, பணிகளை ஆய்வு செய்யும் விதமாக, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் வீடியோ கான்பரன்சிங் என்னும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில், ஆந்திர மாநிலம் குப்பத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இஸ்ரேல் நாட்டு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்திடவும், தரிசு நிலங்களை மேம்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஓசூர் பகுதியில் நவீன தொழில் நுட்பத்துடன் ரூ. 24 கோடியில் டான்பிளோரா எனப்படும் மலர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு இன்றைய தினம் செயலாக்கம் பெற்று வருகிறது.

பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் பொருட்கள், உபயோகத்திற்குப் பிறகு வீணாய் வீசப்படுவதால், அவைகள் தரையில் புதைந்து பூமிக்குள் நிலத்தடி நீர்சேமிப்பு தடைபடுகிறது. மென்மையான பொருளாய் இருப்பதால் அவைகள் காற்றின் மூலம் பரப்பப்பட்டு எல்லா இடங்களிலும் சிதைந்து சுற்றுப்புறச் சுகாதார சீர்கேட்டை அடைகிறது.

எனவேதான் தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்காத பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றுவதற்கும், இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்கும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் காரணமாக இதுகுறித்த விழிப்புணர்வு முனைப்பு இயக்கம் தமிழ்நாடு முழுவதும் தற்சமயம் நடத்தப்பட்டு வருகிறது.

மக்காத பிளாஸ்டிக்குகளை தாருடன் கலந்து போடப்படும் தார்ச்சாலைகள், உறுதியாகவும், நீண்டகாலம் உழைக்கும் தன்மையைக் கொண்டுள்ளனவாகவும் இருப்பதை அறிந்து அதன்படி, முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் பிளாஸ்டிக் தார்ச்சாலைகளாக மாற்றப்படும் என தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதன்படி, முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுமார் 30 கி.மீ. தூரமுள்ள ஊரகச் சாலைகளை பிளாஸ்டிக் தார்ச்சாலைகளாக மாற்றிட

உத்தரவிடப்பட்டு, அதன்படி நாமக்கல், மதுரை, தேனி உள்ளிட்ட சில மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் முதன் முதலாக இத்திட்டம் இங்கு தொடங்கப்பட்டுள்ளது. இங்கு மேற்கொள்ளப்படும் பிளாஸ்டிக் தார்ச்சாலையின் நீளம் 740 மீட்டர் ஆகும். இதன் மதிப்பீடு ரூ.3.50 இலட்சம் ஆகும். இத்திட்டம் தொடர்ந்து அனைத்து ஒன்றியங்களிலும் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் சாலை களுக்குப் பயன்படுத்தப்படும் தார், 10 சதவீதம் குறைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மக்காத பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. இச்சாலைகளுக்கு சாதாரண தார்ச்சாலைகளைவிட வெப்பத்தை தாங்கும் சக்தி அதிகமாதலால், வெப்பத்தினால் இச்சாலைகள் எளிதில் உருகுவதில்லை. இச்சாலைகளின் ஜல்லி தாருக்கிடையே தண்ணீர் செல்லாததால், குன்றும் குழிகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது.

மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் மறு உபயோகம் செய்வதால் நிலம், நீர் மற்றும் காற்று அசுத்தமாவது தடுக்கப்படுகிறது.

இப்படி மக்களின் பயன்பாட்டிற்கு எது சிறந்ததோ, அதனைச் செயல்படுத்துவதே இந்த அரசின் நோக்கமாகும். நமது மாவட்டத்தில் சாலை வசதிகளைப் பொறுத்தவரை ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் ஏறத்தாழ 600 கிமீ. நீளத்தில் 2,891 சாலைப்பணிகள் ரூ.29.10 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 110 கிமீ. நீளத்தில் சாலைப்பணிகள் ரூ.5.70 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் கடந்த இரு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் மொத்தம் 267 பணிகள் ரூ.25 கோடி மதிப்பிலும், 8 பாலங்கள் ரூ.5.30 கோடி மதிப்பிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது 38 பணிகள் ரூ.28 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் 19 பணிகள் ரூ.15.70 கோடி மதிப்பில் தொடங்கப்படவுள்ளது. மொரப்பூரில் ரூ.9.50 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலப்பணி இத்துறையினரால் செயலாக்கப்பட்டு வருகிறது.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரூர் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், சாலை அமைத்தல், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான கழிவறை கட்டும் பணி, கிராம நிருவாக அலுவலர் அலுவலகம், சிறுபாலம் கட்டுதல், சுற்றுச்சுவர் கட்டுதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற 731 பணிகள் ரூ.392.61 இலட்சம் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 743 பணிகள் ரூ. 301.18 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

வாணியம்பாடியிலிருந்து அயோத்தியாப்பட்டினம் வரையிலான சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது."

இவ்வாறு மாண்புமிகு செய்தி – விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் தெரிவித்தார்.

இந்த விழாவில் 22 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக தலா 25 ஆயிரம் வீதம் ரூபாய் 5.50 இலட்சம் மாண்புமிகு செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு.பங்கஜ்குமார்பன்சல் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.பி. முனுசாமி, திரு.வி. கோவிந்தராஜ், திரு. பி. பழனியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**தா. மனோகரன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

* * *

## அலர்ஜி

தேவைக்கு அதிகமாக அல்லது தவறுதலாக மருந்தை உட்கொள்ளும்போது, எதிர்பாராமல் ஏற்படும் இயல்புக்கு மாறான விளைவுதான் "அலர்ஜி" எனப்படுகிறது. இதைத் தமிழில் "ஒவ்வாமை" என்று அழைக்கின்றனர். இந்த உடலின் குணத்தை 1906ஆம் ஆண்டுதான் கண்டுபிடித்தனர்.



# கடிதம்

வாழ்க்கை அதன் இறுதியில், சில மகிழ்ச்சியான நினைவுகளால் ஒளி பெறுவது போல, அந்த இளம் காலைப் பொழுதில் வானம் சில நட்சத்திரங்களால் ஒளிர்ந்து கொண்டிருந்தது. கிழவன் ஒருவன் தன் நைந்துபோன மேல் வஸ்திரத்தைக் குளிருக்கு இதமாக அவ்வப்போது இறுக்கியபடி வீதியில் சென்று கொண்டிருந்தான். சில வீடுகளிலிருந்து, மாவரைக்கும் ஓசையும், பெண்களின், அவர்கள் வேலையுடன் இசைக்கும் இனிய குரல்களும் அவனது தனிமையில் துணை வந்தன. அவ்வப்போது கேட்ட ஒரு நாயின் குரைப்பு, பறவைகளின் சப்தம், அதிகாலையில் வேலைக்குச் செல்லும் ஒரு சிலரின் சந்தடி தவிர, அந்த நகரம் முழுவதும் நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. நகரவாசிகளில் பலர் இன்னும் உறக்கத்தில் இருந்தார்கள். கடுங்குளிர்காலப் பனிக்கு இந்த உறக்கம் அதிகமாகவே இருப்பதோடு, ஒருவன் தன் நயமான சிரிப்பால் அப்பாவியை மயக்குவதுபோல, குளிர், தூக்கத்தின் மயக்கத்தை எல்லாவற்றின் மீதும் பிரயோகிக்கிறது. அந்தக் கிழவன் சில சமயங்களில் குளிரால் நடுங்கினாலும், உறுதியோடு தன் நடையைப் பிரதான வீதியை அடையும் வரை தளர்த்தவில்லை. அந்தப் பிரதான வீதியை அடைந்ததும் தன் ஊன்றுகோலின் உதவியுடன் தன் நடையின் வேகத்தைச் சிறிது குறைத்துக் கொண்டான்.

வீதியின் ஒரு பக்கம் மரங்கள் வரிசையாக இருந்தன. மற்றொரு பக்கத்தில் நகரத்தின் பொதுவான பூங்கா ஒன்றிருந்தது. முன்னிரவு நேரத்தின் இருள் சற்றே கூடியது; குளிர்ந்த காற்று நேரடியாக வீசியதால் கடுமையாயிருந்தது. அங்கு உறைந்த பனிபோலக் காலை நட்சத்திரத்தின் மங்கிய ஒளி விழுந்த வண்ணமிருந்தது. பூங்காவின் இறுதியில் அழகிய நவீன மோஸ்தரிலான கட்டடம் ஒன்று காணப்பட்டது. அந்தக் கட்டடத்தின் மூடியிருந்த கதவுகள், ஜன்னல்களின் இடுக்குகள் வழியே வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

– தூமகேது



**எழுத்து**

**உடனடியான பலனை இன்பத்தை அளிக்கக் கூடியதாக மக்களது சங்கடங்களைத் தீர்க்கக் கூடியதாக எழுத்து அமைய வேண்டும்.**

**- பேறிஞர் அண்ணா**

அந்தக் கட்டடத்தின் மர வளைவைப் பிடித்தவண்ணம் நின்றிருந்த அந்தக் கிழவனின் மனம், தீர்த்த யாத்திரீகன் ஒருவன் தன் இலக்கை அடைந்ததும் கொள்ளும் நிறைவுபோல் மகிழ்வால் நிரம்பியது. அந்த மரவளைவில் பழைய பெயர்ப் பலகை ஒன்றில் புது வண்ணத்தில் "தபால் நிலையம்'' என்று எழுதப்பட்டிருந்தது. மெல்ல ஓசைப்படாமல் உள்ளே சென்ற கிழவன், வராண்டாவில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். உள்ளே வேலை செய்வோரில் ஓரிருவரின் குரல்கள் சுவரையும் தாண்டி மெதுவாகக் கேட்டன.

"தலைமைப் போலீஸ் அதிகாரி'' ஒரு குரல் தீர்க்கமாக உள்ளேயிருந்து அழைத்தது. அதைக் கேட்டதும் கிழவன் சற்று அசைந்தாலும், இன்னும் சிறிது காத்திருக்க முடிவு செய்தான். அவன் மனத்தில் இருந்த வாஞ்சையும் அன்புமே அவனை அந்தக் கடுங்குளிரைப் பொறுத்துக் கொள்ள வைத்தன.

ஒவ்வொரு பெயராகச் சொல்லி ஒரு குமாஸ்தா கடிதங்களின் மேலிருந்த ஆங்கில விலாசங்களை உரக்கப் படித்து, காத்திருந்த தபால்காரர்களிடம் விசிறியடித்துக் கொண்டிருந்தான். நீண்ட நெடுநாளையப் பயிற்சியால், அவன் பெயர்களைப் படிப்பதையும் கடிதங்களைப் பிரிப்பதையும் வேகமாகச் செய்ய முடிந்தது.

இதன் நடுவே "கோச்மேன் அலி'' என்றொரு குரல் கேட்டது.

கிழவன் எழுந்து, கடவுளுக்கு நன்றி செலுத்தும் வகையில் ஆகாயத்தை நோக்கிவிட்டு, முன் நடந்து, தன் கையைக் கதவின் மேல் வைத்தான்.

"கோதுல் அண்ணே!''

"ஹூம், யாரது?''

"நீங்கள் கோச்மேன் அலி என்று அழைத்தீர்கள் அல்லவா? நான் தான். என் கடிதத்திற்காக வந்திருக்கிறேன்''.

"அது ஒரு பைத்தியம் சார், அவனுக்கு வராத கடிதத்துக்காகத் தினம் வந்து நம்மைத் தொல்லை செய்கிறான்'' குமாஸ்தா தபாலதிகாரியிடம் கூறினான்.

கிழவன் மௌனமாக மெதுவாகக் கடந்து ஐந்து வருடங்களாக, தான் வழக்கமாக அமரும் பெஞ்சில் சென்று அமர்ந்தான்.

ஒரு காலத்தில் அலி ஒரு திறமையான வேட்டைக்காரனாயிருந்தான். திறமையுடன் கூடவே வேட்டையாடுவதில் இருந்த ஈடுபாடும் வளர்ந்த வண்ணமிருந்தது. ஒரு கட்டத்தில், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவன் போதை மருந்தின்றி இருக்க முடியாது என்பதைப் போல, அவனுக்கும் வேட்டையின்றி ஒரு நாளும் இருக்க முடியாது என்று ஆகிவிட்டிருந்தது. அந்நாட்களில் அலி பிறர் கண்களுக்கு எளிதாகத் தெரியாத கௌதாரியைப் பார்த்துவிட்டால் கூடப் போதும், அதை அவன் நிச்சயம் வேட்டையாடி விடுவான் என்று உறுதியாய்ச் சொல்லலாம். நாங்கள் கூடக் கவனிக்கத் தவறிவிடும் மஞ்சளும் பழுப்பும் கூடிய புதர்களில் தந்திரமாக மறைந்து கொள்ளும் அந்தப் பறவையை, அலியின் பருந்துப் பார்வை கவனித்து விடும். மறுகணம் அது வேட்டையாடப்பட்டு இறந்து கிடக்கும். இது தவிர, அவன் மீனவ நண்பர்களுடன் வெளியே செல்லும் பழக்கம் இருந்தது.

வாழ்க்கையின் அந்திப்பொழுதில், அவன் தன் பழைய வாழ்க்கை முறைகளைக் கைவிட்டுவிட்டு ஒரு புதிய வழியை மேற்கொண்டான். அவனது ஒரே பெண் மரியம் திருமணம் செய்து கொண்டு அவனை விட்டுச் சென்றிருந்தாள். தன் சிப்பாய்க் கணவனுடன், அவள் பஞ்சாபுக்குப் போய்விட்டாள். அவளிடமிருந்து – யாருக்காகத் தன் உப்புச்சப்பற்ற வாழ்க்கையை அவன் வாழ்ந்து கொண்டிருந்தானோ – அந்த மகளிடமிருந்து கடந்த ஐந்து வருடங்களாக எந்தவிதத் தகவலும் இல்லை. அவன் இப்போதுதான் முதல் முறையாக அன்பைப் பற்றியும் பிரிவைப் பற்றியும் புரிந்து கொண்டிருக்கிறான். அவனால் இப்போதெல்லாம் முன்புபோல் சாகச விளையாட்டுக்களை ரசிக்க முடிவதில்லை. பெற்றோரைப் பிரிந்த சிறு பறவைகளின் தவிப்பு மிகுந்த பயத்தைக் கண்டு சிரிக்க முடிவதில்லை.

ஒரு வேட்டைக்காரனின் உள்ளுணர்வு அவனது ரத்தத்திலும் எலும்புகளிலும் பரவிக் கிடந்தாலும், மரியம் அவனை விட்டுச் சென்றதால் அவன் வாழ்வில் உண்டான கடும் தனிமை, அதை மறக்கச் செய்துவிட்டு, இப்போது பசுமையான சோளக் காடுகளைப் பார்த்து வியக்கச் செய்தது. தீவிரமாகச் சிந்தித்து, இந்த உலகமே அன்பினால் உருவாகியுள்ளது என்றும் பிரிவுத் துயர் தப்பிக்க முடியாத ஒன்று என்னும் முடிவுக்கு அவன் வந்திருந்தான்.

இதைத் தொடர்ந்து திரும்ப எண்ணிப் பார்த்த அவன் ஒரு நாள் ஒரு மரத்தினடியில் அமர்ந்து சோகமாக அழுதிருக்கிறான். அன்றிலிருந்து அவன் ஒவ்வொரு நாளும் அதிகாலை **4** மணிக்கு எழுந்து தபால் நிலையத்திற்கு வருகிறான். அவனுக்கு அவன் வாழ்நாளில் என்றுமே கடிதம் வந்ததில்லை. எனினும் ஏதோ

ஒரு நம்பிக்கையிலும், எதிர்பார்ப்பிலும் விளைந்த வாஞ்சையிலும் ஆழ்ந்த நிதானத்துடன் அவன் தொடர்ந்து தபால் நிலையத்திற்குத் தினமும் முதல் ஆளாக வந்து கொண்டிருந்தான்.

உலகிலேயே சுவாரஸ்யமற்ற கட்டிடங்களில் ஒன்றான தபால் நிலையம் அவனைப் பொறுத்தவரை ஒரு புண்ணிய ஸ்தலமாகியது. அவன் அங்கு ஒரு குறிப்பிட்ட மூலையில், ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே அமர்வது வழக்கம். இதை அறிந்த மக்கள் அவனைப் பார்த்து எள்ளி நகையாடினார்கள். தபால்காரனும்கூட அவனிடம் விளையாடுவதுண்டு. அவனுக்கென்று எந்தக் கடிதமும் இல்லாத போதும், வேண்டுமென்றே அவன் மகிழ்ச்சியோடு கதவருகே ஆவலுடன் வருவதை வேடிக்கை பார்க்கவென்றே அவன் பெயரைக் கூப்பிடுவார்கள். இருப்பினும் அளவிடமுடியாத எதிர்பார்ப்புடனும் எல்லையற்ற பொறுமையுடனும் ஒவ்வொரு நாளும் அவன் வந்தான். பின் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றான்.

அலி, கடிதத்திற்காகக் காத்திருக்கும் வேளையில் தம் அலுவலகங்களுக்கெனக் கடிதங்களைப் பெற்றுச் செல்ல வரும் வேலையாட்கள், தங்கள் அலுவலக எஜமானர்களைப் பற்றிப் பேசும் வம்புகளைக் கேட்க நேரிடும். அழுக்கற்ற மேலாடைகளும் சப்தமிடும் காலணிகளும் அணிந்த இந்த இளம் வேலையாட்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். இதற்கிடையில், அவ்வப்போது திறக்கப்படும் இடைக்கதவு வழியே, பூசணிக்காய் போன்ற தலையும் சோகமான முகமும் கொண்ட தபால் அதிகாரி உள்ளே நாற்காலியில் அமர்ந்திருப்பது தெரியும். முகக்குறிப்பில் எந்தவிதமான உணர்ச்சியும் காட்டப்படாத இவரைப் போன்றவர்கள், கிராமத்துப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களாகவோ, அலுவலகக் குமாஸ்தாக்களாகவோ, தபால் அதிகாரியாகவோ தான் இருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஒரு நாள் வழக்கப்படி அவன் தன்னிடத்தில் அமர்ந்திருந்தான். கதவு திறந்த போதும் தன்னிடத்தை விட்டு அசையவில்லை.

''போலீஸ் கமிஷனர்'' குமாஸ்தா கூப்பிட்ட குரலுக்கு இளைஞன் ஒருவன் கடிதங்களுக்காகச் சுறுசுறுப்புடன் ஓடினான்.

சூப்பரின்டென்டன்ட் என்றதும் இன்னொருவன் வந்தான். இப்படியாக விஷ்ணுவை ஆராதிப்பவன் சகஸ்ரநாமங்களை உச்சரிப்பது போலக் குமாஸ்தா ஆயிரக்கணக்கில் பெயர்களைப் படித்துக் கொண்டிருந்தான்.

இறுதியாக அனைவரும் சென்றுவிட்டனர். அலி கூட எழுந்திருந்தான். தபால் நிலையத்திற்கு – அது ஏதோ விலை மதிப்பற்ற புராதன வரலாற்றுச் சின்னம் உடைய ஓரிடம் என்பது போன்ற மரியாதையோடு – வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றான்.

''அந்த ஆள்–'' – தபால் அதிகாரி கேட்டார் ''–அவன் என்ன பைத்தியமா ?''

''யார் ஐயா ? ஓ! ஆமாம்! குமாஸ்தா பதிலளித்தான். கடந்த ஐந்து வருடங்களாக மழையானாலும், வெயிலானாலும் ஒவ்வொரு நாளும் அவன் இங்கு இருப்பான். இருந்தாலும் அவனுக்குக் கடிதங்கள் வருவதில்லை''.

''புரிகிறது. ஒவ்வொரு நாளும் அவனுக்குக் கடிதம் எழுத, யாருக்கு நேரம் இருக்கிறதென்று அவன் நினைக்கிறான் ?''

''அவன், அவனுடைய கடந்த காலத்தில் பல பாவங்களைச் செய்திருக்கிறான். சில புண்ணிய ஸ்தலங்களில் அவன் ரத்தக்களரியை ஏற்படுத்தியிருக்கக்கூடும். அதற்கான பலனை இப்போது அனுபவிக்கிறான்''.

''பைத்தியக்காரர்கள் மிகவும் விநோதமானவர்கள்'' என்று அதிகாரி கூறினார்.

''ஆமாம். ஒரு முறை அஹமதாபாத்தில் வெறும் மண்ணைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்த பைத்தியத்தை நான் பார்த்தேன். இன்னொருவன் தினமும் ஆற்றங்கரையில் ஒரு குறிப்பிட்ட கல்லின் மீது நீரூற்றி வருவான்''.

''ஓ! இதென்ன பெரிய விஷயம்!!'' இன்னொருவன் குறுக்கிட்டான். ''நாள் முழுவதும் அங்குமிங்கும் நடந்து கொண்டேயிருக்கும் ஒரு பைத்தியத்தை நான் அறிவேன். இன்னொருவன் பாடிக்கொண்டேயிருப்பான். மூன்றாமவன், தன் கன்னத்தில் தானே அறைந்து கொண்டு, தன்னை அடித்தார்கள் என்று அழுவான்''.

தபால் நிலையத்திலிருந்து ஒவ்வொருவரும் பைத்தியம் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். வேலைக்கென்று செல்பவர் அனைவரும் இப்படிப் பொதுப்படையான கலந்துரையாடலில் பங்கு கொண்டு, ஒரு சில நிமிடங்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்வது வழக்கம். சிறிது நேரம் கவனித்துக் கொண்டிருந்துவிட்டு தபால் அதிகாரி எழுந்து கொண்டே சொன்னார் :

**எழுத்தாளன்**

**எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம்**
**மட்டுமிருந்தால் போதாது,**
**சரக்கும் இருக்கவேண்டும்.**

**- எமர்சன்**

''பைத்தியங்கள் தாங்களே அமைத்துக் கொண்ட ஓர் உலகில் வாழ்வதாகத் தெரிகிறது. ஒருவேளை அவர்களுக்கு நாமே கூடப் பைத்தியமாய்த் தோன்றுவோமோ என்னவோ! ஒரு வகையில் பைத்தியக்காரனின் உலகம், ஒரு கவிஞனுடையதைப் போன்றது என்று நினைக்கிறேன்''. இந்தக் கடைசி வார்த்தைகளை வசன கவிதை எழுதும் ஒரு குமாஸ்தாவைப் பார்த்துச் சொல்லிவிட்டு அவர் சிரித்தார். பின் வெளியேறினார். அலுவலகம் மீண்டும் அமைதியாயிற்று.

வெகு நாட்களுக்கு அலி தபால் நிலையத்துக்கு வரவில்லை. போதுமான இரக்கமோ அல்லது காரணத்தை ஊகிக்குமளவுக்குப் புரிந்துகொள்ளும் குணமோ யாரிடமோ அங்கு இல்லை. ஆனால் கிழவனை வரவிடாமல் செய்தது என்ன என்பதைத் தெரிந்து கொள்ள அனைவருக்கும் ஆவல். முடிவில் அவன் மீண்டும் வந்தான். அவன் முகத்தில், அவன் தன் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தான் என்பதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அவன் மூச்சுவிடக் கூட மிகவும் சிரமப்பட்டான். அன்று அவனால் பொறுமையைக் கடைபிடிக்க இயலவில்லை.

''ஐயா!'' என்று தபாலதிகாரியிடம் அவன் கெஞ்சினான். ''என்னுடைய மரியமிடமிருந்து ஏதாவது கடிதம் உண்டா?''

தபாலதிகாரி வெளியே செல்லும் அவசரத்தில் இருந்தார்.

''என்னய்யா உன்னோடு ஒரே தொல்லையாகப் போச்சு!'' அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

''என் பெயர் அலி'' எங்கோ கவனமாக அலி கூறினான்.

''தெரியும்! தெரியும்! ஆனால் உன் மரியத்தின் பெயரை நாங்கள் என்ன பதிவு செய்தா வைத்துள்ளோம்?''

''அப்படியானால் தயவு செய்து பதிவு செய்து கொள்ளுங்கள் ஐயா. நான் இல்லாத போது ஏதும் கடிதம் வந்தால் உதவியாய் இருக்கும்''. தன் வாழ்வின் பெரும் பகுதியை வேட்டையில் கழித்துவிட்ட அக்கிராமத்தானுக்கு, மரியம் என்ற பெயர் மீது அவனைத் தவிர மற்றவர்களுக்குக் காலணா மதிப்பு கூட இல்லை என்பது தெரிந்திருக்க நியாயமில்லை.

தபாலதிகாரி பொறுமையை இழந்து கொண்டிருந்தார். ''உனக்கு அறிவிருக்கா?'' அவர் கத்தினார். ''போய்ச்சேர்! உன் கடிதங்களை நாங்கள் என்ன சாப்பிட்டா விடுவோம்'' இப்படிச் சொல்லிவிட்டு வேகமாக அவர் வெளியேறினார்.

அலி மெதுவாகத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் வெளியே நடந்தான். தன் இயலாமை குறித்து

**ருஷ்ய எழுத்தாளரின் மூளை**

*ருஷ்ய எழுத்தாளர் டுர்கனேவ் என்பவரின் மூளையின் எடை 2021 கிராம். இது சராசரி மனித மூளையைவிட அதிகமாகும். (சராசரி மனித மூளையின் எடை 1375 கிராம்).*

அவன் கண்களில் கண்ணீர் தளும்பியது. அவனுக்கு நம்பிக்கை இன்னமும் இருந்தது. என்றாலும் அவனது பொறுமை எல்லை கடந்து விட்டது. இருந்தும் அவனால் எப்படி மரியமிடமிருந்து இன்னமும் கடிதம் எதிர்பார்க்க முடியும்?

அலி தன் பின்னால் ஒரு குமாஸ்தா வருவதை அறிந்து திரும்பி நோக்கினான்.

''ஐயா! குமாஸ்தா ஆச்சர்யமடைந்தாலும் மரியாதை கருதி,என்ன?'' என்று கேட்டான்.

''இங்கே இதைப் பாருங்கள்'' அலி ஒரு பழைய தகர டப்பாவை எடுத்து அதனுள்ளிலிருந்து ஐந்து தங்க நாணயங்களை, திக்பிரமையடைந்து நின்றிருந்த குமாஸ்தாவின் கைகளில் வைத்தான்.

''தயவு செய்து அதிர்ச்சியடையாதீர்கள்'' அவன் மேலும் தொடர்ந்தான். ''எனக்கு உதவாத இவை உங்களுக்கு உபயோகப்படும். ஆனால் எனக்கு ஓர் உபகாரம் செய்வீர்களா?''

''என்ன?''

''அங்கே என்ன தெரிகிறது?'' வானத்தைச் சுட்டிக் காட்டி அலி வினவினான்.

''சொர்க்கம்''.

''அல்லா அங்கிருக்கிறார். அவர் முன்னிலையில் நான் இந்த நாணயங்களை உங்களிடம் தருகிறேன். மரியத்தின் கடிதம் வந்ததும் அதை எனக்கு அனுப்பி வையுங்கள்''.

''எங்கே? எங்கே அனுப்புவது?'' மிகவும் அதிர்ச்சி அடைந்திருந்த குமாஸ்தா கேட்டான்.

''என் கல்லறைக்கு''

''என்ன?''

''ஆமாம். உண்மையாக. இன்றுதான் என் கடைசி நாள். ஐயோ மரியமை நான் பார்க்கவில்லை. அவளிடமிருந்து கடிதமும் வரவில்லை''. குமாஸ்தா மெதுவாக, கண்ணீர் நிரம்பிய கண்களுடனிருந்த அலியை விட்டு விலகி, கையில் தங்க நாணயங்களோடு அவன் வழியில் சென்றான்.

அதற்குப் பிறகு அலியை யாரும் பார்க்கவில்லை. அவனைப் பற்றி விசாரிக்கக்கூட எவரும் முயலவில்லை.

ஒரு நாள் தபாலதிகாரிக்கு ஒரு பிரச்சினை.

மற்றொரு நகரத்திலிருந்த அவரது பெண் நோய்வாய்ப்பட்டிருந்தாள். தபால் அதிகாரி அவளைப் பற்றிய செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார். கடிதங்கள் கொண்டு வரப்பட்டன. மேசையின் மேல் குவிக்கப்பட்டன. அவர் எதிர்பார்த்திருந்த நிறத்திலும் வடிவத்திலும் இருந்த ஓர் உறையைக் கண்டு ஆவலுடன் அதை அதிகாரி பிடுங்கிப் பார்த்தார். உறையின் மேல் 'கோச்மேன் அலி' என்றிருந்ததைக் கண்டதும் மின்சாரத்தால் தாக்குண்டவர் போல் அதைக் கீழே போட்டு விட்டார். அவருடைய அதிகாரத் தோரணை தன் மகளைக் குறித்த வருத்தத்திலும், எதிர்பார்ப்பிலும் அவரைவிட்டு நீங்கி அவருடைய மனிதமனம் துலங்கியபடி இருந்தது. அந்தக் கடிதம் அலியின் மகள் மரியத்திடமிருந்து வந்திருக்கிறது என்பதும், இந்தக் கடிதத்தைத்தான் அந்தக் கிழவன் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தான் என்பதும் அவருக்கு உடனே புரிந்தது.

''லக்ஷ்மிதாஸ்...'' தபால் அதிகாரி அலியிடம் பணம் வாங்கிய குமாஸ்தாவை அழைத்தார்.

''ஐயா ?''

''இதோ, இந்தக் கடிதம் வண்டிக்காரன் அலிக்கு வந்தது. இப்போது அவன் எங்கே இருக்கிறான் ?''

''தெரியாது. விசாரித்துப் பார்க்கிறேன்''

தபால் அதிகாரிக்கு, தன் மகளிடமிருந்து வரவேண்டிய கடிதம் அன்று முழுவதும் வரவில்லை. அன்று இரவு முழுவதும் கவலையுடன் விழித்திருந்தார். அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து தபால் நிலையம் சென்று காத்திருந்தார். நான்கு மணிக்கு வண்டிக்காரன் அலி வரும்போது அவனுடைய கடிதத்தைத் தாமே கொடுத்துவிடலாம் என்றும் நினைத்தார்.

இப்போது தபாலதிகாரிக்கு அலியின் மனநிலை நன்றாக புரிந்தது. தன் மகளின் கடிதத்திற்காக ஒரே ஓர் இரவு தவிப்புடனும் ஆவலுடனும் காத்திருந்த நேரத்திலேயே அவருக்கு அலியின் வேதனையை உணர முடிந்தது. கடந்த 5 ஆண்டுகளில் இப்படி எத்தனை இரவுகளை அவன் தவிப்பிலும் வேதனையிலும் கழித்திருக்க வேண்டும் ?

மணி ஐந்தடித்ததும் யாரோ லேசாகக் கதவைத் தட்டினார்கள். நிச்சயமாக இது அலியாகத்தான் இருக்கும் என்று நினைத்தார் தபாலதிகாரி. ஒரு தந்தையின் வேதனை மிகுந்த உள்ளத் தவிப்பைப் புரிந்து கொண்டவராக, அவர் வேகமாக எழுந்து கதவைத் திறந்தார்.

''வாப்பா அலி, உள்ளே வா'' என்று கூறியபடி கிழவன் அலியின் கடிதத்தை அவனிடம் கொடுத்தார். அலி தன் கைத்தடியின் மேல் சாய்ந்தபடி, கடைசியாக அவன் குமாஸ்தாவிடம் விடைபெற்றுச் சென்ற அன்று போலவே, கண்களில் நீர் ததும்ப நின்றான். ஆனால் அவன் உடலில் முன்பு போன்ற இறுக்கம் இல்லை. கருணையின் ரேகைகள் படர்ந்து மென்மை கூடியிருந்தது. அவன் கண்களை உயர்த்திப் பார்த்த போது, அவற்றில் ஓர் அமானுஷ்யமான ஒளி வீசியது. தபால் அதிகாரி பயத்துடனும் வியப்புடனும் பின் வாங்கினார்.

தபால் அதிகாரியின் குரல் கேட்டு லக்ஷ்மிதாஸ் வந்தான். ''யாரது ஐயா? யார் அலியா?'' ஆனால் அதிகாரி லக்ஷ்மிதாஸின் கேள்வியைச் சட்டை செய்யவில்லை. அவர் கண்களை அகல விரித்து அலி சென்று மறைந்த திசையைப் பார்த்தார். ''எங்கே போயிருப்பான்?'' பின் மெல்ல லக்ஷ்மிதாஸின் பக்கம் திரும்பி, ''ஆமாம், நான் அலியுடன்தான் பேசிக் கொண்டிருந்தேன்'' என்றார்.

''கிழவன் அலி இறந்து போய் விட்டான். ஆனால் அவன் கடிதத்தை என்னிடம் கொடுங்க''

''என்ன இறந்து விட்டானா? எப்போது? நிச்சயமாகத் தெரியுமா?''

''ஆமாம். உண்மைதான்''. உள்ளே நுழைந்த தபால்காரன் சொன்னான். ''அவன் இறந்து மூன்று மாதங்களாகின்றன''

தபாலதிகாரிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. மரியத்தின் கடிதம் இன்னும் கதவருகேதான் கிடந்தது. அலியின் உருவங்கூட அவர் கண் முன்னால் நின்றது. கடைசியாக அலியுடன் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றி லக்ஷ்மிதாஸ் சொன்னபோதும் கூட அவரால்

**தேநீர்**

*உலகில் தண்ணீருக்கு அடுத்தபடியாக, அதிக மக்கள் அருந்துவது தேநீரைத்தான்.*

நம்பமுடியவில்லை. கதவு தட்டப்பட்ட ஓசையும், அலியின் கண்ணீர் ததும்பும் முகமும் உண்மையல்ல என்று அவரால் ஏற்க முடியவில்லை. உண்மையில் அவர் அலியைத்தான் பார்த்தாரா? அல்லது வெறும் கற்பனையா? அதிகாரி மிகவும் குழம்பிப் போனார்.

தபால் நிலையத்தில் மாமூலான வேலை துவங்கியது. வழக்கம் போலக் குமாஸ்தா, "போலீஸ் கமிஷனர், சூப்பரின்டென்டன்ட், லைப்ரேரியன்" என்று பெயர்களை உரக்கப் படித்துக் கடிதங்களை வீசிக் கொண்டிருந்தான்.

ஆனால் தபாலதிகாரி முன்புபோல் அவற்றை அலட்சியமாகப் பார்க்கவில்லை. இப்போது அவர் ஒவ்வொரு கடிதத்தையும் ஆர்வத்துடன் பார்த்தார். ஒவ்வொன்றிலும் ஒரு துடிக்கும் இதயம் இருக்கிறது என்பதுபோல், கடிதங்களின் அடிப்படைப் பயனையும், மனித மதிப்பையும் அவர் உணர்ந்தார்.

அன்று மாலை அவரும் லக்ஷ்மிதாஸும் அலியின் கல்லறையை நோக்கி மெதுவாக நடந்தார்கள்.

மரியத்தின் கடிதத்தை அலியின் கல்லறை மீது வைத்துவிட்டுத் திரும்பினார்கள்.

"லக்ஷ்மிதாஸ் இன்று நீ தானே முதலில் அலுவலகத்திற்கு வந்தாய்?"

"ஆமாம்"

"பின் எப்படி...இல்லை...ஒன்றும் புரியவில்லை..."

"என்ன சார்"

"சரி. ஒன்றுமில்லை விடு"

தபால் நிலையம் அடைந்ததும் லக்ஷ்மிதாஸுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு உள்ளே சென்றார் அதிகாரி. அலியின் தவிப்பை இவ்வளவு நாளும் புரிந்து கொள்ளாததற்காகத் தம்மை நொந்து கொண்டார். தன் மகளிடமிருந்து வரவேண்டிய கடிதத்தை எதிர்பார்த்து அன்று இரவும் அவர் அங்கே கழிக்க வேண்டும்.

கரி அடுப்பின் முன் அமர்ந்து, குற்றவுணர்வுடனும், கனத்த மனத்துடனும் தன் மகளின் கடிதத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார் அவர்.

*"தற்கால இந்தியச் சிறுகதைகள்"*
*நூலிலிருந்து....*
*வெளியீடு :*
*சாகித்திய அகாதமி*

## குவாண்டம் கம்ப்யூட்டர்

**நூ**று அணுக்களை வரிசையாக வைத்துவிட்டு, அவற்றின் குவாண்ட நிலைகள் எத்தனை விதம் இருக்கமுடியும் என்று பார்த்தால் அது பில்லியன்



கணக்கில் போகும். இந்தப் பண்பைப் பயன்படுத்தி இயல்பியலாளர்கள் ஒரே சமயத்தில் மிக மிகப் பெரிய கணக்குகளை கணினிகளால் செய்ய முடியும் என்று கருதுகின்றனர்.

நியு ஜெர்சி பிரின்சிடன் உயர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மேக்ஸ் டெக்மார்க் என்பவர் வரும் 35 ஆண்டுகளில் உலகத்திலுள்ள அத்தனை கணினிகளையும் ஒன்று சேர்ந்த வேகம், நினைவு போன்றவற்றை ஒரே ஒரு குவாண்டம் கம்ப்யூட்டர் செய்து விடும் என்று கூறியுள்ளார்.

---

"ஆஜானுபாகு" என்றால் முழங்காலளவு நீண்ட கைகளை உடையவர் என்று பொருள். கம்பீரமான சிலருக்குத்தான் அப்படி இருக்கும். மற்றவர்களுக்குக் கைகளைத் தொங்கவிட்டால் முழுங்காலுக்கு 10 அல்லது 12 சென்டி மீட்டர்கள் மேலேயே நின்று விடும்.

---

5 அவுன்ஸ் எடையும், 10 செ.மீ. நீள்மும் உடைய மனித சிறுநீரகம் 65 கி.மீ. நீளம் கொண்ட நுண்ணிய குழாய்கள் மூலம் நாளொன்றிற்கு சுமார் 500 காலன் இரத்தத்தை சுத்தம் செய்கிறது.

---

கர்ப்பிணிகள் ஓய்வு எடுப்பது என்பது சத்துணவு சாப்பிடுவதற்கு இணையாகுமாம். இதை அலிகாரைச் சார்ந்த மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவர்கள் 244 கர்ப்பிணிகளை ஆய்வு செய்து இந்த முடிவை அறிவித்துள்ளனர். 19 மணி நேரம் தினசரி ஓய்வு எடுத்தவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் எட்டு மணி நேரம் ஓய்வு எடுத்த கர்ப்பிணிகளுக்குப் பிறந்த குழந்தைகளைவிட ஏறக்குறைய ஒரு கிலோ கிராம் எடை கூடுதலாக இருந்ததாம்.

# ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 132ஆவது பிறந்தநாள் விழா 7.9.2003 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.என். தளவாய் சுந்தரம் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசும்போது,

"இந்தியாவை அன்னியர்களிடமிருந்து காப்பாற்ற தனது சொத்தை எல்லாம் செலவழித்தவர் வ.உ. சிதம்பரனார் அவர்கள், சுதந்திரத்திற்காக தனது குடும்பத்தையே அர்ப்பணித்த வ.உ.சிதம்பரனார் அவர்களின் 132ஆவது பிறந்தநாளை அவர் பிறந்த மண்ணில் கொண்டாடுகிறோம். இதுபோன்ற விழாக்களுக்கு பெருமையையும், தியாகச் செம்மல் களுக்கு நினைவிடம் கட்டும் தலைவியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள்" எனக் குறிப்பிட்டார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், வருவாய்த்துறை, தாட்கோ, வேளாண்மைத்துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை, சமூகநலத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் 603 பேருக்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் அமைச்சர் அவர்கள் பேசும்போது, "சுதந்திரப் போராட்டத் தியாகிகளை நினைவு கூறும் வகையில் இன்று வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இன்று கிராமப்புறங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினர் இணைந்து தொழில் அதிபர்களாக மாறிடும் வகையில் அவர்கள் தொழில் துவங்கிட பல்வேறு கடன் உதவிகளை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்'', எனக் குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ. கருப்பசாமி அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களிடையே



நடைபெற்ற பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கிப்பேசினார். அப்போது அவர் ; “பெண்கள் கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து கடந்த ஆண்டு 1 இலட்சத்து 5 ஆயிரத்து 405 சைக்கிள்கள் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு சைக்கிள்கள் வழங்குவதற்காக 6 கோடியே 49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பட்டப்படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு முழு மானியம் வழங்கிட கடந்த ஆண்டு ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 7 ஆயிரம் மாணவிகள் பயன் பெற்றுள்ளனர். தற்போது 166 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. மீதம் உள்ள விடுதிகளும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் சொந்தக் கட்டடங்களுக்கு மாற்றப்படும்'' என கூறினார்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல்களான திரு. வ.உ.சி.ஆ. சங்கரலிங்கம், திரு. வ.உ.சி. ஆ. உலகநாதன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பின்னர் அமைச்சர் அவர்கள் பேசும்போது,

“தேசியத் தலைவர்களை நினைவு கூறும் வகையில் அன்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாவட்டங்களுக்கு தலைவர்களின் பெயரைச் சூட்டினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேசியத் தலைவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவிட்டுள்ளார்கள்'' எனக் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை ஏற்ற மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பேசும்போது, “உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை என்று பாடிய பாரதியார், வெள்ளையர்களுடன் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம் போன்ற பல்வேறு வீரத்தியாகிகளைப் பெற்ற மாவட்டம் தூத்துக்குடி மாவட்டமாகும். திருநெல்வேலியில் சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் நினைவாக ரூ.75 இலட்சம் செலவில் மணிமண்டபம் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையில் ரூ.58.69 இலட்சம் செலவில் காயிதே மில்லத் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரில் உள்ள மருதுபாண்டியர் நினைவிடத்தில் ரூ.5.40 இலட்சம் செலவில் மருதுபாண்டியர் சகோதரர்களின் முழுஉருவச் சிலைகள் நிறுவப்பட உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் அதியமான் கோட்டம் கட்ட நில மதிப்பிற்கான தொகை வழங்கிட போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விருதுநகரில் ரூ.9 இலட்சம் செலவில் காமராஜர் நினைவுத்தூண் நிறுவிடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.7.2003 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் ஓடாநிலை கிராமத்தில் தீரன்சின்னமலை நினைவாக மணிமண்டபம் அமைத்திடவும், சென்னை மெரினா கடற்கரையில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் ரூ.38.50 இலட்சம் செலவில் அருங்காட்சியகம் அமைத்திடவும், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்திலுள்ள பாரதி மணி மண்டபத்தின் அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 57 இலட்சம் செலவில் பல்நோக்கு அரங்கம் அமைத்திடவும், எட்டயபுரத்தில் உள்ள உமறுப்புலவர் மணிமண்டபத்தை ரூ.23 இலட்சம் செலவில் சீரமைத்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. ராஜாராமன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். முன்னதாக அமைச்சர் பெருமக்கள் வ.உ.சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தூத்துக்குடி அரசு இசைப்பள்ளி மாணவர்களின் மங்கள இசையும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

– துரை. ராஜ்குமார்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி.

* * *

# சர்க்கரை நோய் வருமுன் காக்க, வந்தபின் தப்பிக்க முடியுமா?

**சர்க்கரை அதிகம் உண்பதனால் சர்க்கரை நோய் வருகின்றதா?**

உடலுக்கான சக்தியைத் தருவது குளுக்கோஸ் என்கிற சர்க்கரை. இந்த சர்க்கரை சத்து நம் உணவில் உள்ள மாவுப் பொருள்களிலிருந்து கிடைக்கின்றது. நம்முடைய குடல் நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களை குளுக்கோஸாக மாற்றி இரத்தத்தின் வழியாக எல்லா உறுப்புகளில் இருக்கும் செல்களுக்கும் அனுப்புகிறது.

இரத்தத்தில் உள்ள குளுக்கோஸை அப்படியே எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள பல உறுப்புகளுக்குத் தெரிவதில்லை. அதற்கு இன்சுலின் என்ற ஒரு இயக்குநீர் (என்ஜைம்) தேவைப்படுகிறது. அதாவது இன்சுலின் இரத்தத்தில் உள்ள சர்க்கரையை உடல் உறுப்புகளின் செயல்பாட்டுக்கு சக்தியாக மாற்றித் தருகிறது.

**சர்க்கரை நோய் எப்படி ஏற்படுகிறது?**

இன்சுலின் தயாரிப்பிலோ அல்லது செயல்பாட்டிலோ கோளாறு ஏற்படும் பொழுது உடல் உறுப்புகளின் செல்கள் உடல் இயக்கத்திற்கு இரத்தத்தில் உள்ள சர்க்கரையைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் போதிய சக்தி கிடைக்காமல் முழி பிதுங்குகின்றன. அதனால் இரத்தத்தில் சர்க்கரை கூடுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவை அது தாண்டும் பொழுது கூடுதல் சர்க்கரையை வெளியேற்றியே ஆக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அதிகமான சர்க்கரை, நீர்த்தாரைகளை அடைத்துக் கொண்டால் அபாயமாகிவிடும். இந்தப் பிரச்சினையைத் தடுக்கிறேன் என்று சிறுநீரகம் உடல் தேவைக்கு அதிகமான சர்க்கரையுடன் சேர்த்து நீரையும் வெளியேற்றுகிறது.

இந்த நிலைநீடிக்கும் பொழுது உடலின் பல செல்கள் தண்ணீர் விடாத பயிர் போல வறண்டு செயலிழந்து விடுகின்றது. சிறுநீர் மூலம் சக்தியை இழப்பதனால் நீர் இழப்பு என்பது நீரிழிவு நோய் ஆயிற்று.

- ✶ 1995 ஆண்டுகளில் சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை — 1½ கோடி
- ✶ 1998ம் ஆண்டு எண்ணிக்கை — 2½ கோடி
- ✶ 2025ம் ஆண்டு எண்ணிக்கை — 6 கோடி

உலகிலேயே சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை முதலிடம் இந்தியாவுக்கே.

சர்க்கரை நோயின் உலகத் தலைநகர் நம் இந்திய நாடு.

உலக சர்க்கரை நோயாளிகளில் நான்கில் ஒருவர் இந்தியர்.

**சர்க்கரை நோய்க்கான காரணங்கள்**

1. பரம்பரை

2. சுற்றுபுற சூழ்நிலையை ஒட்டிய வாழ்க்கை முறை மாற்றங்கள்

1. பரம்பரையில்




**2. சுற்றுப்புற சூழ்நிலையை ஒட்டிய வாழ்க்கை முறை மாற்றங்கள் எவை?**

1. அதிக எடை

2. அதிகமான உணவு

டாக்டர் G. சந்தானம்,
M.B.B.S., DD., FICs, ACC. DIAB (IND), PGC, DIAB (Australia)
ஈஸ்ட் கோஸ்ட் சர்க்கரை நோய் மையம், ஸ்ரீவித்யா மருத்துவமனை, மயிலாடுதுறை.

3. உடற்பயிற்சி இல்லாமை

4. மனக்கவலை

5. அதிக இனிப்பு

6. சில மாத்திரைகள்

**சர்க்கரை நோய் எவ்வளவு காலத்தில் குணமாகும்?**

கருவறையில் தோன்றி கல்லறை வரை நீடிக்கும் நோய் 5 பருவங்களாக வளர்கிறது.

**சர்க்கரை நோயின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி?**

**5 பருவங்கள்** (5 Stages)

I. பருவம் 1 சர்க்கரை நோய் மரபணுவுடன் பிறத்தல் (கருவறையில் தோன்றும் நோய்) (Potential Diabetic)

II. பருவம் 2 சர்க்கரை நோய்க்கு முன்நிலை (Pre-Diabetic-IGT)

III. பருவம் 3 சர்க்கரை நோய்க்கு ஆரம்பநிலை (0–5 ஆண்டுகள்) (Early-Diabetic-IGT)

IV. பருவம் 4 சர்க்கரை நோயின் தீய விளைவுகள் துளிர் விடும் நிலை (5 முதல் 12 ஆண்டுகள்) (Stages of budding of complications)

V. பருவம் 5 சர்க்கரை நோய் இறுதி நிலை – (10–15 ஆண்டுகளுக்கு மேல்) (காசைக் கரைத்து வாழ்நாளை நீட்டலாம்) (சர்க்கரை நோயின் தீய விளைவுகள் நோயாளி தானே அறியும் வண்ணம் வெளிப்படும் நிலை) (Stage of Established complications)

**இந்த பருவங்களைப் பற்றி விளக்க முடியுமா?**

**பருவம் 1** சர்க்கரை நோய் மரபணுவுடன் குழந்தை பிறத்தல் (கருவறையில் தோன்றி கல்லறை வரை நீடிக்கும் நோய்) (Genetic)

**பருவம் 2** இரண்டாம் நிலை சர்க்கரை நோய்க்கு முன்நிலை (Pre Diabetic - IGT)

- நோயாளிக்கு எந்த அறிகுறியும் தெரியாது.
- சாதாரண இரத்தப் பரிசோதனையிலும் தெரியாது.
- G.T.T. என்ற ஸ்பெஷல் டெஸ்ட் தேவை.
- 25–30 வயதில் வருமுன் காக்க வருடம் ஒரு முறை பரிசோதனை செய்ய வேண்டும்.
- சர்க்கரை நோயின் ஆரம்பநிலைக்கு (Stage 3) செல்லாமல் தடுக்கலாம், பிற்காலத்தில் வரகூடிய ஹார்ட்அட்டாக்–இல் இருந்து தப்பிக்கலாம். இந்நிலையில் மருந்தில்லா சிகிச்சைகளான வாழ்க்கை முறை மாற்றங்களை பின்னிப் பிணைந்த உடற்பயிற்சி, உணவு முறை ஆகியவற்றைக் கைக்கொண்டால் போதும்.

**பருவம் 3** மூன்றாம் நிலை (Early Diabetic - IGT) சர்க்கரை நோய்க்கு ஆரம்ப நிலை 0 முதல் 5 ஆண்டுகள் வரை

- நோய்க்கான அறிகுறிகள் இல்லாமலும் இருக்கலாம்.
- உணவு, உடற்பயிற்சியாலும் கட்டுப்படும். ஆரம்ப காலத்தில் சில வருடங்கள் வரை மருந்துகள் தேவையில்லை. அல்லது சில எளிதான மருந்துகளே போதுமானது.
- இந்த நிலையில்தான் வாய்ஜால விளம்பர மருத்துவர்கள் பக்க விளைவுகளே இல்லாத மருந்து என்று ஏமாற்றுகிறார்கள். மூன்றே மாதத்தில் சர்க்கரை நோய் குணமாகி விடும் என்று ஏமாற்றுகிறார்கள்.

**பருவம் 4** நான்காம் நிலை – சர்க்கரை நோய்க்கான பாதிப்புகள் துளிர்விடும் நிலை (Stage of budding of Complications)

- கால் பாதிப்பு, ஹார்ட் அட்டாக், கை கால் பக்கவாதம்.
- கால் இழப்பு போன்ற பாதிப்புகளில் துளிர்விடும் நிலை நோயாளி தானே உணர முடியாது. VPT, Monoflament போன்ற பரிசோதனைகள் மூலம்தான் அறிய முடியும்.
- வருடம் ஒரு முறை ECG, XRay, Lipid Profile செய்ய வேண்டும்.
- வருடாந்திர நோய்த்தடுப்புப் பரிசோதனைகள் மேற்கொண்டால் நோயால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கலாம்.
- தொடர் பரிசோதனை, தொடர் சிகிச்சையால் Stage 5 (5ம் நிலைக்கு) போகாமல் தடுக்கலாம்.

**பருவம் 5** ஐந்தாம் நிலை – முழு பாதிப்புகளுடன் வாழும் இறுதி நிலை (Stage of Established Complications)

- பார்வை இழக்கச் செய்யும் – கண் பாதிப்பு
- உயிரைக் குடிக்கும் – மாரடைப்பு

- காசைக் கரைக்கும் – சிறுநீரக செயலிழப்பு
- இயல்பு வாழ்க்கையை முடக்கும் – கை, கால் பக்கவாதம் கால் இழப்பு

போன்ற பாதிப்புகளுடன் போராடி காசைக் கரைத்து வாழ்நாளை நீட்டலாம்.

**சர்க்கரை நோய் எந்தப் பருவத்தில் உள்ளது என்று எப்படித் தெரிந்து கொள்வது?**

கீழ்க்கண்ட பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கலாம்.

மாதம் ஒரு முறை : இரத்த சர்க்கரை பரிசோதனை

வருடம் ஒரு முறை :

1. சிறுநீரகப் பாதிப்பை அறிய Urea Creatinin
2. இருதய பாதிப்பு பற்றி அறிய
   - ECG
   - Total கொலஸ்டிரால்
   - HDL கொலஸ்டிரால்
   - LDL கொலஸ்டிரால்
   - TGL கொலஸ்டிரால்

**இரத்த ஓட்டம் பற்றி அறிய :**

டாப்ளர் ஸ்டடி

**X-Ray Chest (மார்பு படம்), (தொற்று நோய்கள்,TB)**

போன்ற பரிசோதனைகளோடு கூடிய மருத்துவ ஆலோசனைகளை முறையாக மேற்கொண்டால் சர்க்கரை நோயற்ற சாதாரண மனிதனைப் போல் வாழ்ந்து காட்டலாம்.

**நோய்க்கான சிகிச்சை முறைகள் என்ன?**

1. வாழ்க்கை முறை மாற்றங்கள் அடங்கிய – மருந்தில்லா சிகிச்சை (Non - Drug Therapy) - 75%
2. உடல் உறுப்புகளை காப்பதற்கும், நோயின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் மருந்துகள் அடங்கிய சிகிச்சை (Drug - Therapy) - 25%

**1. வாழ்க்கை முறை மாற்றங்கள் அடங்கிய மருந்தில்லா சிகிச்சை (Non - Drug Therapy)**

சிகிச்சை முறையில் 75% இதில் அடங்கும்.

**மருந்தில்லா சிகிச்சை (Non - Drug Therapy)**

1. Patient education for Life Style Modification (L.S.M.) – நோயைப் பற்றி நோயாளி அறிய வேண்டிய கல்வி – விளக்கவுரை – (வாழ்க்கை முறை மாற்றங்கள்) பயிற்சி
2. உணவு முறை
3. எளிய முறை உடற்பயிற்சி
4. எளிய முறை யோகாசனப் பயிற்சி
5. தியானப் பயிற்சி (Meditation) (Shaj Yoga Meditation)

**உடல் உறுப்புகளைப் பாதுகாக்க நோயின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் அடங்கிய மருத்துவ சிகிச்சை (Drug - Therapy) :**

சிகிச்சையில் 25% தான் இதில் அடங்கும்.

**சர்க்கரை நோய் வராமல் தடுக்க முடியுமா?**

**சர்க்கரை நோய் தடுப்பு முறைகள்**

I. முதல் கட்ட தடுப்பு (பருவம் 1 மற்றும் 2க்கு பொருந்தும்) (நோய் வராமல்தடுக்க)

II. இரண்டாம் கட்ட தடுப்பு (பருவம் 3 மற்றும் 4 க்கு பொருந்தும்) (நோய் வந்த பின் தப்பிக்க)

III. மூன்றாம் கட்ட தடுப்பு (பருவம் 5க்கு பொருந்தும்) (பாதிப்புக்கள் வந்த பின் வாழ்நாட்களை நீட்டிக்க)

**முதல் கட்ட தடுப்பு (பருவம்1 & 2 பொருந்தும்)**

1. குழந்தைப் பருவம் முதல் நோய்க்கான வாழ்க்கை முறை மாற்றங்கள் (L.S.M.) அறிவுரை (உணவு, உடற்பயிற்சி, தியானப் பயிற்சி)
2. 20,25 வயதில் வருடம் ஒரு முறை இரத்த G.T.T பரிசோதனை மூலம் பின்னால் வரும் நோயை சில வருடங்கள் முன்னே கணித்து தீவிர தடுப்பு முறைகள்
3. உணவு, உடற்பயிற்சி, மனவளப்பயிற்சி மற்றும் சில மருந்து, மாத்திரைகள்

**தடுப்பு முறைகளை எப்போது தொடங்குவது?**

- சர்க்கரை நோய் கருவிலேயே தொடங்குகிறது.
- அதனால் தடுப்பு முறைகளும் கருத்தரிப்புக்கு முன்னரே தொடங்க வேண்டும்.

முதல் கட்ட தடுப்புகளை முறையாக மேற்கொண்டால் சர்க்கரை நோய் குடும்பத்தில் உள்ளவர்கள் பருவம் 1,2 க்கு மேல் தாண்டாமல் நோய் வெளிப்படாமல் தடுக்கலாம், தப்பிக்கலாம்.

**இரண்டாம் கட்ட தடுப்பு**
**(பருவம் 3 & 4 க்கு பொருந்தும்)**

1. நோய் வந்தபின் வாழ்க்கை முறை மாற்றங்கள் (Life Style Modification)
2. சர்க்கரையைக் குறைக்கும் மருந்து மாத்திரை, மாதம் ஒருமுறை மருத்துவரிடம் இரத்தப் பரிசோதனைகள் & ஆலோசனை, சர்க்கரை கட்டுப்பாட்டில் வந்த பிறகு 3 மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனை, ஆலோசனைகள்.

**வருடம் ஒரு முறை**

- ECG – இருதய பாதிப்பு பற்றி அறிய
- Xray – நுரையீரல் பாதிப்பு பற்றி அறிய
- Lipid Profile – ஹார்ட் அட்டாக்கை உருவாக்கும் கொழுப்புச் சத்து பற்றி அறிந்து தடுக்க
- Rental function– சிறுநீரக பாதிப்பு பற்றி அறிய
- Foot care advice – பாதம் பாதுகாப்பு பற்றி அறிய
- Eye care & fundus examination – கண் பாதிப்பு பற்றி அறிய

**தொடர் கண்காணிப்பு, பரிசோதனைகள்**

- நோயைப் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள்.
- தொடர் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகள்
- மருத்துவர் ஆசிரியராக வேண்டும். நோயாளி மருத்துவம் பயிலும் மாணவராக வேண்டும்.
- தொடர் உடற்பயிற்சி
- தொடர் உணவு முறை மாற்றம்.



**மூன்றாம் கட்ட தடுப்பு :**
**(இது பருவம் 5க்கு பொருந்தும்)**

1. தொடர் பரிசோதனை, தொடர் சிகிச்சை, அடிக்கடி மருத்துவமனையில், பல ஆயிரங்கள் செலவு செய்து உள்நோயாளிகளாக சிகிச்சை பெற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள்.
2. மன உளைச்சலுடன் காசைக் கரைக்கும் கிட்னி பெயிலியர், சிறுநீரக மாற்று சிகிச்சையிலிருந்து, உயிரை குடிக்கும் ஹார்ட் அட்டாக்கிலிருந்தும், நடைமுறை வாழ்க்கையை முடக்கும் பக்கவாத நோயிலிருந்தும், பார்வை இழந்து குருடாக்கும் கண் பார்வை பாதிப்பிலிருந்தும், தப்பித்து நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம். காசைக் கரைத்து வாழ்நாட்களை நீட்டலாம்.

"தன்னுடைய சர்க்கரை நோய் வளர்ச்சி பற்றி முழுமையாக தெரிந்து கொண்டு, மருத்துவ ஆலோசனைகளைக் கடைபிடிக்கும் நோயாளிக்கு நீண்ட ஆயுள் உறுதி"

*– சர்க்கரை நோய் மருத்துவத்தின் தந்தை*
*டாக்டர். ஜோஸ்லின்*

❖ ❖ ❖

# திராட்சை சாகுபடியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர்



தேனி மாவட்டத்தில் துவக்கப்பட்ட மொத்தம் 2,956 சுயஉதவிக் குழுக்களில் 251 குழுக்களில் ஆதிதிராவிடர்கள் மட்டும் உறுப்பினர்களாக உள்ளனர். ஆதிதிராவிட மகளிர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பான முயற்சியால் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது மட்டுமின்றி, பல தொழில்கள் மூலம் நல்ல வருவாயையும் ஈட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் கம்பம் அருகே சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள நாராயணத்தேவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மகளிர் சுயஉதவிக் குழுவினர் 12 பேர் சேர்ந்து இதுவரை யாரும் ஈடுபடாத முயற்சியில் இறங்கியுள்ளனர். திராட்சை தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து திராட்சை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் முன்பு வேலை செய்த அதே திராட்சைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து நேரடியாக திராட்சை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மூன்று போகம் பயன்தரக்கூடிய இத்தொழிலில் ஆண்டு வருமானமாக செலவு போக மீதம் ரூபாய் ஒரு இலட்சம் வரை லாபம் கிடைக்கும்.

இத்தொழில் நல்ல முறையில், வருவாய் ஈட்டித்தரவுள்ளதால் முதலில் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்த ரூ:1.25 இலட்சம் கடனை அடைக்க முடிவு எடுத்தனர். அதன் பின்னர் மீதமுள்ள தொகையை சேமித்து மேலும் திராட்சை தோட்டங்களை குத்தகைக்கு எடுக்கும் எண்ணத்தில் உள்ளனர். அம்மகளிர் சுயஉதவிக் குழுவினரை நேரில் சந்தித்தபோது சில சுவையான தகவல்களைத் தெரிவித்தனர். அப்போது அவர்கள், “நாங்கள் பாரத மாதா பல்நோக்கு மகளிர் மேம்பாட்டுக் குழு''என்ற பெயரில் 12 பேர் சேர்ந்து மகளிர் சுயஉதவிக் குழுவை ஆரம்பித்தோம். குழு உறுப்பினர்கள் மாதந்தோறும் ரூ.50 சந்தா வசூல் செய்து, அந்தப் பணத்தை நாராயணத்தேவன்பட்டி

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கணக்குத் தொடங்கி சேமித்து வைத்தும், அப்பணத்தை எங்களுக்குள் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தோம். இதுவரை சேமிப்புப் பணம், வட்டி வசூல் செய்தது மற்றும் மாத சந்தாத் தொகை உட்பட மொத்தம் ரூபாய் ஒரு இலட்சம் உள்ளது. தமிழக அரசின் உதவியுடன் கம்பம் வங்கியிலிருந்து சுழற்சி நிதி கிடைத்தது. அந்த நிதியை முறையாகத் திரும்ப செலுத்தியதால் வங்கி யிலிருந்து மேலும் சுயதொழில் தொடங்குவதற்குக் கடனுதவி அளிப்பதாகவும் தெரிவித்தனர். அதையடுத்து எங்களுக்கு தெரிந்த ஆடு, மாடுகள் வளர்த்தல் போன்றவற்றை செய்ய இயலாத காரணங்களால் ஏற்கெனவே பழக்கமானதும் அனுபவம் வாய்ந்த தொழிலுமான திராட்சை சாகுபடி செய்வதற்கு விருப்பம் தெரிவித்ததன் பேரில் தேனி மாவட்ட நிருவாகம் நடவடிக்கை மேற்கொண்டு, வங்கியிலிருந்து ரூ.2.50 இலட்சம் மானியத்துடன் கடனுதவி பெற்று திராட்சை சாகுபடி தொழிலில் ஈடுபட்டோம்.

தற்போது ஒரு போகம் திராட்சை சாகுபடி முடிந்து நல்ல முறையில் பிஞ்சுகள் விட்டுள்ளது. இதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். இந்தப் பலனைக் கொண்டு எங்கள் வாழ்க்கைத்தரம் உயர்வதுடன், வாழ்வு வளம் பெறும் என்று உறுதியாக நம்புகிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியால் இன்று பெண்கள் சமுதாயம் தலை நிமிர்ந்து நடைபோடுவதுடன், நல்ல எதிர்காலமும் தென்படுகிறது என்று கூறினார்கள்.

நாராயணத்தேவன்பட்டி மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றவர்களுக்கும் முன் உதாரணமாகத் திகழ்வதுடன், தேனி மாவட்டத்தையும் மகளிர் சுய உதவிக் குழுவின் நடவடிக்கையால் வீறுநடைபோட செய்துள்ளனர் என்றால் மிகையாகாது.

தேனி மாவட்டத்தில் தொழிற்கடன் பெற்ற குழுக்களால் உற்பத்தி சார்ந்த தொழில்களான இலவம் பஞ்சு மூலம் மெத்தை, தலையணை தயாரித்தல், நோட்டுக் தயாரித்தல், தென்னை நார் மூலம் கயிறு திரித்தல், செருப்பு தயாரித்தல், ஆயத்த ஆடை தயாரித்தல், மெழுகுவர்த்தி, சலவைத்தூள், கிளீனிங் பவுடர், பினாயில், சொட்டு நீலம் தயாரித்தல், கறவை மாடுகள் மூலம் பால் உற்பத்தி போன்றவை மேற்கொள்ளப்படுகிறது.

உடல் ஊனமுற்றோர் அல்லாது அவரது குடும்பத்தைச் சார்ந்த பெண்களைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் அமைக்கவும் ஓரிருவர் மட்டும் இருக்கும் பகுதிகளில் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் குழுக்களில் சேர்க்க தொண்டு நிறுவனங்கள் மூலம் நடவடிக்கைகள் முனைப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை 187 உடல் ஊனமுற்ற மகளிர், சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். துப்புரவுத் தொழிலாளர்கள் அவர்தம் குடும்பத்தில் அவரைச் சார்ந்தவர், அவர்தம் வழி வந்தவர்கள் ஆகியோரைக் கொண்டு ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் பேரூராட்சி, நகராட்சி பகுதிகளிலும் ஒரு குழு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

தேனி மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் மூலம் ஆறு நியாய விலைக்கடைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சுயஉதவிக் குழு உறுப்பினர் களான 4,000 பெண்களுக்கு சிறு தொழில் செய்ய கடன் தலா ரூ.2,000 வீதம் ரூ.80 இலட்சமும் சிறுகடன் வழங்கும் திட்டம் மற்றும் இதே பிரிவில் தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற 150 மகளிருக்கு சிறுதொழில் புரிய ரூ.10,000 வீதம் ரூ.15 இலட்சம் கடனுதவி அளிக்கும் திட்டம் தேனி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. கள்ளச் சாராயம் காய்ச்சி திருந்தியோர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 45 பேருக்கு பால் உற்பத்தி பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர மாவட்ட நிருவாகம் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் மற்ற மாவட்டங்களுக்கும் தேனி மாவட்டம் முன் உதாரணமாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றது.

**– உல. ரவீந்திரன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி

* * *

# குமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர அரசின் திட்டப்பணிகள்

ஆதிமனிதனின் வாழ்க்கை வனப்பகுதியில் தான் ஆரம்பமானது என்பது வரலாறு. நாகரிகம் வளர வளர வியக்கவைக்கும் அறிவியல் புரட்சியால் மின்சாரம், தொலைக்காட்சி என வாழ்வின் தேவைகள் பெருகின. ஆனால் கலாச்சார வளர்ச்சி அடிப்படை வசதிகள் இன்றி, இயற்கையோடு ஒன்றி வாழும் மலைவாழ் மக்கள் இன்றும் காடுகளில்தான் வசித்து வருகின்றனர்.

மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு கூடாது. கிராமங்கள் மற்றும் வனப்பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கும், நகர்ப்பகுதியில் உள்ள அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும் என ஆணையிட்டு பழங்குடியின மக்கள் வாழும் பகுதியில் பல்வேறு திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் அடிப்படை வசதிகள், பொருளாதார முன்னேற்றத்திற்கு வங்கிகள் மூலம் கடனுதவி, சிறுதொழில் தொடங்க தொழில் முனைவோர் பயிற்சி என எண்ணற்ற மலைவாழ் மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மக்களின் வீடுகளில் ஒளியேற்றும் பணிகளுக்காக ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

மலைவாழ் மக்கள் நலனில் தனி அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் குறித்த விவரங்களை கண்டறிய 13 குழுக்கள் அமைக்கப்பட்டு, வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தி விவரங்கள் சேகரிக்கப்பட்டது. பழங்குடியினர் 61 குடியிருப்புகளில் 1,328 குடும்பங்கள் வாழ்வதாக கணக்கிடப்பட்டு அவர்களின் சாதிச் சான்றிதழ் கோரிய 1,295 குடும்பங்களுக்கு குடும்பத்தலைவர் பெயரில் சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 278 குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 492 நபர்களுக்கு அடையாள அட்டையும், 11 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. அடுத்த கட்ட நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அதிகாரிகள் காணி குடியிருப்புகளுக்குச் சென்று குறைகேட்டு தீர்வு காணும்





*சப்போங்குபாறை காணி குடியிருப்பில் சூரிய ஒளி விளக்கு வசதி*

குடியிருப்புகளுக்கு சூரிய ஒளிவிளக்கு வசதி அமைத்து கொடுக்க வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டு ரூ.2.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதனடிப்படையில் வனத்துறை மற்றும் அரசு ரப்பர் கழக அனுமதியுடனும், ஒத்துழைப்புடனும் மின்வசதி செய்ய வாய்ப்பு உள்ள குடியிருப்புகளான மணலிக்காடு, மோதிரமலை, ஆண்டிப்பொற்றை, கீரிப்பாறை, கடையால், தோலடி, புரத்திமலை, செறு அடத்துக்காணி, மல்லன் முத்தன் கரை ஆகிய பகுதிகளில் மின்வசதி செய்யும் சாத்தியக் கூறுகள் குறித்த ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மின்வசதி செய்ய இயலாத 39 காணி குடியிருப்புகளைச் சார்ந்த சுமார் 1,000 வீடுகளுக்கு தலா இரண்டு சூரிய ஒளி விளக்கு வசதி செய்யவும், சுமார் 500 தெருவிளக்குகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டு முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலைவாழ் மக்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது மட்டுமன்றி, பொருளாதார வசதியை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனப்பகுதியில் தேன் வார்த்தல், உயர்ந்த ரக ரப்பர் பயிரிடுதல், பிரம்புக்கூடை போன்ற பொருட்கள் செய்தல் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளித்து வங்கிகள் மூலம் கடன் வழங்கி பொருளாதாரத்தை மேம்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் பயிரிடும் பயிர்களை காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாக்க தடுப்பு வேலி அமைக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறினார்.

பின்னர் கோர்வைக் குழிமலைப்பகுதி குடியிருப்புக்கு சென்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோர்வை குழிமலையில் 21 நபர்களுக்கும், மணலிக்காட்டில் 26 நபர்களுக்கும், கொடுத்துறையில் 89 நபர்களுக்கும், மாங்காமலையில் 38 நபர்களுக்கும், விளாமலையில் 3 நபர்களுக்கும் மோதிரமலையில் 16 நபர்களுக்கும் மொத்தம் 177 பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்றிதழ்களை கோர்வைகுழிமலை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியும், தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பேச்சிப்பாறை மற்றும் கடையால் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வனப்பகுதிகளில் 25 காணி பழங்குடியின மக்கள் வாழும் குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் முதற்கட்டமாக நடனபொற்றை, களப்பாறை, சப்போங்குபாறை ஆகிய குடியிருப்புகளில் சூரிய ஒளிவிளக்கு அமைக்கும் பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்பட்டது.

சூரிய ஒளிவிளக்கு வசதி செய்யப்பட்ட சப்போங்குபாறை குடியிருப்புப் பகுதிக்கு சுமார் 1½ கி.மீ. தூரம் வனப்பகுதிக்குள் அதிகாரிகளுடன் நடந்து சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., அவர்கள் சூரிய ஒளி விளக்குகளை பார்வையிட்டதோடு, மக்களின் குறைகளை வீடு வீடாகச் சென்று கேட்டறிந்த பின்னர் தெரிவித்ததாவது. :–

"இயற்கையோடு ஒன்றி ஏழ்மை நிலையில் வாழும் பழங்குடியின மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருவது அனைவரின் கடமையாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பழங்குடியின மக்களின் மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தி திட்டப் பணிகளை நிறைவேற்ற அறிவுரை வழங்கியுள்ளார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மின்வசதி செய்ய இயலாத சப்போங்குபாறையில் 11 வீடுகளுக்கும், நடனபொற்றையில் 5 வீடுகளுக்கும், களப்பாறையில் 29 வீடுகளுக்கும் தலா 1 சூரிய ஒளிவிளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

அனைத்து பழங்குடியினக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்து தரவேண்டும் எனவும் வாய்ப்பில்லாத

- கு. தானப்பா

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்

கன்னியாகுமரி மாவட்டம்

* * *

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

9 மாத சந்தா செலுத்துவீர்!

# 10 வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**



| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆: 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆: 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆: 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆: 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆: 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆: 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆: 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆: 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆: 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆: 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518




